# உதயன்

சுடர் 31 கதிர் 022 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 02, வெள்ளிக்கிழமை 18.12.2015



நீரோகா

இன்றைய சுப்பர் பரிசு

ரூ.2,789,217.50


## உள்ளூராட்சிச் சபைகளின் ஊழலை கண்டறியப் 'பறக்கும் படை' தேவை

### மாகாண சபையில் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம்,டிசெ.18

உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறும் ஊழல்களைக் கண்டறிவதற்கு முன்னைய காலங்களில் காணப்பட்டதைப் போன்று 'பறக்கும் படை' தேவை என ஆளுங்கட்சி உறுப்பினர் வ.சிவயோகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் 9 ஆயிரத்து 891 கிலோ மீற்றர் வீதிகள் உள்ளன. இதனை 100 மில்லியனில் மாத்திரம் புனரமைப்புச் செய்ய முடியாது. வேறு நிதி மூலங்களை நாம் தேடவேண்டும். பல உள்ளூராட்சி மன்றங்கள் வீதிகளைப் போடுவதுடன் சரி. அவற்றைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை.

மேலும் ஒவ்வொரு அமைச்சும் மாதாந்தம் தமது மீளாய்வுக் கூட்டங்களுக்கு உறுப்பினர்களை அழைக்கவேண்டும். முன்னைய காலங்களில், ஊழல்களைக் கண்டறிவதற்காகப் பறக்கும் படை என்று ஒன்று இருந்தது. அவர்கள் கொழும்பிலிருந்து அல்லது வேறு இடங்களிலிருந்து திடீர் திடீர் என்று வருவார்கள். சோதனை செய்வார்கள். அதேபோன்று பறக்கும் படை ஒன்றை மாகாணசபை உருவாக்க வேண்டும். இதனூடாகவே உள்ளூராட்சிமன்றங்களில் இடம்பெறும் ஊழல் - மோசடிகளைக் களைய பக். 23

# நல்லிணக்கத்துக்கு ரணில் தலைமையில் தனியான செயலகம்

## அமைச்சரவையில் தீர்மானம்

கொழும்பு, டிசெம்பர் 18

நல்லிணக்கப் பொறிமுறையை செயற்படுத்துவதற்காக உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பிரதமர் தலைமையில் செயலகமொன்றை நிறுவ அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்தச் செயலகமானது ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் தொடர்புகளைப் பேணுதல், நல்லிணக்கப் பொறிமுறையை ஸ்தாபிப்பதற்கான உறுதியான காலவரையறையுடன்கூடிய திட்டத்தை ஆரம்பித்தல் உள்ளிட்ட பல்வேறு பக். 23



"இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக் குழு உள்ளிட்ட தேசிய நிறுவனங்களுடனும், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் காரியாலயம் போன்ற சர்வதேச நிறுவனங்களுடனும் தொடர்புகளை"

முச்சந்தி முரளி



அப்ப நல்லிணக்கம் வரும் எண்டுறியளோ..

## சூளைமேடு கொலை வழக்கில் டக்ளஸுக்கு அழைப்பாணை

### பிறப்பித்தது சென்னை நீதிமன்று

யாழ்ப்பாணம், டிசெ. 18

சூளைமேடு கொலை வழக்கில், தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட 18 பேரையும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு சென்னை நீதிமன்று அழைப்பாணை அனுப்பியுள்ளது.

சென்னை சூளைமேட்டில் 1986 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சட்டத்தரணியான திருநாவுக்கரசு என்பவர் உயிரிழந்தார்.

இது தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா உட்பட 9 பேர் மீது சூளைமேடுப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். வழக்கின் விசாரணை பக். 23

## அரசை வீழ்த்துவதற்கு சதி செய்யவேண்டாம்

### நாட்டுக்காகக் கடமையைச் செய்யுங்கள் ஜனாதிபதி மைத்திரிபால அழைப்பு

கொழும்பு, டிசெ. 18

ஓர் அரசு பதவிக்குவந்த அடுத்த நாள் முதல் அந்த அரசை வீழ்த்துவதற்கு சதி நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு நாட்டுக்காகவும் நாட்டின் எதிர்காலத்திற்காகவும் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை எல்லோரும் அர்ப்பணிப்புடன் செய்ய முன்வரவேண்டும்.



இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட புதிய அரசுக்கு எல்லோரும் தமது பக். 23

## நிரந்தரத் தீர்வுக்கு இதுவே சந்தர்ப்பம்

### சபையில் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 18

கீரியும் பாம்பும்போல் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இன்று ஒன்றாகச் சங்கமித்து தேசிய அரசமைத்துள்ளன. இது தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குச் சிறந்த சந்தர்ப்பமாகும். எனவே, ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து தேசிய இனப்பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கக்கூடிய வகையில் நியாயமானதொரு அரசியல் தீர்வை வழங்கவேண்டும்.

இவ்வாறு சபையில் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீநேசன்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக சிறைச்சாலைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்து அரசு தமிழர் தரப்புக்கு பச்சைக்கொடி காட்ட வேண்டும் என்றும், இவ்வாறு தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டால் நாட்டின் அபிவிருத்திக்கு தமிழ் மக்கள் தங்களது முழுப்பங்களிப்பையும் தயக்கமின்றி வழங்குவார்கள் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பக். 23

## ஆட்சி மாற்றத்தினால் இலங்கை முன்னேற்றம்

### பான் கீ மூன் வரவேற்பு

நியூயோர்க், டிசெ.18



இலங்கையில் கடினமான சூழ்நிலைகளின் மத்தியிலும், சுமுகமான அதிகாரக் கைமாற்றமும் அரசியல் முன்னேற்றங்களும் ஏற்பட்டமை ஊக்கமளிப்பதாக உள்ளது என ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இன்னும் இரண்டு வாரங்களில் 2016 ஆம் ஆண்டு பிறக்கவுள்ள நிலையில், கடந்து பக். 23



பட்ஜெட்டுக்கு எதிராக அகில இலங்கை விவசாய அமைப்பினரின் ஏற்பாட்டில் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் கோவணத்துடன் வீதிகளில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர் விவசாயிகள். (த்)

## நீண்டநேரம் இடம்பெற்ற வடமாகாண சபை அமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.18

வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களில் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட நேற்றைய மூன்றாம் நாள் அமர்வு நீண்டநேரம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் பக். 23

## குரோதக் கருத்துக்களைத் தடுக்கும் சட்டவரைவை கைவிடுகிறது அரசு

கொழும்பு, டிசெ.18

குரோதத்தைத் தூண்டும் வகையில் கருத்து வெளியிடுவதைத் தடைசெய்யும் வகையில், நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட சட்டவரைவை விலக்கிக் கொள்வதாக அரசு அறிவித்துள்ளது.

இனவாதம், மதவாதத்தைத் தூண்டும் வகையில் குரோதக் கருத்துக்களை வெளியிடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அனுமதிக்கும் வகையில், குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வரும் சட்டவரைவை அரசு நாடாளுமன்றத் பக். 23




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முல்லை. தரிசு நிலக் காணிகளை பயிர் நிலமாக்க ரூ.105 மில்.தேவை

முல்லைத்தீவு, டிசெ.18

முல்லைத்தீவு மாவட்டத்தில் தரிசு நிலமாக உள்ள காணிகளை பயிர்ச் செய்கைக்கு உகந்ததாக மாற்றுவற்கு 105 மில்லியன் ரூபா தேவையாக உள்ளது என்று மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று மற்றும் வெலிஓயா ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 2010 ஆம் ஆண்டு 10 ஆயிரம் ஏக்கர் காணிகள் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்த முடியாது தரிசு நிலங்களாகக் காணப்பட்டன.

ஆனால் அவை சிறிது சிறிதாக துப்புரவு செய்யப்பட்டு 2015ஆம் ஆண்டு 5 ஆயிரம் ஏக்கர் காணி மட்டுமே தரிசு நிலமாக காணப்படுகின்றது. மிகுதி 5 ஆயிரம் ஏக்கரும் பயிர் செய்வதற்கு உகந்ததாக மாற்றப்பட்டு பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

தற்போது இருக்கும் இந்த 5 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலத்தை பயிர்ச் செய்கைக்கு உட்படுத்த உகந்த காணியாக மாற்றுவதற்கு 105 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது.

ஒரே தடவையில் இந்தக் காணிகளைத் துப்புரவு செய்வது கடினம் ஒரு ஏக்கர் தரிசு நிலக்காணியை பயிர்ச் செய்கைக்கு உகந்ததாக மாற்றுவதற்கு 21 ஆயிரம் ரூபா தேவைப்படுகின்றது.

குறித்த 5ஆயிரம் ஏக்கர் காணியையும் ஒரே தடவையில் துப்புரவு செய்ய முடியாது. ஆனால் அந்தக் காணிகள் சிறிது சிறிதாக துப்புரவு செய்யப்பட்டு இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக மாற்றி அமைக்கப்படும் என முல்லைத் தீவு மாவட்ட கமநலசேவைகள்திணைக் களத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-ரி7,21)

## இறுதிப் போரில் காயமடைந்த 14,000 பேரின் விவரங்கள் உண்டு

### ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

இறுதிப் போரின் போது காயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட 14 ஆயிரம் பேரின் விவரங்கள் ஆணைக்குழுவிடம் உள்ளது. காணாமற்போயுள்ளனர் என்று தேடப்படுபவர்கள் எவராவது அந்த விவரத்தில் இருந்தால் அவர்கள் கண்டுபிடிக்கப்படுவார்கள். - இவ்வாறு ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ் வெல் பரணகம தெரிவித்தார்.

சங்கானை பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காணாமல் போனவர்கள் தொடர்பிலான விசாரணையில், கணவனை தொலைத்த பெண் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இறுதிப் போரின் போது காயமடைந்த எனது கணவர் உட்பட பலர் இராணுவத்தினரால் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்களை இன்று வரை காணவில்லை என அந்தப் பெண் சாட்சியம் அளித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த ஆணைக் குழுவின் தலைவர் இறுதிப் போரின் போது காயடைந்த 14 ஆயிரம் பேரின் விவரங்கள் ஆணைக்குழுவிடம் உள்ளன. அவற்றை வைத்து காயமடைந்த உங்களது கணவருடைய பெயர் அதில் இருக்கின்றதா? எனப் பார்க்கலாம். அவ்வாறு காணாமற் போயினர் என்று ஆணைக் குழுவில் பதியப்பட்டவர்களுடைய பெயர்கள் குறித்து வைத்தியசாலை விவரத்தில் இருந்தால் அவர்கள் கட்டாயமாக கண்டு பிடிக்கப்படுவார்கள். - என்றார். (ற-ஐ-2)



தொடர்ச்சியாக பெய்த கடும்மழையால் பாதிப்படைந்த புதுக்குடியிருப்பு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்களுக்கான உலர் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்றது. நிகழ்வில் முல்லைமாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் உ.சுபசிங்க உணவுப் பொதிகளை வழங்கினார். (ற-ஐ)

## ஞாயிறு கடைகள் திறக்கும்

தென்மராட்சி, டிசெ.18

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட வணிக நிலையங்கள் எதிர்வரும் விசேட பண்டிகை தினங்களை முன்னிட்டு டிசெம்பர் மாதம் 20, 27 மற்றும் ஜனவரி மாதம் 3,10 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் வியாபாரத்துக்காக திறந்திருக்கும் என்று மன்றச் செயலாளர் இ.சுரேஷ் அறிவித்துள்ளார். (ற-ஐ-9)

## பாதுகாப்பான ரயில் கடவை கோரி கிளிநொச்சியில் இன்று போராட்டம்

கிளிநொச்சி, டிசெ.18

பாதுகாப்பான ரயில் கடவைகளை அமைக்குமாறு கோரி ஜனநாயகத்துக்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் இன்று அமைதி வழி போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது

இந்த அமைதி ஆர்ப்பாட்டம் முற்பகல் காலை 10 மணியளவில் கிளிநொச்சி புகையிரத நிலைய முன்றலில் ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்று அரச அதிபரிடம் கோரிக்கை மனு கையளிக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்கள், கிராமிய அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட ஜனநாயகத்துக்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பின் தலைவர் அ.சத்தியானந்தன் தெரிவித்தார்.

வடக்குக்கான புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 19 இறப்புக்கள் இடம்பெற்றுள்ளன. எனவே இனியும் ஒரு உயிரிழப்புக்கு இடம் கொடுக்காது பாதுகாக்கவே இந்த அமைதிவழிப் போராட்டம் என அவர் தெரிவித்தார். (ற-ஐ-ரி3)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் நோயாளர்கள் வருகை அதிகரிப்பு

சாவகச்சேரி, டிசெ.18

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சிக் கிழக்கு, பூநகரி உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான நோயாளர்கள் தினமும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருகின்றனர்.

தினமும் வெளிநோயாளர் பிரிவில் 800 தொடக்கம் 900 நோயாளர்கள் வரை சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். அத்துடன் விடுதிகளில் சிகிச்சை சேர்க்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையும் திடீரென அதிகரித்துள்ளது. தினமும் 50க்கும் மேற்பட்டோர் விடுதிகளில் சேர்க்கப்படுவதால் விடுதிகளில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டு விறாந்தைகளில் நோயாளர்கள் தங்க வைக்கப்படுகின்றனர்.

அண்மையில் பிரதேசத்தில் பெய்த மழை மற்றும் பெரு வெள்ளம் ஆகியவற்றினால் வயது வேறுபாடின்றி பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

தினமும் பெருமளவு நோயாளர்கள் விடுதிகளில் சேர்க்கப்படுவதால் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. (ற-ஐ-9)

## காத்தான்குடி நூதனசாலை மீண்டும் திறப்பு

காத்தான்குடி, டிசெ.18

மூடப்பட்டிருந்த காத்தான்குடி பூர்வீக நூதனசாலை மீண்டும் மக்கள் பார்வைக்காகத் திறக்கப்பட்டுள்ளது.

இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகத்தை, வரலாற்றைப் பிரதிபலிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட இந்த பூர்வீக நூதன சாலையில் சில உருவச் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை அகற்றுமாறு அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை ஆலோசனை விடுத்திருந்தது.

இதனடிப்படையில் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் இந்த நூதனசாலை மூடப்பட்டது. அங்கு வைக்கப்பட்டிருந்த உருவச்சிலைகள் தற்போது அங்கிருந்து அகற்றப்பட்ட பின்னர், மீண்டும் இந்த நூதனசாலை மக்கள் பார்வைக்காக திறக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-10)

## ரின்னரை தவறுதலாக அருந்திய இருவர் வைத்தியசாலையில்

தென்மராட்சி, டிசெ.18

சோடாப்போத்தலுக்குள் காணப்பட்ட பெற்றோல் மற்றும் ரின்னரைத் தவறுதலாக அருந்திய இருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கைதடிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சோடாப் போத்தலுக்குள் வைக்கப்பட்டிருந்த ரின்னரை 14 வயது பாடசாலை மாணவி அருந்தியுள்ளார்.

அதேவேளை மீசாலை கிழக்குப் பகுதியில் சோடாப் போத்தலுக்குள் காணப்பட்ட பெற்றோலை 22 வயது இளைஞர் அருந்தியுள்ளார். இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சோடாப் போத்தலின் உதவியுடன் உடைக்கப்பட்ட சோடாவைக் குடித்தபோது அதனுள் காணப்பட்ட உடைந்த போத்தல் துகள்களும் வயிற்றுக்குள் சென்ற நிலையில் இளைஞர் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாதிப்புக்கு உள்ளான வரணி, இயற்றாலையைச் சேர்ந்த இளைஞர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ற-ஐ-9)

## வழங்கப்பட்ட காணிகளில் குடியமராத குடும்பங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.18

வலி.மேற்குப் பிரதேச சபையால் அராலி ஊரத்தியில் உள்ள 30 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் இதுவரை 8 குடும்பங்கள் குடியமரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வலி.மேற்கு பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தலைமையில் சென்ற குழு மேற்கொண்ட விசாரணைகளின்போது இந்த விடயம் தெரியவந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர், சங்கானை மற்றும் அராலியில் உள்ள சபையின் காணிகளை காணியற்றவர்கள் என இனங்காணப்பட்ட சுகாதாரப் பணி மேற்கொள்ளும் சமூகங்களுக்கு காணி பங்கீட்டு உறுதிமூலம்சபை அனுமதியுடன் வழங்கியிருந்தார்.

அதில் சங்கானையில் 35 காணி உறுதிகளும், அராலியில் 30 காணி உறுதிகளுமாக 65 பேருக்கு காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு அராலியில் (ஊரத்தி) வழங்கப்பட்ட காணியில் நான்கு குடும்பங்கள் இதுவரை முறையாக வழங்கப்பட்ட உறுதி காணித் துண்டங்களில் குடியமராது வேறு காணிகளில் குடியமர்ந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து வலி.மேற்கு பிரதேச சபையால் வழங்கப்பட்ட காணிகளில் இதுவரை குடியிருக்காத 8 குடும்பங்களின் விவரங்களையும், பிரதேச சபையால் முறையாக வழங்கப்பட்ட காணிகளில் சட்டத்துக்கு முரணாக குடியேறியிருக்கும் 4 குடும்பங்களின் விவரங்களையும் முழுமையாக அறிக்கையிட்டு வழங்கும்படி கிராம அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-50)

## உள்ளூராட்சி ஊழியர் பிரச்சினை குறித்து கோரிக்கை முன்வைப்பு

அம்பாறை, டிசெ.18

வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் அட்டவணைப்படுத்தப்படாத சேவை சார்ந்த ஊழியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாண சபையிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரனுடன் இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக அரச நிர்வாக சுற்று நிருபத்துக்கு அமைவாக சீருடைக் கொடுப்பனவு 4 ஆயிரம் ரூபாவை ஊழியர்களுக்கு இதுவரை வழங்காத உள்ளூராட்சி சபைகள் அதனை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ற-ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு விவசாய அமைச்சின் அடுத்த ஆண்டுத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 18

வடக்கு மாகாண அரசின் வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று விவசாய அமைச்சு மீதான விவாதம், காலையில் இடம்பெற்றது. இதில் விவசாய அமைச்சு அடுத்த ஆண்டுக்குச் சமர்ப்பித்துள்ள திட்டங்கள் ஒரே பார்வையில்,

**நிதி ஒதுக்கீடு**

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடையாக ஆணைக்குழுவிடம் ஆயிரத்து 172 மில்லியன் கோரப்பட்டது. வழங்கப்பட்டது 410 மில்லியன். பிரமாண அடிப்படை நன்கொடை நிதியாக 26.5 மில்லியன். தனியார் காற்று மின் ஆலை மூலமாக 30 மில்லியன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**விவசாயம்**

நெல் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கோடு செய்கைப் பரப்பளவை அதிகரிக்கவும், கூடுதல் அறுவடையைத் தரக்கூடிய நெல்லினங்களையும் உவரைத் தாங்கக்கூடிய நெல் இனங்களையும் அதிகளவில் பயிரிடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. 'பிஸ்கற்' போன்ற வெதுப்பக உற்பத்திகளை மேற்கொள்வதற்கென யுவ 309 என்ற புதிய நெல் இனம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கோடு சோளச் செய்கை ஊக்குவிக்கப்படவுள்ளது.

விவசாய இரசாயனங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் கருத்திற்கொண்டு சேதன விவசாயம் ஊக்குவிக்கப்படவுள்ளது. பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடும், இரசாயனங்களின் பிரயோகம் இல்லாத பாதுகாப்பான உணவை வழங்கும் நோக்கோடும் காளான் செய்கை விரிவுபடுத்தப்படவுள்ளது.

மாம்பழ ஏற்றுமதி வர்த்தகத்தைக் கருத்திற்கொண்டு அடர்பயிர்ச் செய்கை என்னும் புதிய முறையில் மாமரப் பண்ணைகள் உருவாக்கப்பட உள்ளன.

**நீர்ப்பாசனம்**

எமது நீர்ப்பாசனத் திணைக்களம் இரணை மடுக்குளம், முத்தையன்கட்டுக்குளம், ஆகியவற்றின் புனரமைப்பிலும் தொண்டமானாறு உவர்நீர்த் தடுப்பணையைப் புனரமைப்பதிலுமே கூடுதல் கவனம் செலுத்த உள்ளது. இந்தத் திட்டங்கள் மிகப் பெரிய திட்டங்கள் என்பதாலும் குளப்புனரமைப்புக் காலங்களில் விவசாயிகள் பயிர் செய்ய முடியாது என்பதால் புனரமைப்புப் பணிகளை விரைந்து நிறை வேற்றவேண்டி இருப்பதாலும் நீர்ப்பாசனத் திணைக்களம் இம்மூன்று திட்டங் களின் மீதுமே அதிகூடிய கவனத்தைச் செலுத்த உள்ளது.

**கால்நடை**

பால் உற்பத்தியை அதிகரிக்கவும், வவுனியாவில் இயங்காது இருக்கும் நவீன பால் பதனிடும் நிலையத்தை இயங்கவைப்பதற்கும், கூட்டுறவு அமைப்புக்களினதும் தனியார் முதலீட்டினதும் இணைந்த பங்களிப்பாக வடக்குக்கான பால் விநியோக வலையமைப்பு ஒன்றை ஒரு பொதுவான பெயரில் உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

**பனை வளம்**

நலிவடைந்திருக்கும் பனைசார் தொழில்களை வலுப்படுத்துவதற்கான திட்டங்களில் ஒன்றாகப் பதநீர் உற்பத்தியும் விற்பனையும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

தொழில் முயற்சிகளின்போது பனையில் இருந்து தவறி வீழ்ந்து மரணமானவர்களின் குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா உதவித் தொகையாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாணசபை தோற்றம் பெற்ற 2013 ஆம் ஆண்டில் இருந்து இத்திட்டம் கருத்தில் எடுக்கப்படும்.

**கொள்கைத் திட்டம்**

எமது இயற்கைச் சூழல் சார்ந்தும், அதையொட்டி நாம் மேற்கொள்ளும் விவசாயம் மற்றும் நீர்ப் பயன்பாடு சார்ந்தும் கொள்கைகளை வகுக்கவேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

இதன் அடிப்படையில் எதிர்வரும் மே மாதத்தில் எமது பல்கலைக்கழக ஆய்வாளர்களையும் சர்வதேச ஆய்வாளர்களையும் கூட்டி ஒரு ஆய்வு மாநாடொன்றை நடத்தி எமது பிரதேசத்துக்கான கொள்கை வரைவு முன்னெடுக்கப்பட உள்ளது. (த-5-ரி5)

# ஏனைய மாகாணங்களை விட வடக்கில் அதிக அரச ஊழியர்

## மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.18

ஏனைய மாகாணங்களை விட வடக்கில் தான் அதிக அரச ஊழியர்கள் இருக்கின்றனர். 38 பேருக்கு ஒரு அரச ஊழியர் என்ற அடிப்படை வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்றது. ஏனைய மாகாணங்களில் 52 பேருக்கு ஒரு அரச ஊழியர் என்ற நிலையே காணப்படுகின்றது. எனவே இருக்கின்ற ஆளணியைச் சரியாகப் பயன்படுத்தி செயற்படுத்தவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் வரவு–செலவுத் திட்டத்தில் முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

முதலமைச்சரின் அமைச்சின் கீழ் பல்வேறு துறைகள் காணப்படுகின்றன. அவற்றில் சில துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை. மாகாண மட்ட திட்டமிடல் அவசியம்.

மாகாண சபையை விடப் பல மான–நிதிகூடிய அமைப்புக்கள், உள்ளூராட்சி மன்றங்கள். அவை இன்று செயலற்றுப் போயிருக்கின்றன. உள்ளூராட்சிச் சபைகள் சரியாக நெறிப்படுத்தப்படவில்லை. கழிவகற்றல் மற்றும் வடிகாலமைப்பு செயற்பாடுகளில் சீரிய தன்மையில்லாத காரணத்தால். யாழில் குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன.

முன்னைய அரசையும், மாநகர சபையின் முன்னைய ஆட்சியையும் விமர்சித்துக் கொண்டிருந்து பிரயோசனமில்லை. உங்களிடம் அதிகாரம் வந்து 2 வருடங்கள் ஆகின்றன. இந்தச் சின்ன விடயத்தையே நீங்கள் இன்னும் செய்து முடிக்கவில்லை- என்றார். (த-ஐ-5-ரி5)

**பதவி வெற்றிடம்**

**யாழ்ப்பாணத்தில் புதிதாக திறக்கப்படும் காட்சியறை ஒன்றிற்கு**

காட்சியறை முகாமையாளர்
கணக்காளர் (Ms Excel)
} பெண்கள் மட்டும்

தகைமைகள் :- நல்ல ஆளுமைத்திறன் உடையவராகவும், ஆங்கிலம் எழுத, வாசிக்கத் தெரிந்தவராகவும், 29 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

077 97 85 717, 021 222 2955
No.8B, 1st Floor, Cargills Square, Jaffna.
(68015)

# கஞ்சா கொள்வனவு செய்வதற்கு அ.புரத்திலிருந்து வந்தவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 18

கஞ்சா போதைப்பொருள் கொள்வனவு செய்வதற்கு வந்த குற்றச்சாட்டில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான காசோலையுடன் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் கஞ்சா விற்றதாக எவரும் கைதாகவில்லை.

இளவாலையில் நேற்றுமுன்தினம் அவர் கைது செய்யப்பட்டார்.

அநுராதபுரத்தைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தவர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கஞ்சா கொள்வனவு செய்யும் நோக்கில் அவர் இளவாலைப் பகுதிக்கு வந்து ஒருவரிடம் கஞ்சா கேட்டுள்ளார் என்றும், இந்தத் தகவல் பொலிசாருக்கு எட்டியதால் அவர் கைதானார் என்றும் கூறப்பட்டது. (த-4)

# மீளவும் சமுர்த்தியாக மாறுகிறது திவிநெகும

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ.18

திவிநெகும அபிவிருத்தித்திணைக்களத்தை சமுர்த்தி திணைக்களமாக மாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதன்பிரகாரம் விரைவில் சமுர்த்தித் திணைக்களத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, மலையக அபிவிருத்தி அதிகாரசபை, தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை மலையக கிராமிய புனர்வாழ்வுத் திணைக்களம் மற்றும் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம் ஆகியன இணைக்கப்பட்டு கடந்த 2013 ஆம் ஆண்டு திவிநெகும அபிவிருத்தித் திணைக்களமாக மாற்றப்பட்டது.

இந்தத் திணைக்களம் திவிநெகும திட்டத்தில் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவினால் நிறுவப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திவிநெகும திட்டத்தில் பல்வேறு மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-வ)




# CHEMISTRY

## A/L 2016 மாதாந்த பரீட்சை - நவம்பர் 2015

NEW SCIENCE WORLD
Brown Road, Jaffna.

| Index No | Full Name | School | Marks | Rank |
|---|---|---|---|---|
| J/7470/M | S.சிவகசன் | J/K.H.C | 92 | 1 |
| J/7381/M | மயில்வாகனம் நிலக்சன் | J/J.H.C | 88 | 2 |
| J/7281/M | [illegible] | J/K.H.C | 88 | 2 |
| J/8373/B | [illegible] | J/C.V.C | 86 | 4 |
| | K.[illegible] | Kn/K.M.M.V | 86 | 4 |
| J/7363/M | Y.பிராசன் | J/V.H.C | 84 | 6 |
| | R.[illegible] | Kn/K.M.M.V | 82 | 7 |
| J/8042/B | [illegible] | J/K.H.C | 80 | 8 |
| J/7246/M | [illegible] | J/V.G.H.S | 80 | 8 |
| J/8195/B | [illegible] விஜயகுமார் | J/V.G.H.S | 80 | 8 |
| J/7065/M | [illegible] | J/K.H.C | 78 | 11 |
| J/8371/B | [illegible] | J/C.V.C | 78 | 11 |
| J/7127/M | [illegible] | J/J.H.C | 76 | 13 |
| J/8372/B | [illegible] | J/C.V.C | 76 | 13 |
| J/8182/B | [illegible] | J/S.H.C | 74 | 15 |
| | K.[illegible] | Kn/K.H.C | 74 | 15 |
| | S.[illegible] | Kn/K.M.M.V | 74 | 15 |
| J/8097/B | [illegible] விஜயகுமார் | J/V.G.H.S | 72 | 18 |
| J/8185/B | [illegible] | J/V.G.H.S | 72 | 18 |
| J/7014/M | Y.[illegible] | J/K.H.C | 70 | 20 |
| J/7117/M | A.[illegible] | J/C.S.C | 70 | 20 |
| Mu/8496/B | [illegible] | Mu/M.C.C | 70 | 20 |
| J/7056/M | [illegible] | J/J.H.L.C | 68 | 23 |
| J/7267/M | [illegible] | J/K.H.C | 68 | 24 |
| | K.[illegible] | Kn/V.C.C | 68 | 24 |
| | S.[illegible] | Kn/K.M.M.V | 68 | 24 |
| J/7322/M | [illegible] | J/K.H.C | 66 | 27 |
| J/8064/B | [illegible] | J/U.G.C | 66 | 27 |
| J/7061/M | [illegible] | J/V.G.H.S | 66 | 27 |
| J/7042/M | [illegible] | J/C.V.C | 66 | 27 |
| J/7555/M | [illegible] | J/C.V.C | 66 | 27 |
| J/8136/B | [illegible] | J/J.H.C | 64 | 32 |
| J/8510/B | [illegible] | J/J.H.C | 64 | 32 |
| J/7054/M | [illegible] | J/K.H.C | 64 | 32 |
| Mu/8153/B | [illegible] | Mu/P.C.C | 64 | 32 |
| J/7325/M | [illegible] | J/J.H.C | 62 | 36 |
| J/7326/M | [illegible] | J/J.H.C | 62 | 36 |
| | S.[illegible] | Kn/K.M.M.V | 62 | 36 |
| Am/8371/B | [illegible] | Am/C.F.C | 60 | 39 |
| J/7028/M | [illegible] | J/K.H.C | 60 | 39 |
| J/7201/M | P.[illegible] | J/C.S.C | 60 | 39 |
| J/8078/B | [illegible] | J/V.G.H.S | 60 | 39 |
| J/7057/M | [illegible] | J/J.H.C | 58 | 43 |
| J/7236/M | [illegible] | J/K.H.C | 58 | 43 |
| J/8487/B | [illegible] | J/K.H.C | 58 | 43 |
| J/8354/B | [illegible] | J/V.G.H.S | 58 | 43 |
| J/8189/B | [illegible] | J/V.G.H.S | 58 | 43 |
| | B.[illegible] | Kn/K.H.C | 58 | 43 |
| | A.[illegible] | Kn/K.M.M.V | 58 | 43 |
| J/7324/M | [illegible] | J/K.H.C | 56 | 50 |
| J/7331/M | [illegible] | J/K.H.C | 56 | 50 |
| J/7031/M | [illegible] | J/K.H.C | 56 | 50 |
| J/7365/M | [illegible] | J/S.P.C | 56 | 50 |
| | T.[illegible] | Kn/K.C.C | 56 | 50 |
| J/7327/M | [illegible] | J/J.H.C | 54 | [illegible] |
| J/8579/B | [illegible] | J/S.P.C | 54 | [illegible] |
| Mu/8240/B | [illegible] | Mu/Y.M.V | 54 | 55 |
| | S.[illegible] | Kn/K.M.M.V | 54 | 55 |
| J/7215/M | [illegible] | J/V.H.C | 52 | 59 |
| | N.[illegible] | Kn/K.M.M.V | 52 | 59 |
| J/8521/B | [illegible] | J/V.G.H.S | 50 | 61 |
| J/8294/B | [illegible] | J/C.V.C | 50 | 61 |
| Mu/8547/B | [illegible] | Mu/M.N.S | 50 | 61 |
| | N.[illegible] | Kn/K.M.M.V | 50 | 61 |
| | R.[illegible] | Kn/K.M.M.V | 50 | 61 |

By: K.T. Shivakumar B.Sc, PGDE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு இரணைமடுத் திட்டமே நிரந்தரத் தீர்வு

## *அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ 18

யாழ். குடாநாடு மற்றும் தீவகப் பகுதிகளின் குடிதண்ணீர்ப்பிரச்சினைக்கு இரணைமடு குடிதண்ணீர்த் திட்டமே நிரந்தரத் தீர்வாகும் என்று நேற்று சபையில் தெரிவித்த நகர அபிவிருத்தி மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம், வடக்கு மக்களின் பிரதிநிதிகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கினால் அந்த மக்களுக்கு மிகக் குறைந்தளவான செலவில் இரணைமடு பெரும் குடிதண்ணீர்த் திட்டத்தை நடைமுறைப் படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

மேற்படி மக்களுக்குக் கடல்நீரைச் சுத்திகரித்து குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றபோதும், அது பாவனையாளர்களுக்கு அதிக செலவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற நீர்வழங்கல் வடிகால் அமைப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்ட விடயங்களைக் குறிப்பிட்டார் அமைச்சர் ஹக்கீம்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கு-கிழக்கில் இப்போதைக்கு 8 இலட்சத்து 55 ஆயிரம் பேர் குழாய் ஊடாக நேரடியாக குடிதண்ணீரைப் பெறுகின்றனர். வடக்கு, கிழக்கில் மொத்த சனத்தொகையில் 31.8 சதவீத மக்களுக்கு குழாய்மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகிறது. யாழில் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் மிகக் குறைந்தளவிலேயே செயற்படுத்தப் படுகிறது. இது மிகவும் வருத்தத்திற்குரியது.

குழாய்கள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீரை விஸ்தரிக்க புதிய திட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றோம்.

யாழ். குடாநாடு மற்றும் தீவகப் பகுதிகளின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வாக நாம் ஏற்கனவே ஆலோசித்ததற்கமைய இரணைமடுக் குளத்திலிருந்து குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்பு விவசாயிகளின் எதிர்ப்புகளால் தடைப்பட்டிருக்கின்றது. இதனால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 250 மில்லியன் டொலர் பெறுமதியான கடன் திட்டத்தில் கடல்நீரை சுத்திகரித்து குடிதண்ணீர் வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படவிருக்கிறது.

இருந்தாலும் நிரந்தரமான செயற்றிட்டமாக இரணைமடுக் குளத்திலிருந்து நீரைப் பெற்றுக்கொள்வதுதான் எமது அமைச்சைப் பொறுத்தவரை மிகச் சிறப்பானதாக இருக்கும். இல்லாவிட்டால் குடிதண்ணீருக்கான செலவினம், பாவனையாளருக்கான செலவினம் மிகக் கூடியளவில் வந்துவிடலாம் என்ற ஆபத்து இருக்கின்றது.

இதனால் கடல்நீரை சுத்திகரித்து வழங்குவதில் இருக்கின்ற செலவினங்களை வைத்துப் பார்க்கும் போது வசதியாக, இயற்கையாக இரணைமடுக் குளத்திலிருந்து குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு வடக்கு மாகாணத்திலிருந்து இந்தச் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதிநிதிகள் எங்களுடைய அமைச்சுக்கு ஒத்தாசை வழங்கமுடியுமாக இருந்தால் யாழ். குடாநாட்டுக்கும் தீவகப் பகுதிக்கும்பாவனையாளர்களுக்குமிகக்குறைந்தளவிலான செலவில் பெரியளவான குடிதண்ணீர்த் திட்டத்தை எம்மால் நிச்சயமாக செயற்படுத்தக்கூடியதாக இருக்கும் - என்றார். (த-சி)


**கிருஷ்ணா அடகுசேவை**
பதிவு இல J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2014ஆம் ஆண்டு (31.11.2014 இற்கு) முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.01.2016 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2015ஆம் ஆண்டு 31.06.2015 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2016) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.01.2016 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உரிமையாளர் -
**A.S.Surendran**

இல.370,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 490 0311

இல.09,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5046

(f/15811)(11.15)



**பனை அபிவிருத்திச் சபை**
**வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2016**

பனை அபிவிருத்திச் சபையின் 2016 ஆம் ஆண்டுக்கு கீழ்க்குறிப்பிடப்படும் பொருள்கள் சேவைகளை விநியோகிப்பதற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000.00 செலுத்தி 2015.12.18 தொடக்கம் 2015.12.31 வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை ரூபா 1000.00 செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன் இணைத்து 2015.12.31 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2016" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர்,பனை அபிவிருத்திச் சபை,தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். மேற்படி முகவரியில் திங்கள் முதல் வெள்ளி வரையான கிழமை நாள்களில் காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை நேரடியாகவும் கையளிக்கலாம்.

**வழங்கல்கள், சேவைகள் விவரம்**

01. காகிதாதி, எழுதுபொருள்கள்
02. மர, உருக்கு, பிளாஸ்ரிக்,பைபர் கிளாஸ் தளபாடங்கள் வழங்கலும் திருத்தலும்.
03. இலத்திரனியல், மின்சாரப் பொருள்கள், உதிரிப் பாகங்கள் வழங்கலும், திருத்தலும் பராமரித்தலும்.
04. சுத்திகரிப்பு சேவை,சுத்திகரிப்பு பொருள்கள்
05. கட்டட நிர்மாணம், திருத்த வேலைகள் மற்றும் அதனோடிணைந்த வேலைகள், தீந்தை (பெயின்ற்) ஹாட்வெயர் பொருள்கள் வழங்குதல்
06. மோட்டார் வாகனங்கள் திருத்தம், பராமரிப்பு செய்தல்,ரயர், ரியூப், பற்றிகள், உதிரிப் பாகங்கள் வழங்கல் வாடகைக்கு உட்படுத்தல்
07. அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள்,திகதி முத்திரைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள், அடையாள அட்டைகள், டிஜிற்றல் பெயர்ப் பலகைகள் மற்றும் பதாகைகள் செய்தல்
08. குடிநீர், பால்மா, மென் பானம், உணவு வகைகள்
09. திரைச்சீலைகள்,சீருடைகள், மேசை விரிப்புகள், நில விரிப்புகள்
10. நீர் விநியோக பொருத்துக்கான பொருள்கள், நுகர்வுப் பொருள்கள் வழங்கலும், சேவையும்
11. மின் இணைப்பு வேலைகள், குழாய் பொருத்துதல்
12. ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள் வழங்கல்
13. பனைசார் கைப்பணி உற்பத்தித் தேவைகளுக்கான மூலப் பொருள்கள், உபகரணங்கள் வழங்கல்
14. பனம்தும்பு உற்பத்தி இயந்திர சாதனங்கள் வழங்கலும், சேவையும்
15. பனை சார் உணவு உற்பத்திக்கான இயந்திரங்களும், உபகரணங்களும் வழங்கல்
16. அலுவலக பகுதியாக்கல் வேலையும்,பகுதியாக்கல் வேலைக்கான பொருள்களும் சேவையும்
17. வாகன குசன் சீற் பொருள்களும்,சேவையும்
18. குளிர்சாதனப் பெட்டிகளும், குளிரூட்டிகள் பொருத்துதலும்
19. கணினிகள்,தொலைநகல் மற்றும் நிழற்பிரதி இயந்திரங்கள்
20. சபையின்,சுத்திகரிப்புச் சேவை (மலசலகூடம் மற்றும் சுற்றுப்புறம்)
21. உள்ளக தொலைபேசித் தொகுதி பராமரிப்பு
22. வாகன சுத்திகரிப்புச் சேவை
23. சபையின் பாதுகாப்புச் சேவை
24. வெல்டிங் வேலை தொடர்பிலான சேவை வழங்கல்

தலைவர்:
பனைஅபிவிருத்திச் சபை.

(c 25830) (13.15.17)



**வெற்றுப்பொருள் விற்பனை**

எமது சங்கத்தில் கீழ்க்காணும் விவரப்படியான வெற்றுப் பொருள்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. இதற்கான தங்களின் கூறுவிலை விவரத்தினை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

| தொடர் இல | விவரம் | அளவு |
|---|---|---|
| 01 | அரிசிப்பை 50 கிலோ கிராம் | 1426 தனி |
| 02 | மாவு பை 50 கிலோ கிராம் | 1714 தனி |
| 03 | சீனிப்பை 50 கிலோ கிராம் | 924 தனி |
| 04 | வேறு வகைப்பை | 1887 தனி |
| 05 | சாக்குப் பை | 155 தனி |

**மேற்படி விலைகளை சமர்ப்பிப்பதற்கான முடிவுதிகதி 2015.12.23**
**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**
**தலைவர்**
**யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்(வ-து)**
**இல. 127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**



**பேரவைச் செயலகம், வடமாகாணம்**
**மதிய உணவு விநியோக பெறுகைக்கான**
**அழைப்பு -2016**

1. மாகாண பேரவைச்செயலக பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமைவாய்ந்த உணவு விநியோகஸ்தர்களிடமிருந்து (சபை அமர்வுகள் மற்றும் குழுக் கூட்டங்களுக்காக) முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றார்.
2. விலைக்கேள்விதாரர் உணவு விநியோகஸ்திற்கான வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும். (Hotel தரம் வாய்ந்தவை விரும்பத்தக்கது)
3. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் 18.12.2015 தொடக்கம் 12.01.2016 வரையான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரையான அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் (021-2057081), பேரவைச் செயலகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. " **மதிய உணவு விநியோகம்-2016**" என்ற விவரம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல திருப்பியனுப்பப்படும்.
5. விலைக்கேள்விகள் 13.01.2016 ஆம் திகதி 14:00 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இச் செயலகத்தின் கணக்குக்கிளையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைக்கேள்விகள் அனைத்தும் 13.01.2016 ஆம் திகதி 14:00 மணிக்கு திறக்கப்படும்.
6. எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும்போது அனுமதிக்கப்படுவர்.
7. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**ம.ஜெகூ**
**தலைவர்**
**பேரவைச் செயலக பெறுகைகள் குழு,**
**வடக்குமாகாண சபை, A-9 வீதி, கைதடி,யாழ்ப்பாணம்.**

(சி.15819), (13.15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 62,269 விவசாயக் குடும்பங்களே தற்போது யாழ். குடா நாட்டில்

*மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ.18

குடாநாட்டில் உள்ள குடும்பங்களில் 62 ஆயிரத்து 269 குடும்பங்களே தற்போது விவசாயம், மற்றும் தோட்டச் செய்கையில் ஈடுபடுகின்றன என்று மாவட்டச் செயலகத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான மேம்பாட்டுத் திட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விவசாயத் தொழிலாளிகளாக 30 ஆயிரத்து 408 பேர் உள்ளனர். இவர்கள் விவசாயம் செய்ய குடாநாட்டில் மேட்டு நிலமாக 8 ஆயிரத்து 499 ஹெக்ரேயரும், வயல் நிலமாக 13 ஆயிரத்து 102 ஹெக்ரேயரும் உள்ளன.

இவர்களின் விவசாய நடவடிக்கைக்காக 15 விவசாய சேவை நிலையங்களும், 262 கமக்கார அமைப்புக்களும் உள்ளன. அத்துடன் 992 குளங்களும், கிணற்று நீர்ப்பாசனத்துக்காக 17 ஆயிரத்து 383விவசாயக் கிணறுகளும் உள்ளன என்று மாவட்டச் செயலகத்தின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-101)

# மலக் கழிவுகளைச் சுத்திகரிக்க சாவ. பிரதேச சபை நடவடிக்கை

*சுத்திகரிப்புக் கட்டடம் அமைக்க நடவடிக்கை*

சாவகச்சேரி,டிசெ.18

தென்மராட்சி பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் மலக்கழிவுகளைச் சுத்திகரிப்பதற்கான கட்டடம் சாவகச்சேரி நகரசபையால் தனங்களப்பு வீதியில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத்தில் 50 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட தொட்டி அமைக்கப்பட்டு தினமும் சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஏற்கனவே சாவகச்சேரி பிரதேச சபையால் மிருசுவிலில் நிர்மாணிக்கப்பட்ட சுத்திகரிப்பு நிலையத்தில் குறைந்த கொள்ளளவு கொண்ட தொட்டி அமைக்கப்பட்டதால் தினமும் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, இந்து கலாசார விவகார அமைச்சால் வழங்கப்பட்ட 90.48 மில்லியன் ரூபா செலவில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் சுத்திகரிப்புத் தொட்டிகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சி பிரதேசத்துக்கான தொட்டி சாவகச்சேரி நகரசபையின் தனங்களப்பு வீதியில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைகள் அடுத்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற-ஜ-9)

## பிரசவித்த சிசுவை கொலை செய்த பெண்

***கிளிநொச்சியில் சம்பவம்***

கிளிநொச்சி, டிசெ.18

பெண் ஒருவர் தான் பிரசவித்த சிசுவைப் பொலித்தீன் பையில் போட்டு வீட்டு அலுமாரியில் பூட்டி வைத்த சம்பவம் ஒன்று கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் நேற்று கிளிநொச்சிப் பொலிஸாரால் குறித்த சிசு சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளம் பெண்ணொருவர் நேற்று கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்றுள்ளார்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் குறித்த பெண், குழந்தை பிரசவித்த விடயம் தெரியவந்துள்ளது.

இதனால் குழந்தை தொடர்பில் மருத்துவர் விசாரித்த போது, அந்தப் பெண், சிசுவைக் கொலை செய்துவிட்டதாகப் பதிலளித்துள்ளார். இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு வைத்தியசாலை நிர்வாகத்தால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பெண்ணைக் கைது செய்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் அந்தப் பெண் பிரசவித்த சிசு, வீட்டு அலுமாரியில் பொலித்தீன் பையில் போடப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன் கைது செய்யப்பட்ட பெண், பொலிஸ் காவலில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, குறித்த பெண் திருமணமாகவில்லை என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள பொலிஸார், அதனாலேயே சிசு கொலைசெய்யப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளனர்.

(வ-21)

## போக்குவரத்து விதிமுறை மீறல் ரூ.54,500 அபராதம்

யாழ்ப்பாணம்,டிசெ.18

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய ஐவருக்கு 54 ஆயிரத்து 500 ரூபா அபராதம் கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிபத்திரம் இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய காலி தொடங்கொட பகுதியைச் சேர்ந்த நபருக்கு 15 ஆயிரம் ரூபாவும், ஆசனப்பட்டி இல்லாமல் வாகனம் செலுத்திய சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த நபருக்கு 2 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்தியதுடன் பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச் சென்ற யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.

அதே போன்று சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய வேலணை மற்றும் களபூமிப் பகுதியியைச் சேர்ந்த இருவருக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

(ஜ-107)

# உணவு தயாரிப்பில் சீர்கேடு ரூபா 33 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், டிசெ.18

சுகாதாரச் சீர்கேடான முறையில் உணவு தயாரித்த குறிகட்டுவான் பகுதியைச் சேர்ந்த உணவக உரிமையாளருக்கு 33 ஆயிரம் ரூபா அபராதம் கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தாக்கல் செய்த வழக்கு மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அவருக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

மேலங்கி இல்லாமை, நகம்வெட்டாமை, உணவுகள் மாசுபடும் வகையில் தயாரித்தமை, உணவுகளுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் அசுத்தப் பொருள்களைக் கையாண்டு உணவு தயாரித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

வழக்கை விசாரணை செய்த நீதிவான், உரிமையாளரைக் கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன், இனிவரும் காலங்களில் இவ்வாறு நடந்து கொண்டால் உணவு விற்பனை செய்வதற்குரிய அனுமதி இரத்துச் செய்யப்படும் எனவும் எச்சரித்தார்.

அத்துடன் சந்தேக நபர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் தலா 11 ஆயிரம் ரூபா வீதம் 33 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

(ற-ஜ-107)

## தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.18

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தால் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம், காய்ச்சி இணைப்பவர், சைக்கிள் திருத்துநர், ஓட்டோ திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், மர வேலை தொழில் நுட்பவியலாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், சமையலாளர், வெதுப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், அறை ஊழியர், கட்டட நிர்மாண உதவியாளர் ஆகிய கற்கைநெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடையவர்கள் தங்களது பதிவுகளை அலுவலக நேரத்தில், காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண தொழிற் பயிற்சி அதிகாரசபையின் உதவிப்பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ற-ஜ-ரி6)

இலவச ஆங்கில வகுப்பு

இடம்: ELAS institute ( யாழ் பல்கலை எதிரில் )

Time: - 9 am to 1 pm 20.12.2015 ஞாயிற்றுக்கிழமை

நான்கு மணித்தியாலத்தில் ஆங்கிலம்

பதிவுகளுக்கு முந்துங்கள்

Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.

Contact No: 076 697 3040, 021 221 2410

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் மாணவனும்

செல்வரூபன் - தயாரூபி தம்பதிகளின் மகனு மாகிய

செ. தருணன்

2015 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் பல சாதனைகளைப் பெற வாழ்த்துவதோடு இவரைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி.

வாழ்த்துபவர்கள்:
சசிகரன்- சித்தப்பா
பவித்திரா- சித்தி
யாதவன்- தம்பி,சானியா- தங்கை

பாடசாலை வீதி,
கண்டாவளை.

சிங்கள வகுப்புக்கள் — தொடர்பு: 077 711 5876

நாளை (19.12.2015) சனிக்கிழமை சிங்கள வகுப்புக்கள் நெல்லியடி Everest Academy யில் (பெண்கள் மத்திய கல்லூரிக்கு அருகில் ) ஆரம்பமாகவுள்ளன. (60677)(12,16)

Personal class — தொடர்பு: 077 836 1521

புதிய கல்வியாண்டுக்கான தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English, சிங்களம், Spoken with Grammar வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். ஏனைய பாட ஆசிரியர்களும் ஒழுங்கு செய்து தரப்படும்

தவறிவிட்டது — தொடர்பு: 076 696 0381, 076 897 5419

இயக்கச்சியை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பையா குணம் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் காப்புறுதி, வரி என்பவை சாவகச்சேரி A9வீதிக்கும் நுணாவில் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும் (60677)(I,I6)

வேலையாள் தேவை — தொடர்பு: 077 655 8428

பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்ய அனுபவமுள்ள வேலையாள் தேவை.

பெயர் மாற்றம்

7ஆம் வட்டாரம், சிவநகர், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்னும் முகவரி கொண்ட நான் எனது முதற் பெயராகிய தருமராசா செல்வசரஸ்வதி என்பதை தருமராசா நாகேஸ்வரி என மாற்றியுள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(63593)(11,16) த.நாகேஸ்வரி.

வீடு வாடகைக்குண்டு — தொடர்பு: 077 767 8318

பிறவுண் வீதி, நீராவியடியில் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு மட்டும் கொடுக்கப்படும். (66870)(14,15)

மணமகள் தேவை — தொடர்பு: 077 8376256

79 இல் பிறந்த ரோகிணி நட்சத்திரம், பாவக்கிரகம் 71 உடைய, வெளிநாட்டில் வசிக்கும் மணமகனுக்கு உள்நாட்டில் படித்த இந்து குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானின் சிமெந்து காங்கேசனில் இறக்குமதி

*ஜே.வி.பி. குற்றச்சாட்டு*

கொழும்பு, டிசெ.18
காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் பாகிஸ்தான் நாட்டவர் ஒருவரின் சிமெந்து இறக்குமதி செய்யப்பட்டு, பொதி செய்யப்படுகின்றது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கைத்தொழில் மற்றும் வணிக அபிவிருத்தி, அரச தொழில்முயற்சிகள் அமைச்சுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனம் என்பவற்றுக்கு கொழும்பில் அலுவலகங்கள் திறக்கப்பட்டு தலைவர், பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதற்காக கோடிக்கணக்கான பணம் வீண்விரயம் செய்யப்படுகின்றது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் உள்ள இரும்புகள் கழற்றி விற்பனைசெய்யப்படுகின்றன. இவ்வாறு 1.8 மில்லியன் டொலர் பெறுமதிக்கு இரும்புகள் விற்கப்பட்டுள்ளன.

மேலும், பாகிஸ்தான் நாட்டவர் ஒருவரின் சிமெந்து காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு இறக்குமதி செய்யப்பட்டு அங்கு வைத்துப் பொதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. காங்கேசன்துறையில் பாகிஸ்தான் சீமெந்து. இது தான் நிலைமை- என்றார்.

இது தொடர்பில் விளக்கமளித்த கைத்தொழில் மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சர் ரிஷாத் பதியூதீன்,

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் பாகிஸ்தான் நாட்டவரின் சிமெந்து பொதி செய்யப்படுவதாகக் கூறுவது தவறு. நான் அமைச்சைப் பொறுப்பெடுத்த பின்னர் அப்படி எதுவும் இடம் பெறவில்லை என்பதைப் பொறுப்புடன் கூறுகின்றேன்- என்றார். (த-சி)

# புலிகளுக்கு அஞ்சிக் காணிகள் விற்றோருக்கு மீண்டும் உரிமை

*வழங்கப்படவேண்டும் என்கிறார் அமைச்சர் ஹக்கீம்*

கொழும்பு, டிசெ.18
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அஞ்சி தமது காணிகளை விட்டுச் சென்றவர்களுக்கும், மலிவான விலையில் காணிகளை விற்பனை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்களுக்கும் காணி உரிமையை மீளப்பெற்றுக் கொடுப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற காணி அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே, மேற்கண்டவாறு வலியுறுத்திய அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களின் காணிகளை அபகரித்தனர். காணிகளை விடுவிக்குமாறு அச்சுறுத்தினர். இதனை மறுத்தவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. பலர் கொலை செய்யப்பட்டனர். இதற்குப் பயந்த பலர் காணிகளை விட்டுவிட்டுத் தப்பியோடினர். சிலர் செல்லுபடியாகும் விலையிலும் சுமார் 20 சதவீதம் வரையிலும் குறைந்த விலைக்குக் காணிகளை விற்றனர். சிலர் அச்சுறுத்தலுக்கு அஞ்சி விவசாயம் செய்த தமது சொந்தக் காணிகளுக்குச் செல்வதைக் கைவிட்டனர்.

இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, இந்தக் காணிச் சொந்தக்காரர்களுக்குக் காணி உரிமை மீள வழங்கப்பட வேண்டும்.

காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க மத்தியஸ்த சபை உருவாக்கப்படவேண்டும். காணி இணக்க சபைகள், தேசிய காணி ஆணைக்குழு ஆகியவற்றை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (த-சி)

# மனித உரிமை ஆணைக்குழு வடக்குக்குக் களப் பயணம்

யாழ்ப்பாணம், டிசெ. 18
இலங்கையில் 19 ஆவது அரசியல் சீர்திருத்தத்தின்படி உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முதலாவது களப்பயணமாக அதன் தலைவர் உள்ளிட்ட குழுவினர் வடக்குக்கு வந்துள்ளனர்.

3 நாள் பயணமாக நேற்றுமுன்தினம் வந்திருந்த அவர்கள், பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினர். இன்று கிளிநொச்சியில் சந்திப்பை மேற்கொண்ட பின்னர் கொழும்புக்குத் திரும்பவுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பதிகாரி ரி.கனகராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

19 ஆவது சீர்திருத்தத்தின்படி உருவாக்கப்பட்ட குறித்த ஆணைக்குழு, இலங்கையில் 5 பிராந்தியங்களாகக் கொண்டு 5 ஆணையாளர்களும் நியமிக் கப்பட்டுள்ளனர். அவற்றுக்குத் தலைவராக கலாநிதி தீபிகா உடகம உள்ளார். வடக்கு - கிழக்குப் பிராந்தியத்துக்குப் பொறுப் பாக அம்பிகா சற்குணநாதன் உள்ளார். அவர்களே வடக்குக்கு வந்துள்ளனர். அவர்களுடன் இணைந்து அலு வலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. பின்னர் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந் துரையாடியிருந்தோம். சமகால மனித உரிமைகள் விடயங்கள் பற்றி அதில் கலந்துரையாடப்பட்டன.

பின்னர் கோணப்புலம் முகாம், மீள்குடியேற்றப்பட்ட இடங்களுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர். வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

நேற்று எமது யாழ்.அலுவலகத்தில் சமூக பொருளாதார நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. பின்னர் பொம்மைவெளியிலுள்ள முஸ்லிம் மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டன.

பின்னர் வடமாகாண ஆளுநருடனான சந்தித்திப்பு இடம்பெற்றது. மாகாண சபை அமர்வு இடம்பெறுவதால் வடக்கு மாகாண முதலமைச்சரைச் சந்திக்க முடியவில்லை.

இன்று கிளிநொச்சிக்குப் பயணத்தை மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. அதனுடன் வடக்குக்கான பயணத்தை நிறைவு செய்து அவர்கள் திரும்புவார்கள் -என்றார். (த-4,101)

# தற்போதைய வடக்கு ஆளுநர் சிக்கனம்

*மாகாணசபை உறுப்பினர்கள் கூட்டாகத் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,டிசெ.18
கடந்த காலங்களிலிருந்த ஆளுநரை விட தற்போதைய ஆளுநர் சிக்கனமாக இருப்பதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் ஆளுநருக்கான ஆளணி தொடர்பில் மீளாய்வு செய்யப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்ததுடன், ஆளுநர் செயலகத்துக்கான ஒதுக்கீட்டை ஏகமனதாக உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர்.

வடக்கு மாகாண வரவு - செலவுத் திட்டத்தின் ஆளுநர் செயலகத்தின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுங்கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன், கடந்த கால ஆளுநருக்கும் தற்போதைய ஆளுநருக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. முன்னைய ஆளுநர் தேவையற்ற விதத்தில் நிதிகளைச் செலவு செய்தார். கடந்த ஆண்டு, இந்த ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகின்ற போது முன்னாள் ஆளுநருக்கு 12 கோடி ரூபா நிதி கேட்கப்பட்டிருந்தது.

ஆளுநர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டமையினால், 5 கோடியே 32 லட்சம் ரூபா மாத்திரம் செலவு செய்யப்பட்டுள்ளது. தற்போதும் புதிய ஆளுநருக்கு அடுத்த ஆண்டுக்கு 5 கோடியே 68 லட்சமே வரவு - செலவுத் திட்டத்தில் கோரப்பட்டுள்ளது - என்றார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த ஆளுங்கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன்:

கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் முன்னைய ஆளுநருக்கு 12 கோடி ரூபா நிதி கேட்கப்பட்ட போது, அதில் பல்வேறு விடயங்களுக்கு குறைப்புச் செய்யப்பட வேண்டும் என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். அவ்வாறு அந்த நிதி குறைப்புச் செய்யாமலா வழங்கப்பட்டிருக்கின்றது என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த அவைத் தலைவர், ஆளுநருக்கு ஒதுக்கப்பட்ட 6 மில்லியன் ரூபா நிதி, பல்வேறு அமைச்சுக்களுக்குப் பகிரப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இறுதியாக ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், ஆளுநரின் ஆளணி மீளாய்வு செய்யப்பட வேண்டும். இது ஆளுநருடன் நட்புறவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், முதலமைச்சர் நிதியத்துக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். இல்லாவிடின் எதிர்வரும் பெப்ரவரி மாதம் மாகாண நிர்வாகத்தை முடக்குவோம் - என்றார். (ஐ-5-ரி5)


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் - தாபனக்கிளையில் அபிவிருத்தி
உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திரு.யோகேஸ்வரன் விஜித் அவர்களின் அன்புத் தந்தையார்
**பொன்னம்பலம் யோகேஸ்வரன்**
அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
உத்தியோகத்தர் நலன்புரிசங்கம் (சி.15827)
(13.15)
**பிரதேச செயலகம், நல்லூர்.**

## 31 ஆம் நாள் நினைவு

மண்ணில்
18.09.1938




விண்ணில்
18.11.2015


**திருமதி மெற்றில்டா சோதிமலர் இராசசிங்கம்**

"அஞ்சாதே நான் உன்னை மீட்டுக் கொண்டேன்"
ஏசாயா 43-1

அன்புத் தந்தையே,
வாழ்வு எனும் கொடையை வாழ்ந்து உமது திருமுக ஒளி காண வந்துள்ள உம் அடியாளுக்கு உமது திருமுக தரிசனம் தந்தருளும்- ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை (19.12.2015) சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலயத்திலும். முற்பகல் 11 மணிக்கு மிருசுவில் புனித நீக்கொலார் ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குபற்றி அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக செபிக்க உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இல.368/3, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(67996)(11.15)
இராசசிங்கம்
கரோலைன் (சுமதி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படவேண்டும்

## வடமாகாண ஆளுங்கட்சி உறுப்பினர் க.சிவனேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

முல்லைத்தீவில் வரலாற்றுத் தொன்மையான இடங்கள் பல இருப்பதால், சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன் காணாமற்போய்க் கொண்டிருக்கும் வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். – இவ்வாறு வடக்குமாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் க.சிவனேசன் தெரிவித்தார்.

வடக்குமாகாணசபையின் வரவு – செலவுத் திட்டத்தில், முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது–

முல்லைத்தீவில் இன்றும் பல வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. அவற்றை சுற்றுலாப்பயணிகள் பார்வையிடுவதற்கு ஏதுவாக அவை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

இதேவேளை பல பிரதான வீதிகளில் காணப்படும் குப்பைகள் அகற்றப்படுவதில்லை. உள்ளூராட்சி மன்றங்களில் கேட்டால், அதற்கு ஆளணி இல்லை என்கின்றார்கள். எனவே கழிவுமுகாமைத்துவதற்கு அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

அத்துடன் பிரதேச சபைகள், பொதுமக்கள் வீடுகள் கட்டுவதற்கு முன்னரான அனுமதியை விரைந்து வழங்க வேண்டும்.

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் அபிவிருத்திகள் மேற்கொள்வதன் ஊடாகவே சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க முடியும்.– என்றார். (ற–ஐ–5,ரி5)

# மாநகர சபை ஊழல் குறித்து உரிய விசாரணை தேவை

## மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ்.மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல்கள் – நெறிப்பிறழ்வு தொடர்பில் எந்த நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. தவறு செய்பவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் மீண்டும் தவறு நிகழாமல் இருக்கும். – இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் இ.ஆனோல்ட் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சு மீதான பாதீட்டு உரையில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது –

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் புள்ளியிடல் முறைமையினால் பலர் வஞ்சிக்கப்பட்டார்கள். பலருக்கு வீடுகள் கிடைப்பதற்கான தகுதி இருந்தும் புள்ளியிடல் முறைமையால் அதனை இழந்துள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களில் எமது சுற்றுலாத்துறையின் மேம்பாட்டுக்காக நடவடிக்கைஎதுவும்மேற்கொள்ளப்படவில்லை. வடக்கு மாகாணத்துக்கு எவ்வளவு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர் என்பது தொடர்பில் எம்மிடம் எந்தப்புள்ளி விவரமும் இல்லை. அப்படியானால் எப்படி, சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதற்குரிய திட்டங்களை வகுக்க முடியும்.

இதேவேளை யாழ்.மாநகர சபையில் இடம்பெற்ற நெறிப் பிறழ்வு தொடர்பில் தீர்க்கமான முடிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

> யாழ்.பண்ணைப் பகுதியில் வீசுகின்ற துர்நாற்றத்தைப் பார்த்தால் மீண்டும் ஒரு தடவை எவரும் யாழ்ப் பாணம் வரமாட்டார்கள். அந்தளவுக்கு யாழ்ப் பாணம் நாறிக் கொண்டிருக்கின்றது.

யாழ்.நகரின் கரையோரப் பகுதிகளில் கடந்த காலங்களில் மக்கள் குடியேற்றப்பட்டார்கள். அவர்களுக்கு இன்னமும் நிரந்தரமான காணி உறுதி வழங்கப்படவில்லை. அதனால் வீட்டுத் திட்டம் பெறுவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இதனைத் தீர்க்க வேண்டும்.

பூநகரியில் மண்ணித்தலைப் பிரதேசம் இருக்கின்றது. இன்று வரையில் அந்தப் பகுதி மக்கள் மின்சாரத்தைப் பார்க்கவில்லை. வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக அவர்களுக்கு மின்சார வசதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் – என்றார்.

இதே அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றிய ஆளுங்கட்சி உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவிக்கும் போது:

யாழ்.மாநகர சபையை நாம் பொறுப்பேற்று என்ன செய்தோம் என்று எதிர்கட்சித் தலைவர் கேட்கின்றார். மாநகர சபையில் அவர்கள் ஆட்சியி லிருந்த போது, பெருமளவு பணம் கொள்ளையடிக்கப் பட்டது. அந்தப் பணத்தில் இந்தியாவில் வீடும் வாங்கியுள்ளனர் என்று தெரிய வருகின்றது. குளத்தை நிரப்பிக் கட்டடங் களைக் கட்டி, நகரின் கழிவு முகாமைத்துவத்தை சீர்குலைத் தது கடந்த ஆட்சியே என்று குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் உள் ளூராட்சி மன்றங்களில் இடம் பெற்ற நெல்சிப் மோசடி தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி உள் ளூராட்சி மன்றங்களில் முடிவுக்கு வந்த பின்னர், சபைகளில் ஆலோசனைச் சபை அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறான ஆலோசனைச் சபை அமைக்க யார் அனுமதி வழங்கியது? அந்த ஆலோசனைச் சபைகளில் நியமிக்கப்பட்டவர்கள் யார் ?

யாழ்.பண்ணைப் பகுதியில் வீசுகின்ற துர்நாற்றத்தைப் பார்த்தால் மீண்டும் ஒரு தடவை எவரும் யாழ்ப்பாணம் வரமாட்டார்கள். அந்தளவுக்கு யாழ்ப் பாணம் நாறிக் கொண்டிருக்கின்றது. இதனைத் துப்புரவு செய்ய மாநகர சபை ஒழுங்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ற–ஐ–5–ரி5)

# திடீரென உருவாகும் சந்தைகளால் உள்ளூர் வர்த்தகர்களுக்குப் பாதிப்பு

## வடமாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

வடக்கில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில், புதிய கலாசாரமாக திடீர்ச் சந்தைகள் அல்லது நடமாடும் சந்தைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இதனால் எமது உள்ளூர் முயற்சியாளர்கள் – வர்த்தகர்கள் பாதிப்பை எதிர் கொள்கின்றனர். எனவே இவ்வாறான திடீர்ச் சந்தை அல்லது நடமாடும் சந்தைக்கு பொருத்தமான வரிவிதிப்புக்களை உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்ள வேண்டும். – இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர்க.சர்வேஸ்வரன் வேண்டுகோள் விடுத்தார்.

முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில்கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையில் ஏற்றத் தாழ்வுகள் அதிகமாகவுள்ளன. ஓர் உள்ளூராட்சி மன்றம் சிறிய பிரதேசத்தை வைத்துக் கொண்டு அதிக வருமானத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றவேளையில், மிகப்பெரிய பிரதேசத்தை நிர்வகிக்கும் உள்ளூராட்சி மன்றம் குறைந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றது. இதனைச் சமப்படுத்த வேண்டும்.

வீதிகளில் கட்டாக்காலி நாய்கள் – மாடுகள் படுத்துக் கிடக்கின்றன. இதனால் விபத்துக்கள் அதிகரித்துச் செல்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பு உள்ளூராட்சிமன்றங்களுக்கு உரியது. வீட்டு நாய்களுக்கு இலக்கம்கொடுக்க வேண்டும். மேலும், சிலர் நாய்க்குட்டிகளை பைகளில் போட்டுவீதிகளில் கொண்டுவந்துவிட்டுச் சென்று விடுவார்கள். அவ்வாறானவர்களுக்கு எதிராக தண்டம்விதிக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் போரின் பின்னர், திடீர்ச் சந்தை அல்லது நடமாடும் சந்தைகள் அதிகரித்துச் செல்கின்றன. இதனால் உள்ளூர் வர்த்தகர்கள் பாதிப்பு அடைகின்றனர். எனவே இவ்வாறு திடீர்ச்சந்தை-நடமாடும்சந்தை வியாபாரம் செய்பவர்களிடமிருந்து உள்ளூராட்சி மன்றங்கள் வரிகளை அறவிட வேண்டும். மேலும், நிலப் பயன்பாடு விடயத்தில் நாம் கொள்கை வகுப்புச் செய்ய வேண்டும். எமது மாகாணத்தின் தொன்மையான – வரலாற்று ரீதியான இடங்களை அடையாளப்படுத்த வேண்டும் – என்றார். (ற–ஐ–5–ரி5)

# வரி மதிப்பீட்டை மேற்கொள்ளாததால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இழப்பு

## மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.18

உள்ளூராட்சி மன்றங்கள் நீண்ட காலமாக வரிமதிப்பீட்டை மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பெருமளவு நிதி இழப்பீடு ஏற்படுகின்றது.– இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் வரவு – செலவுத் திட்டத்தின் முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித் ததாவது–

வடக்கு மாகாணசபைக்கு உட்பட்ட பல உள்ளூராட்சி மன்றங்கள், வரி மதிப்பீட்டை நீண்ட காலமாக மேற் கொள்ளவில்லை. இதனால் சபைகளுக்குப் பெருமளவு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. சபைகள் நலிவடையும் நிலையும் இதன் காரணமாக ஏற்பட்டுள்ளது.

வரி மதிப்பீட்டு ஊழியர்களுக்கு பற்றாக்குறையும் காணப்படுகின்றது. இதற்கு ஓய்வுபெற்ற வரி மதிப்பீட்டாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பயன்படுத்த முடியும். இதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இதேவேளை, உள்ளூராட்சிமன்ற அமைச்சு மட்ட ஆலோசனைக் கூட்டம் இதுவரையில் கூட்டப்படவில்லை. இந்தக் கூட்டத்தை கூட்டுவதன் ஊடாக, பல்வேறு ஆலோசனைகளை நாம் முன்வைக்க முடியும். இதனூடாக பல பிரச்சினைகளைத் தீர்க்கலாம் – என்றார்.

இதே அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றிய திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்ததாவது–

எமது மாகாணத்தில் கழிவு முகாமைத்துவம் சீராக இல்லை. 785 போக்குவரத்து இலக்க வீதியினூடாகச் செல்பவர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. அந்தளவு தூரம் கல்லுண்டாய்ப் பகுதியில் மோசமான நிலை காணப்படுகின்றது. நவீன தொழில்நுட்பத்தை கழிவு முகாமைத்துவத்தில் பயன்படுத்த வேண்டும். இதனூடாகவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு, புள்ளியிடல் முறைமை காரணமாக வீட்டுத் திட்டங்கள் கிடைக்கப் பெறவில்லை. அவர்கள் தொடர்ந்தும் பாதுகாப்பு இல்லாத சூழலிலேயே வாழ வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் – என்றார்.

யாழ். மாவட்ட எதிர்க்கட்சி உறுப்பினர் சி.அகிலதாஸ் தெரிவிக்கும் போது:

2 மில்லியன் ரூபாவுக்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் வீதிப் புனரமைப்புப் பணிகளை, அந்தப் பகுதி சனசமூக நிலையங்களிடம் ஒப்படைப்பது சிறப்பானது. அவர்கள் தமது பகுதிக்கான வேலையைச் சிறப்பாகச் செய்வார்கள் – என்றார். ற–ஐ–5–ரி5)

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவச மின்இணைப்பு வழங்குக

## ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.தியாகராசா கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.18

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ், மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட மின் இணைப்பு இப்போது வழங்கப்படுவதில்லை. அவற்றுக்குப் பணம் கோரப்படுகின்றது. மீளவும் அவற்றை இலவசமாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் – இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சிஉறுப்பினர் எம்.தியாகராசா கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண சபையின் வரவு – செலவுத் திட்டத்தில், முதலமைச்சரின் அமைச்சு மீதானவிவாதத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்படி [illegible] கையை முன் வைத்தார். அதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது–

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கடந்த காலங்களில் இலவச மின்விநியோகம் – இணைப்பு மேற் கொள்ளப்பட்டது. ஆனால் தற்போது அது நிறுத்தப்பட்டுள்ளது. அண்மையில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு [illegible] பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் [illegible] வேண்டும் – என்றார்.

வவுனியா மாவட்டத்தின் மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினரான இ.இந்திரராஜா உரையாற்றுகையில்:

மேற்கு நாடுகளைப் பொறுத்தவரையில் அங்கு நாடாளுமன்றத்தை விட உள்ளூராட்சி மன்றங்களுக்கே அதிகமதிப்புள்ளது. உள்ளூராட்சி மன்றம் மக்களு [illegible]

வவுனியா மாவட்டத்தில் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகள் திருத்தம் செய்யப்படவில்லை. எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியை அதற்கு ஒதுக்கினேன். நான் நிதி ஒதுக்கிய வீதிகள் திருத்தப்படவில்லை. வேறு வீதிகளை எனது நிதியில் புனரமைக்கின்றனர். இது தான் இன்றைய உள்ளூராட்சி மன்றங்களின் நிலை – என்றார். (ற–ஐ–5–ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளங்கள் புனரமைப்பு தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.18
விசுவமடு மற்றும் தண்ணி முறிப்புக் குளங்களின் புனரமைப்புத் தொடர்பான விசாரணை அறிக்கைகள் இந்த வருடத்தின் இறுதிக்குள் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது என்று வட மாகாணப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரு குளங்களின் புனரமைப்பு வேலைகளின் போது மோசடிகள் இடம்பெற்று, தரம் அற்ற பணிகளே நடைபெற்றிருந்தன என்றும், அதனால் அந்தக் குளங்கள் 2014 ஆம் ஆண்டு நிலவிய பருவ மழையின் போது மீண்டும் உடைப்பெடுத்தன என்றும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.
அதையடுத்து இந்த இரு குளங்களின் புனரமைப்பின் போது பண மோசடிகள் மற்றும் ஒப்பந்த மோசடிகள் இடம்பெற்றதா எனக் கண்டறியும் நோக்கில், வட மாகாண பிரதம செயலாளர் பத்திநாதனால் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டது.
இந்தக் குழுவின் அறிக்கை தொடர்பாகக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(ற-ஐ-101)

# தலைமன்னாரில் மீட்கப்பட்ட இந்திய மீனவரின் உடல் அடக்கம்



மன்னார், டிசெ.18
தலைமன்னார் கடற்பரப்பில் மீட்கப்பட்ட இந்திய மீனவர் ஒருவரின் உடல் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் உப்புக்குளம் முஸ்லிம் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.
இராமேஸ்வரம் ராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த 4 மீனவர்கள் கடற்றொழிலுக்குச் சென்ற போது கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தனர்.
குறித்த மீனவர்களைத் தொடர்ச்சியாக தேடி வந்த நிலையில், கடந்த 4 ஆம் திகதிஇரவு தலைமன்னார் கடற்பரப்பில் ஆண் ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.
தலைமன்னார் கடற்படையினரின் உதவியுடன் குறித்த சடலம் மீட்கப்பட்டு, மன்னார் பொது வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.
குறித்த சடலம் காணாமல் போன 4 இந்திய மீனவர்களில் ஒருவரான இராமேஸ்வரம் ராமநாதபுரம் சல்லிமலைக் கிராமத்தைச் சேர்ந்த யாகீர் ஹீசைன்(வயது-40) என அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த சடலம் இந்தியாவுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில், நீண்ட நாள்களாக மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் மன்னார் உப்புக்குளம் பள்ளிப் பரிபாலகர் சபையூடாக குறித்த இந்திய மீனவரின் உடல் உப்புக்குளம் பள்ளிக்குக் கொண்டு வரப்பட்டு உப்புக்குளம் முஸ்லிம் மைய வாடியில் அடக்கம் செய்யப்பட்டது.

(ற-ஐ-56)

# பனை சார் தும்பு உற்பத்தியால் 17 குடும்பங்கள் பயனடைந்தன

முல்லைத்தீவு,டிசெ.18
ஒட்டுசுட்டானில் அமைக்கப்பட்ட பனை சார் தும்பு உற்பத்தி நிறுவனத்தினூடாக தற்போது 17 குடும்பங்கள் பயனடைந்துள்ளன என்று ஒட்டு சுட்டான் பனை தென்னை வள அபிவிருத்திச்சங்கத்தின் பொது முகாமையாளர் ச.உதயச்சந்திரன் தெரிவித் துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
யூசைட் நிறுவனமும் லான்லொறி நிறுவனமும் எம்மிடம் தொடர்பு கொண்டு பனை மட்டையிலிருந்து தும்பு அடித்துத் தருமாறும் அதற்கான இயந்திரங்களைத் தருகின்றோம் என்றும் கேட்டதிற்கிணங்க, தும்பு உற்பத்திச் சங்கம் எனப் பெயரிட்டு முன்மாதிரியாக 13 பெண்கள் உற்பத்தியாளர்களாக ஈடுபட்டு வருகின்றனர்.
இதனை விரிவு படுத்தி மேலும் பல குடும்பங்களுக்கு தொழில்வாய்ப்பை ஏற் படுத்திக் கொடுக்கவுள்ளோம். தும்புகளைப் பயன்படுத்தி பிறஸ், துடைப்பம் போன்றன உற்பத்தி செய்யப்பட்டு இந்தோனேஷியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.
முக்கியமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெண்களின் வாழ்வாதாரத்தை கொண்டதாகவும் இதனை மேலும் விரிவு படுத்தி பலரை உள்வாங்கி அவர்களது வாழ்வை மேம்படுத்துவதுமே எமது நோக்கம்- என்றார்.

(ற-ஐ-500)

# அதிக விலைக்கு விற்றால் உடன் எமக்கு அறிவிக்குக

## நுகர்வோர் அதிகாரசபை அறிவுறுத்து

கிளிநொச்சி,டிசெ.18
வர்த்தக நிலையங்களில் தரமற்ற பொருள்கள், காலாவதியான பொருள்கள் என்பன விற்பனை செய்யப்பட்டாலோ அல்லது கட்டுப்பாட்டு விலையிலும் விட அதிக விலையில் விற்கப்பட்டாலோ தமக்கு அறிவிக்குமாறு நுகர்வோர் பாதுகாப்புச் சபையினர் பொது மக்களிடம் கோரியுள்ளனர்.
ஏ-9 வீதியில் உள்ள மாங்குளம், கனகராயன் குளம் நகரப்பகுதி வர்த்தக நிலையங்களுக்கு அண்மையில் திடீர் பயணமொன்றை மேற்கொண்ட நுகர்வோர் பாதுகாப்புச் சபையினர், வர்த்தக நிலையங்களில் ஆய்வுகளை மேற்கொண்டதுடன், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்ட திட்டங்கள் அடங்கிய கையேடுகளையும் பொது மக்களுக்கு விநியோகித்தனர்.
குறித்த நுகர்வோர் சட்ட திட்டங்கள் அடங்கிய கையேடுகள் நகரப்பகுதி வர்த்தக நிலையங்களுக்கும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினரால் வழங்கப்பட்டுள்ளன.
அத்தோடு வர்த்தக நிலையங்களில் தரமற்றபொருள்கள், காலாவதியானபொருள்கள் விற்பனை செய்யப் பட்டால் அல்லது கட்டுப்பாட்டு விலையிலும் விட அதிக விலையில் விற்கப்பட்டால் தமக்கு அறிவிக்குமாறு பொதுமக்களைக் கோரியுள்ளனர்.
நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் 011 755 5481 என்ற இலக்கத்துடனும், யாழ்ப்பாணம் அலுவலகத்துடன் 0213 219 000 இலக்கத்துடனும், வவுனியா அலுவலகத்துடன் 0247755455 ஆகிய இலக்கங்களுடன்தொடர்புகளை மேற்கொண்டு விவரங்களை அறியத்தர முடியும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(ற-ஐ-500)

# நீர்வழுங்கல் வடிகாலமைப்புச் சபை முல்லைத்தீவில் அமைக்க வேண்டும்

## வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் கோரிக்கை

முல்லைத்தீவு,டிசெ.18
முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும். அதனூடாக நீர் வடிந்தோட முடியாமல் வெள்ளப்பெருக்குஏற்பட்டுள்ள இடங்களை இனங்கண்டு, நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்- இவ்வாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான கே.கே. மஸ்தான் தெரிவித்தார்.
நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தின் போதே இவ்வாறு தெரிவித்தார் என அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பொதுவாகவே வன்னிப்பிரதேசத்தில், நகர அபிவிருத்தி திட்டமிடலில், திட்டமிடப்பட்ட பொறிமுறை அதாவது வங்கிகள், மாவட்ட செயலகம், பொலிஸ் நிலையம், நகரத்திட்டமிடல் உட்பட வடிகாலமைப்பு என்பன சீரற்று காணப்படுவதால், மன்னார் பஸ் நிலையம் உட்பட ஏனைய முக்கிய இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.
சுற்றுச் சூழல் ஆய்வறிக்கை இன்றி பொதுக் கட்டடங்கள், தனியார் கட்டடங்கள் என்பன குளங்களை மண் நிரப்பிக்கட்டப்படுவதால் இனிவரும் காலங்களில் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கட்டடங்கள் மற்றும் பெரும் திட்டங் கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.
மன்னார்த் தீவுக்குள் குறிப்பாக புதுக்குடியிருப்பு, கரிசல், தலைமன்னார் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள வீடமைப்புகள், முறையான திட்டமிடல் இல்லாமை காரணமாக மழை காலங்களில் இந்த இடங்களில் குளம் போன்று வெள்ளநீர் தேங்கி நிற்பதை அவதானிக்க முடிகிறது.
கட்டையடம்பன், தம்பனைக்குளம், மடுகரை ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளில் மழைக் கால வெள்ள அபாய நிலை காணப்படுகிறது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை ஒன்று இல்லாமல் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது.

(ற-ஐ-21)

# பண்ணைக்குள் புகுந்த மாட்டின் காலையும் முறித்து உரிமையாளரிடம் ரூ.20 ஆயிரம் பணமும் பறிப்பு

## சிவில் பாதுகாப்புப் படையினர் அட்டூழியம் எனக் குற்றஞ்சாட்டுகின்றார் பாதிக்கப்பட்டவர்

கிளிநொச்சி,டிசெ.18
சிவில் பாதுகாப்புப் படையினர் நடத்தும் பண்ணைக்குள் மாடுகள் சென்றன என்று தெரிவித்து ஒரு மாட்டின் காலை அடித்து முறித்துள்ள சிவில் பாதுகாப்பு படையினர், பயிரழிவுகளுக்குத் தண்டப் பணம் வேண்டும் என்று தெரிவித்து உரிமையாளரிடமிருந்து 20 ஆயிரம் ரூபாவையும் கட்டாயப்படுத்தி அறவிட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் நடந்துள்ளது.
ஒற்றைக் காலை இழந்துள்ள குறித்த குடும்பஸ்தர், மாட்டுப்பட்டி வைத்திருந்து தனது வாழ்வாதாரத்தை நடத்திவருகிறார்.
இந்தநிலையில், சிலநாள்களுக்கு முன்னர் பட்டியை உடைத்துக் கொண்டு சில மாடுகள் வெளியேறி அருகிலுள்ள இராணுவத்தினரின் கீழ் இயங்கும் சிவில் பாதுகாப்புப் பிரிவினர் பராமரிக்கும் பண்ணைக்குள் புகுந்து புற்களை மேயத் தொடங்கியுள்ளன. மாடுகள் உள்நுழைந்ததை அறிந்த மாட்டின் உரிமையாளர் சிறிது நேரத்தில் ஓடிச் சென்று தனது மாடுகளை விடுமாறு கோரியுள்ளார்.
ஆனால் மாடுகள் பெரும் சேதம் விளைவித்து விட்டதால், தண்டப்பணமாக 75 ஆயிரம் ரூபா கட்ட வேண்டும் என்றும் அவ்வாறு கட்டினால் மாத்திரமே மாடுகளை விட முடியும் என்று சிவில் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
எனினும் அந்தளவு பயிரழிவுகள் ஏற்படவில்லை. மாடுகள் புற்களே மேய்ந்துள்ளன என்று மாட்டு உரிமையாளர் நீண்டநேரம் வாதாடியதை அடுத்து, 20 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறு சிவில் பாதுகாப்புப் பிரிவினர் கூறியுள்ளனர்.
அதனால் வேறுவழியின்றி தனது வீட்டுக்குச் சென்று தனது மாடுகளில் ஒன்றை இறைச்சிக் கடை உரிமையாளரிடம் விற்று 20 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுச் சென்று சிவில் பாதுகாப்பு அதிகாரியிடம் கொடுத்துள்ளார்.
எனினும் ஒரு மாட்டின் காலை அவர்கள் அடித்து முறித்துள்ளமை அதன்பின்னர் தெரிய வந்துள்ளது. தண்டப் பணம் என்ற பெயரில் பணத்தையும் அறவிட்டு ஒரு மாட்டையும் நொண்டியாக்கி விட்டீர்களே என மாட்டின் உரிமையாளர் மீண்டும் சிவில் பாதுகாப்பு பிரிவினரிடம் கேட்டபோது, அந்த மாடு வரும்போதே இந்த நிலையில்தான் வந்தது என்று எகத்தாளமாகப் பதில் அளிக்கப்பட்டது என்று மாட்டின் உரிமையாளர் கவலையுடன் தெரிவித்தார்.
இது தொடர்பாக குறித்த பண்ணையின் அதிகாரியிடம் கேட்ட போது, அவ்வாறான சம்பவம் தொடர்பாக தமக்குத் தெரியாது எனவும் இது தொடர்பாக அம்பாள் நகர் பகுதியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்தார்.
தலைமை காரியாலயத்திடம் கேட்ட போது இது தொடர்பாக தமக்கு தெரியப்படுத்தப்படவில்லை எனவும் தமது நிலைய அதிகாரி விடுமுறையில் இருப்பதனால் அவர் வந்த பின்னர் இது தொடர்பாக விசாரிக்கப்படும் என்றும் தெரிவித்தனர்.
அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக கிராம சேவகர் ஊடாகப் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியே நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

(ஐ-4,101,21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்று அதிகரிப்பு

## 15 நாள்களில் 25 பேர் பாதிப்பு

சாவகச்சேரி, டிசெ.18
தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த 15 தினங்களில் டெங்குத் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 25 ஐத் தாண்டியுள்ளது.

டிசெம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் பதினொரு பேரும், இரண்டாவது வாரத்தில் 13 பேரும் இறுதி இரு தினங்களில் மூன்று பேருமாக 25 இற்கும் மேற்பட்டோர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு, குருதி மாதிரிகளின் பரிசோதனைகளின் பின்னர் டெங்கின் தாக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு வைத்தியசாலையில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

டெங்குத் தொற்றுக்குள்ளானவர்களின் விவரங்கள் வைத்தியசாலையால், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைக்கு அறிவிக்கப்பட்டு அவர்களால் சம்பந்தப்பட்டோர் வசிக்கும் இடத்திலும், அதனை அண்டிய பகுதிகளிலும் டெங்குக்கட்டுப்பாட்டுப்புகையூட்டல் நடவடிக்கைகள் உள்ளூராட்சி சபைகளின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் பெய்த பெரு மழையால் பல பிரதேசங்களில் இன்னமும் வெள்ளம் வடியாதுள்ளதால் டெங்குத் தொற்று அடுத்த வாரங்களில் மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இதேவேளை - சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் டிசம்பர் மாத ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட டெங்குக் கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடுகளில் சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள் மற்றும் பொலிஸார் ஆகியோர் பிரிவுக்குட்பட்ட ஆறு வலயங்களில் கூட்டாக பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது 3 ஆயிரத்து 399 குடியிருப்புக்கள் மற்றும் காணிகளில் தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடியவை என இனங்காணப்பட்ட 363 குடியிருப்புக்கள் மற்றும் காணிகளுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டன.

அத்துடன் குடியிருப்புக்கள் மற்றும் காணிகளை டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நிலையில் வைத்திருந்த 10 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கு பொலிஸார் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

## பாடசாலைகளில் அதிபர்களுக்கு நியமனக் கடிதம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.18
பாடசாலைகளில் பிரதி அதிபர், உப அதிபர், பகுதித் தலைவர் போன்ற பதவிகளுக்கான நியமனக் கடிதங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களால் வழங்கப்படவுள்ளன.

வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் இந்தப் பணிப்புரை சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் குறித்த நியமனங்கள் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களால் மேற்கொள்ளப்பட்டு பின்னர் தழுவுஅனுமதிக்காகவலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுவது வழமை.

ஆனால் பாடசாலை அதிபர்கள் உரியகல்வித்தகைமை உடையவர்கள், சிரேஷ்ட நிலையில் உள்ளோரைப் புறந்தள்ளிவிட்டுசாதாரண நிலையுடையவர் களுக்கு மேற்படி பதவிகளை வழங்கியதால்ஏற்பட்ட முரண்பாட்டையடுத்தே, இனி வரும் காலங்களில் பிரதி அதிபர், உபஅதிபர்,பகுதித் தலைவர் போன்றபதவிகள்அந்தந்தப் பிரதேசவலயக்கல்விப் பணிப்பாளர்களால் வழங்கப்படவுள்ளன. (ற-ஐ-50)



நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கஜமுகசங்காரம் இடம்பெற்றது. (ஐ)

## தகனம் செய்ய வேண்டிய உடலை புதைக்கச் சொன்ன பொலிஸார்

### அதிகாரத்தை மீறிச் செயற்பட்டுள்ளனர் என திடீர் இறப்பு விசாரணை அதிகாரி விசனம்

யாழ்ப்பாணம், டிசெ.18
தகனம்செய்யும்படி திடீர் இறப்பு விசாரணை அதிகாரியால் பணிக்கப்பட்ட இந்து சமயத்தவரின் சடலத்தை மானிப்பாய் பொலிஸார் புதைக்கும்படி கூறிப் புதைத்துள்ளனர் என்று திடீர் இறப்பு விசாரணை அதிகாரி விசனம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு புதைத்தமையால் மானிப்பாய் பகுதி இந்துமக்கள் மிகவும் குழப்பம் அடைந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி மானிப்பாய் இராஜகாரியர் வீதியைச் சேர்ந்த சின்னராசா சுதாகரன் (வயது - 32) என்பவர் இயற்கைச் சாவடைந்தார். படுக்கைக்குச் சென்றிருந்தவர் மறுநாள் காலை சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவரது இதயம் அசாதாரணமாகத் துடித்தமையால் இதயம் செயலிழந்து உயிரிழந்தார் என்பது பரிசோதனையில் தெரியவந்தது.

நீதிமன்றப் பணிப்புக்கமைய, திடீர் இறப்பு விசாரணை அதிகாரி யாழ். போதனா வைத்தியசாலையில் விசாரணை மேற்கொண்டு அவர்களது பயன்பாட்டிலுள்ள மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் சடலத்தைத் தகனம் செய்யுமாறு பணித்திருந்தார்.

ஆனால் அதில் தலையிட்ட மானிப்பாய் பொலிஸார் சடலத்தை எரிக்கக்கூடாது, புதைக்க வேண்டும் என்று பணித்தமையால் பின்னர் சடலம் புதைக்கப்பட்டது.

இது சம்பந்தமாக திடீர் இறப்பு விசாரணை அதிகாரிபிரேம்குமாருடன்தொடர்புகொண்டு கேட்டபோது, தான் தகனம் செய்யும் படி கூறியதாகவும் மானிப்பாய் பொலிஸார் தமது அதிகாரத்தை மீறி இந்த விடயத்தில் செயற்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். (ஐ-4,86)

## தமிழ் அரசியல் கைதிக்கு ஒரு மாத கடூழியச் சிறை

### மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

அம்பாறை, டிசெ.18
பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து வந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் மீதான வழக்கில் திருத்திய குற்றச்சாட்டை அவர் ஏற்றுக்கொண்டதால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

குறித்த சந்தேகநபரான மட்டக்களப்பு சந்திவெளியைச் சேர்ந்த இராமசாமி கிருஷ்ணகாந்தன் (வயது - 38) என்பவர் மீது மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப் பட்டிருந்த வழக்கு விசாரணையில், திருத்திய குற்றச்சாட்டை அவர் ஏற்றுக்கொண்டதையடுத்து ஒரு மாத கடூழியச் சிறைத்தண்டனையுடன் ஒருவருடத்துக்கு மேற்படாத காலத்துக்கு புனர்வாழ்வு பெறச் செல்லவேண்டும் எனவும் உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் சந்தேகநபரான இராமசாமி கிருஷ்ணகாந்தன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். கரடியனாறு பகுதியில் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் வெடிமருந்து, கைக்குண்டு, துப்பாக்கி, கிளைமோர்க்குண்டுகளைச் சேகரித்துஉடைமையில் வைத்திருந்தாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் வழக்கு விசாரணையும் நடைபெற்று வந்தது.

இந்த வழக்கு விசாரணை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில்விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்பட்ட போது, சந்தேகநபரான இராமசாமி கிருஷ்ணகாந்தன் திருத்திய குற்றச்சாட்டை விரும்பி ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

அதையடுத்து சந்தேகநபருக்கு ஒரு மாத கடூழியச் சிறைத்தண்டனையுடன் ஒருவருடத்துக்கு மேற்படாத காலத்துக்கு புனர்வாழ்வு பெறச்செல்லவேண்டுமெனவும் உத்தரவிட்டு, நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் தீர்ப்பளித்தார். (ற-ஐ-30)

## கணவரைக் காணவில்லை என மனைவி முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.18
திருகோணமலைக்குச் சென்ற தனது கணவரைக் காணவில்லை என யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மனைவி ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். கச்சேரி நல்லூர் வீதி, மூத்தநாயனார் வீதியைச் சேர்ந்த சண்முக ராசா தயா சீலன் (வயது - 41) என்ற குடும்பஸ்தரே காணாமற் போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி வீட்டில் இருந்து திருகோணமலைக்கு அவரது மாமனார் வீட்டுக்குச்செல்வதாகக்கூறிச்சென்றார். ஆனால் அவர் திருகோணமலைக்கும் செல்லவில்லை. எங்கு சென்றார் எனத் தெரியவில்லை என மனைவி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ற-ஐ-106)

## சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு நேரக் கட்டுப்பாடு தளர்வு

யாழ்ப்பாணம், டிசெ.18
நத்தார் தினத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் நலன் கருதி வடமராட்சி வடக்கு, தெற்கு, மேற்கு பிரதேச செயலகங்களுக்குட்பட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச்சங்கங்களின், சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு நாளை சனிக்கிழமை இரவு தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு வரை நேரக் கட்டுப் பாடு தளர்த்தப்பட்டுள்ளது.

அதனால் ஞாயிற்றுக்கிழமையும் தொழில் நிலையத்தைத் திறந்து சேவையாற்றுமாறும், நத்தார் பொது விடுமுறை தினம் என்பதால் அன்று ஏற்கனவே நடைமுறையில் உள்ளது போல் நேரக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறும் சங்கத்தின் செயலாளர் ஜெ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார். (ற-ஐ-ரி6)

## உலக சிறுவர் தின நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.18
வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக் களத்தின் ஏற்பாட்டில் உலக சிறுவர் தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் காலை9 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் தி.விஸ்வரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் கவி. விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஐ-ரி6)

## ஆவணக் காப்பகத்தின் உரை நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.18
சமகாலக்கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்தொடரில் "விபவி நுண்கலைக் கூடம்" எனும் தலைப்பில் நுண்கலைக்கூடத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பற்றிய உரை நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.199,கோவில் வீதி , நல்லூரில் அமைந்துள்ள ஆவணக்காப்பகத்தில் நடைபெறவுள்ளது.

விபவி நுண்கலைப் பீடத்தின் நிறுவுனர் சந்திர குப்த தேனுவர இந்த உரையை நிகழ்த்தவுள்ளார். (ற-ஐ-ரி6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலனாய்வாளர்கள் வந்தால் தகவல் வழங்க வேண்டாம்

## காணாமற்போனோர் விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ 18

புலனாய்வாளர்கள் எனக் கூறிக் கொண்டோ, அல்லது இராணுவம் என்று கூறிக்கொண்டோ எவராவது காணாமற்போனோரின் வீடுகளுக்கு வந்தால் எந்த விதமான தகவல்களையும் வழங்க வேண்டாம் என ஆணைக்குழுவின் தலைவர் பரணகம காணாமற் போனோரின் உறவுகளிடம் தெரிவித்தார்.

சங்கானைப் பிரதேச செயலர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசாரணையில் சாட்சியம் அளித்த பலர், தமக்குப் புதிய ஆட்சியிலும் புலனாய்வாளர்களின் இடையூறும் அச்சுறுத்தலும் தொடர்ந்து இருப்பதாகச் சுட்டிக் காட்டினர்.

இதற்குப் பதில் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனிமேல் நாங்கள் புலனாய்வாளர்கள் எனக்கூறிக்கொண்டோ, அல்லது இராணுவம் எனக் கூறிக் கொண்டோ காணாமற் போனோரின் வீடுகளுக்கு வந்தால் எந்த விதமான தகவல்களும் வழங்க வேண்டாம். அதையும் மீறித் தகவல் என்ற பெயரிலோ அல்லது வேறு எந்த விடயத்துக்காகவோ அவர்கள் வீட்டுக்கு வரும் பட்சத்தில் அவர்களின் இராணுவ அடையாள அட்டையை வாங்கிப் பார்க்கும் உரிமை உங்களுக்கு உண்டு. அதனைப் பார்வையிடத் தந்தால் மட்டும் அதை வாங்கிப் பதிந்து வைத்த பின்னர் உரையாடுங்கள். அந்த விவரம் பயன் மிக்கதாக அமையும் – என்றார். (த-10)

# பிள்ளையானின் விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

கல்முனை, டிசெ.18

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் விளக்கமறியல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கடந்த 2005ஆம் ஆண்டு டிசெம்பர் 25ஆம் திகதியன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற நள்ளிரவு ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த ஒக்ரோபர் 11ஆம் திகதியன்று பிள்ளையானைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் பிள்ளையானை கடந்த 2ஆம் திகதி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முற்படுத்திய போது அவரை நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் என்.எம்.அப்துல்லாஹ் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் நீதிமன்றில் பிள்ளையானை முற்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் என்.எம்.அப்துல்லாஹ் கட்டளையிட்டார். (த-வ)




பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்
- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணக் கிளையில்

ஜனவரி மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?
- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு
  வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டு
- பிள்ளைகளுக்கு(6-15 வயதிற்கு உட்பட்டோர்களுக்கு) உங்கள் பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 1000

49 அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 3
தொ.பே (011) 4521521, (011) 7521521
அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை 0830–1800

88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொ.பே (081) 7222410
அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை: 0900–1730
ஞாயிறு: 0900–1600

70 ரக்கா வீதி, சண்டிக்குளி யாழ்ப்பாணம்
தொ.பே (021) 7521521
அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை 0830–1800

நாங்கள் Apex Business Academy உடன் இணைந்து எங்கள் பாடநெறிகளை நடாத்துகின்றோம். மாத்தறை (041)2229555, காலி (091)2232755

www.britishcouncil.lk

# சித்தியெய்தாத மாணவருக்கு உருவாகின்றது பொறிமுறை

யாழ்ப்பாணம், டிசெ. 18

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறும் மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கேற்றதாகப் பொறிமுறை ஒன்றை உருவாக்கவுள்ளதாகக் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

> பரீட்சையில் 90 ஆயிரம் மாணவர்கள் சித்தியடையத் தவறிவிடுகின்றனர். அதனால் அவர்கள் உயர் கல்வியைத் தொடர முடிவதில்லை.

குறித்த பரீட்சையில் 90 ஆயிரம் மாணவர்கள் சித்தியடையத் தவறிவிடுகின்றனர். அதனால் அவர்கள் உயர்கல்வியைத் தொடரமுடிவதில்லை.

உயர்கல்வியைத் தொடர்வதற்கான வேறு வாய்ப்புக்கள் அவர்களுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை.

இதனால் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுப்பதாக அந்தப் பொறிமுறை அமையும். இதற்கான திட்டப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது சிறந்தது என்பதனால் அதனைச் செயற்படுத்தவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (த-4)

> இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் முதன்முறையாக தோல்வியான வரவு–செலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# அண்ணனும் தம்பியும் சபையில் சொற்போர்

கொழும்பு, டிசெ 18

அண்ணன் தம்பியான ஐ.ம.சு. முன்னணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேவும், ஐ.தே.கவின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகேவும் கடந்த செவ்வாய்க்கிழமை சபையில் கடுமையான வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டனர்.

இதன்போது இருவரும் ஒவ்வொருவரினது தனிப்பட்ட வாழ்க்கை குறித்தும் மாறிமாறி விமர்சனங்களை முன்வைத்ததால் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன. இதையடுத்து கடுந்தொனியில் எச்சரித்து சபையைக் கட்டுப்படுத்தினார் பிரதிச் சபாநாயகர். நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சு, அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் ஐ.ம.சு.முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே உரையாற்றியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத் கமகே –

இலங்கையின் நாடாளுமன்ற வரலாற்றில் முதன்முறையாக தோல்வியான வரவு–செலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், அரசின் கொள்கைப் பிரகடனம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தச் சபையில் உரையொன்றை நிகழ்த்தினார்.

இதையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசின் இடைக்கால பொருளாதாரக் கொள்கையொன்றை வெளியிட்டார். இதன் பின்னர் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க வரவு–செலவுத் திட்ட உரையைச் சமர்ப்பித்தார். நிதி அமைச்சர் மீது ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் நம்பிக்கையில்லை.

இதனால்தான் அவர்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளார்கள்– என்றார்.

பின்னர் அரசையும், சபையிலிருந்த ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் சிலரையும் வசை பாடியவாறு கருத்து வெளியிட்டுக் கொண்டிருந்தார். இதன்போது கொதித்தெழுந்த அவரது சகோதரரான ஆனந்த அளுத்கமகே, மஹிந்தானந்தவுக்கு எதிராக கூச்சலிட்டவாறு இருந்தார். இதனையடுத்து, மஹிந்த ஆதரவு தரப்பிலிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஹிந்தானந்தவுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க, சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

இருவரும் தனிப்பட்ட வாழ்க்கை குறித்து விமர்சித்துக் கொண்டனர். இதன்போது சபைக்குத் தலைமைதாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் எட்வர்ட் குணசேகர, இந்தக் கூச்சல் குழப்பத்தை முடிவுக்கு கொண்டுவர பல தடவைகள் முயற்சித்த போதும், அது பயனளிக்கவில்லை. கூச்சலும் குழப்பமும் தொடர்ந்தவாறே இருந்தன.

இதையடுத்து பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால சபா பீடத்துக்குத் தலைமையேற்றார்.

இவர் தலைமையேற்றபோதும் இரு தரப்பிலும் கூச்சலும், குழப்பமும் ஓயவில்லை. ஆனந்த அளுத்கமகே தொடர்ந்தும் கூச்சலிட, கூச்சலிடுவதை நிறுத்திவிட்டு அமைதியாக ஆசனத்தில் அமருங்கள். இல்லாவிட்டால் உங்களைச் சபையிலிருந்து வெளியேற்றவேண்டியேற்படும் என்று பிரதிச் சபாநாயகர் கடுந்தொனியில் உத்தரவிட அமைதியாக ஆசனத்தில் அமர்ந்தார் ஆனந்த அளுத்கமகே. இதனையடுத்து தனது சகோதரனை மறைமுகமாக விமர்சித்தவாறு உரையைத் தொடர்ந்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.18
தெல்லிப்பழை வித்தகபுரம் சிவகுருநாத சுவாமி ஆலயத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் நிர்வாக புனரமைப்பு மற்றும் வருடாந்த உற்சவம் பற்றிய கலந் துரையாடல் என்பன நடைபெறவுள்ளன. (ற-ஐ-ரி6)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ,18
இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால்முதல்முறையாகதமிழ் மொழிமூலம்முன்பிள்ளைப்பருவம் மற்றும் ஆரம்பக் கல்வியியல் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்துக்குபுதியமாணவர்களைச்சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இதற்கு விண்ணப்பிப்பவர்கள் 18 வயதைப் பூர்த்தி செய்திருப்பதுடன், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியுடன்,க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது திறந்த பல்கலைக் கழகத்தின் அடிப்படைக்கற்கைநெறிகளில் ஏதாவது ஒன்றைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ற-ஐ-ரி6)

## ஒத்திவைப்பு

சாவகச்சேரி,டிசெ.18
தென்மராட்சி கல்வி வலயத்தால் நாளை சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்படவிருந்தஏழிசை மாலை 11 தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப் பட்டுள்ளது.
குறித்த நிகழ்வு 2016 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடை பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ற-ஐ-9)

## குடற்புண் தினம் கடைப்பிடிப்பு

சாவகச்சேரி, டிசெ.18
உலக குடற்புண் தினம் நேற்று முன்தினம் சாவகச்சேரி வைத்தியசாலையில் கடைப்பிடிக்கப்பட்டது. மருந்துகள் விநியோக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்றநிகழ்வில், வைத்தியசாலையின்வைத்திய அதிகாரிகளுக்கு விழிப்புணர்வுக் கருத்துரைகளும் வழங்கப்பட்டன. (ற-ஐ-9)

## குடும்பஸ்தர் காயம்

சாவகச்சேரி, டிசெ.18
வடி வாகனத்திலிருந்து தவறி விழுந்து குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி ஏ-9 வீதியில் நடந்துள்ளது.
வடி வாகனத்தில் பயணித்த குறித்த நபர் எச்சில் துப்புவதற்காக வெளியே தலையை நீட்டியபோது, வாகனத்தை முந்த முயன்றஓட்டோதலையில்மோதியதில் வடியில் இருந்து தவறி விழுந்துள்ளார். தலையிலும்முதுகிலும் காயமடைந்த நிலையில் குறித்தநபர் சாவகச்சேரிவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ-9)

# புலம்பெயர் தமிழர் தமது காணிகளை வறிய மக்களுக்கு வழங்கவேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 18
தாயகத்திலே உதிரிகளாகக் காணிகளை வைத்துள்ள புலம்பெயர் தமிழர்கள், அவற்றில் ஒரு பகுதியைக் காணிகளற்ற - வறுமையில் வாடும் எமது மக்களுக்கு வழங்குவதற்கு முன்வரவேண்டும். இதற்கான கோரிக்கையை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் விடுக்க வேண்டும்.
இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் வரவு-செலவுத் திட்டத்தில் முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்குமாகாணத்தில்போரினால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமத்துவக் குடும்பங்கள், வீட்டுக்கு உழைக்க கூடிய பிள்ளைகளை, கணவனைப்போரில் இழந்த குடும்பங்கள் எனப் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வறுமையோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்கு வீடுகளை, காணிகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.
அவர்களுடைய வாழ்க்கையில் முதலமைச்சர் மறுமலர்ச்சியை உண்டாக்க வேண்டும். புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர் தங்கள் சொந்த மண்ணில் உதிரியாகப் பல காணிகளை வைத்திருக்கின்றார்கள். பலர் வெளிநாடுகளில் வசதி படைத்தவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே முதலமைச்சர் புலம்பெயர்தமிழர்களிடம் பகிரங்கமான அழைப்பை அல்லது கோரிக்கையை விடுக்கவேண்டும்.
உதிரியாகப் பல காணிகளை வைத்திருப்பவர்கள் அவற்றில் சிறு பகுதியை வழங்கலாம். வசதி படைத்தவர்கள் ஒரு வீட்டை அமைத்துக் கொடுக்கலாம். அவ்வாறு கிடைக்கின்றபோது எங்கள் மாகாணத்தில் காணி இல்லாத, வீடு இல்லாத மக்கள் இல்லை என்ற நிலையை உருவாக்க முடியும்.
வடக்கு மாகாண முதலமைச்சரைப் பல்வேறு நாடுகளின் தூதுவர்களும் சந்திக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் முதலமைச்சர் இந்தக் கோரிக்கையை முன் வைத்து, வீடுகளை எங்களது மக்களுக்குப் பெற்றுத் தர வேண்டும் - என்றார்.(த-5-ரி5)

## 10 சாரதிகளுக்கு ரூ.88,500 அபராதம்

சாவகச்சேரி, டிசெ.18
போக்குவரத்து விதிமுறைகளை மீறி மதுபோதையில் வாகனங்களைச் செலுத்திய 10 சாரதிகளுக்கு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் மொத்தமாக 88 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்குகள் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை அபராதம் விதித்துள்ளார்.
மதுபோதையில் உழவு இயந்திரம் செலுத்திய சாரதிக்கு 19 ஆயிரம் ரூபாவும், சாரத்திய அனுமதிப்பத்திரமின்றி மது போதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 13 ஆயிரம் ரூபாவும் மேலும் மூவருக்கு தலா 10 ஆயிரத்து 500 ரூபா வீதமும் மேலும் ஒருவருக்கு 9 ஆயிரம் ரூபாவும், தலைக் கவசமின்றி மதுபோதையில் மோட்டார்சைக்கிள் செலுத்தியவருக்கு 7 ஆயிரம் ரூபாவும், சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய மூவருக்கு தலா.3 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது. (ற-ஐ-9)

# வெள்ளம் பாய்வதற்காக வெட்டப்பட்ட வாய்க்காலால் போக்குவரத்துத் தடை

சாவகச்சேரி,டிசெ.18
மழை வெள்ளம் பாய்வதற்காக வீதியில்வெட்டப்பட்ட வாய்க்கால் பெரும் குழியாக மாறியுள்ளது. அதனால் இரு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றி வேறு வீதிகளால் பயணிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
மறவன்புலவு மேற்கில் உள்ள மணல்காடு வீதி அந்தப் பகுதி மக்களின் வேண்டுகோளை அடுத்து சாவகச்சேரி பிரதேச சபையால் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டது.
வீதி அமைக்கும் போது உயரமாக அமைக்கப்பட்டதால் மழை வெள்ளம் வெளியேறமுடியாமல் குடியிருப்புக்களுக்குள் வெள்ளம் தேங்கியது. அதனால் பிரதேச சபைக்கு அறிவிக்காமல் அங்குள்ள சிலர் வீதியில் அரை அடி ஆழத்துக்கு வாய்க்கால் வெட்டி வெள்ளத்தைப் பாயவிட்டனர்.
அந்தப் பகுதியில் பல இடங்களில் காணப்பட்ட வெள்ளம் வெட்டப்பட்ட சிறிய வாய்க்கால் ஊடாகப் பாயத் தொடங்கியது. அதனால் சுமார் அரை அடிக்கு வெட்டப்பட்ட வாய்க்கால்தற்போது மூன்று அடி ஆழமாக மாறியுள்ளது. இதனால் வீதியைப் பயன்படுத்த முடியாத நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.
வாய்க்கால் ஊடாகப் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதால் இரு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வேறு பாதைகளில் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பயணிக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பாக பிரதேச சபைக்கு அறிவித்ததையடுத்து அங்கு வந்த பிரதேச சபையின் செயலாளர்உட்படஅலுவலர்கள் வாய்க்காலைப் பார்வையிட்டு தொடர்ந்து வாய்க்காலால் வெள்ள நீர் பாய்ந்து கொண்டிருப்பதால் தற்காலிகமாக வீதியைப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துள்ளனர். (ஐ-9)

# மருந்து கொடுத்த பாட்டியின் காலை உடைத்தார் பேர்த்தி

## மீசாலையில் சம்பவம்

சாவகச்சேரி,டிசெ.18
மனநல சிகிச்சைப் பிரிவில் வழங்கப்பட்ட மாத்திரைகளை அருந்துமாறு வற்புறுத்திய தனது பாட்டியின் காலைக் கொட்டனால் தாக்கி முறித்துள்ளார் பேர்த்தி. இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் மீசாலையில் இடம்பெற்றது.
தாக்குதலுக்கு இலக்கான பாட்டி சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.
தற்போது நிலவும் [illegible] கூடிய வெப்ப நிலை [illegible] குன்றியவர்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் கிளினிக்கில்வழங்கப்பட்ட மாத்திரைகளை காலக்கிரமப்படி வழங்குமாறு வைத்திய நிபுணரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
அதைக் கருத்திற் கொண்டு பேர்த்தியை மாத்திரைகளை உரிய நேரத்தில் அருந்துமாறு பாட்டி கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பேர்த்தி அங்கு காணப்பட்ட கொட்டனால் பாட்டியை மோசமாகத் தாக்கியுள்ளார்.
தாக்குதலுக்கு இலக்கான பாட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ற-ஐ-9)

# வாசிப்பு மாதப் போட்டிகளின் பரிசில் வழங்கல் நிகழ்வுகள்

சாவகச்சேரி, டிசெ.18
நாவற்குழி பொது நூலகத்தால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் பரிசில் வழங்கல் நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பிரதேச சபைச் செயலாளர் திருமதித.தயாநந்தன்தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக நாவற்குழி மகா வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் திருமதி வசந்தாதேவி மேகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.
நிகழ்வில்தேசியவாசிப்புமாதத்தை முன்னிட்டு நாவற்குழி பொது நூலகத்தால் முன்பள்ளிச் சிறார்கள், பாடசாலை மாணவர்கள், வாசகர்கள் ஆகியோருக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டோருக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ற-ஐ-9)

# ஜோன்ஸ்டன் எம்.பிக்கு நிபந்தனையுடன் பிணை

கொழும்பு, டிசெ 18
சொத்துக் குவிப்பு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள முன்னாள் வர்த்தக அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு கடும் நிபந்தனைகளுடன் கொழும்பு நீதிவான்நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை பிணை வழங்கியுள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியில் அமைச்சராக இருந்த ஜோன்ஸ்டன் அக்காலப்பகுதியில் தனது சொத்துகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரிய தகவல்களை வழங்கத் தவறியிருந்தார். இதனால் சொத்துக்குவிப்பு உள்ளிட்ட 5வழக்குகளைஅவருக்குஎதிராகஇலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழு கடந்த நவம்பர் 27ஆம் திகதி தாக்கல் செய்திருந்தது.
அதன் மீதான விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.
இதன்போது, நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு ஒரு வழக்குக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் 5 வழக்குகளுக்கும் தலா 50ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் ஒரு வழக் குக்கு 10 லட்சம் சரீரப்பிணை விகிதம் ஐந்து வழக்குகளுக்கும் 50 லட்சம் ரொக்கப்பிணை வழங்கி விடுதலைசெய்யுமாறு கொழும்பு பிரதம நீதிவான் கிஹான் பிலப்பிடிய உத்தரவு பிறப்பித்தார்.
மேலும், சந்தேகநபரான ஜோன்ஸ்டன் வெளிநாடுகளுக்குச் செல்லத் தடை விதித்த நீதிவான், அத்தியாவசிய வெளிநாட்டுப் பயணங்களுக்காக நீதிமன்ற அனுமதியைப்பெற்றுவெளிநாடு செல்லமுடியும் எனவும் உத்தரவிட்டார்.
ஜோன்ஸ்டன் தரப்புச் சட்டத்தரணிசொத்துகள்மற்றும்பொறுப்புகள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரத்தில் சட்ட இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளதில் தவறு ஏற்பட்டுள் ளதாகக் குறிப்பிட்டார்.
இது தொடர்பிலான அடுத்த வழக்கு விசாரணையின்போது அதில் சீர்திருத்தம் செய்து நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும், இவ்வழக்கு அடுத்தவருடம் ஏப்ரல் 27ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லாட்சி அரசின் போக்கு; நட்டாற்றில் விழுத்துமோ...?

நல்லாட்சி அரசு என்று தனக்குத்தானே முத்திரை குத்தியுள்ள மைத்திரி - ரணில் அரசு, அடக்குமுறையில் ஆட்சி நடத்த ஆயத்தம் ஆகிறதா?

மேற்கண்டவாறு, கடும்தொனியில் வினாத் தொடுத்துள்ளார் ஜாதிகவிமுக்தி பெரமுனவின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் விஜித ஹேரத்.

கடந்த வாரத்தில், அரசு அவசர அவசரமாக குற்றவியல் சட்டக்கோவைக்குத் திருத்தத்தை சபையில் சமர்ப்பித்திருந்தது. அதனைச் சுட்டிக்காட்டியே அவர் மேற்சொன்ன கேள்வியைச் சபையில் எழுப்பினார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கப் போவதாகக் கொக்கரித்த அரசு, அந்தச் சட்டத்தில் உள்ள பயங்கரமான சரத்துக்களை, சாதாரண சட்டத்துக்குள் உட்புகுத்தி, மீண்டும் அடக்குமுறையை நாட்டில் கட்டவிழ்த்துவிடத் துணிந்துவிட்டதா என்றும் அவர் தட்டிக் கேட்டிருக்கின்றார்.

1887 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களைப் புகுத்துவது, உள்ளார்ந்த ஒவ்வாத நோக்கம் கொண்டது என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

அரசின் இந்தப் போக்கு, செயற்பாடு, மீண்டும், அடக்குமுறையை உற்பவிப்பதற்கான எடுகோள் என்று கொள்வது தப்பன்று.

பயங்கரவாதச் சட்டத்தை நீக்கப்போவதாக புலுமாசாகக் கூறிவிட்டு, சாதாரணமான சட்டமான குற்றவியல் சட்டக்கோவைக்குள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் சில சரத்துக்களை உட்புகுத்துவது மக்களை ஏமாற்றும் கோணல் புத்தி அன்றி வேறில்லையே?

மேலும் -

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்வது இலகுவானது அல்ல. அதற்கெனச் சிக்கலான நடைமுறைகள் உள்ளன. அவற்றை சாதாரண சட்டத்துக்குள் -- குற்றவியல் கோவைச் சட்டத்துக்குள் -- உள்ளீர்க்க முயல்வது அடக்குமுறையை உண்டாக்கும் முயற்சி என்று நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

அது மட்டுமன்றி, இன்று வெள்ளிக்கிழமை (18. 12. 2015) நீதிமன்றங்களுக்கு விடுமுறை நாள். ஆகையால், இந்த விவகாரத்தை நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லவும் இயலாது.

ஆகையால், இது நல்லாட்சி அரசின், திட்டமிட்ட செயற்பாடோ (சதியோ) என்று சந்தேகம் கொள்ள வைக்கிறது!

மறுபுறத்தில், ஊடுருவி நோக்கின் -- பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் இரண்டாவது பிரிவுக்கு அமையவே, கடந்த காலத்தைய அரசுகள் தமிழ் மக்களை ஒடுக்குமுறைகளுக்கு ஆட்படுத்தி வந்தன. அதற்குப் "புனுகு பூசி", மீண்டும் ஒருவகையான அராஜகத்தை மேலெழுப்பும் உள்நுழைப்புத் திட்டத்தை, செயலாக்க, இப்போது நல்லாட்சி அரசு முனைந்துள்ளது!

புதிய அரசு நல்லது செய்யும் என்று எதிர்பார்த்த, மனப்பால் குடித்த தமிழ் மக்கள் --

யாரொடு நோவோம் யார்க்கு எடுத்து உரைப்போம் -- என்று வெளிப்படையாக வாய்விட்டு அழும் நிலைதான், மிஞ்சப் போகிறதோ.....!

# ரணில் விக்கிரமசிங்க மீண்டுமொரு பாடத்தை இந்தியாவிடமிருந்து கற்றுக் கொள்ளுவாரா?

பாரதீய ஜனதாக்கட்சியின் ஆசியுடன், சந்திரிகா குமாரதுங்கவின் அரசைத் தோற்கடித்து 2001இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. ஐ.தே.க எவ்வாறு இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது என்பதில் எவ்வித இரகசியமும் இல்லை.

இதேபோன்று, சில ஆண்டுகளின் பின்னர், கொழும்பிலுள்ள இந்திய உயர் தானிகராலயத்தின் உதவியுடன், ரணில் அரசைக் கவிழ்ப்பதற்காக ஐ.தே.க அரசின் முக்கிய மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை சந்திரிகா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார் என்பதும் வெளிப்படையான இரகசியமாகும்.

பலாலி விமானப்படைத் தளத்தின் மீள்கட்டுமான ஒப்பந்தத்தைதான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இலங்கையின் ஆட்சி மாற்றத்துக்கு இந்தியா ஆசி வழங் கியதன் அடிப்படை நோக்காகும்.

அப்போதைய பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவால் எழுதப்பட்ட My Belly is White' என்ற நூலில் இந்த விடயம் மிகவும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தநூலில் காணப்படும் கீழே தரப்பட்டுள்ள பந்தியானது இந்தியாவின் தலையீட்டின் பின்னணியைத் தெளிவாக விளக்குகிறது.

### சந்திரிகாவின் நடவடிக்கை

மிலிந்த மொறகொடவின் தலையீட்டுடனோ அல்லது அது இன்றியோ சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சை சட்டரீதியாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். இதனால் 2003 நவம்பர் 03ஆம் திகதியிலிருந்து உடனடியாக எனது பாதுகாப்புச் செயலர் பதவி பறிக்கப்பட்டது.

சந்திரிகாவால் ரணிலிடமிருந்து பாதுகாப்பு அமைச்சுப் பறிக்கப்படுவதற்கு இந்தியா தலையீடு செய்திருக்குமா என நான் இங்கு கூறவில்லை. ஆனால் இந்தியாவின் இத்தலையீடானது ரணில் விக்கிரமசிங்க அரசின் கீழ் இந்தியாவின் உதவியுடன் பலாலி விமானத் தள மீள்புனரமைப்பு மேற்கொள்ளப்படுவதற்குக் காரணமாக அமைந்தது.

2004இல் தனது பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க பறிகொடுத்ததன் பின்னர் தற்போது தான் அதாவது மைத்திரிபால சிறிசேன அதிபர் தேர்தலில் வென்ற பின்னரே மீண்டும் ரணில் இந்நாட்டின் பிரதமராக வர முடிந்துள்ளது.

மைத்திரி அதிபர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு இந்தியா ஆதரவாக இருந்ததாக, மகிந்த தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர். இந்தக் குற்றச்சாட்டானது இன்னமும் உறுதிப்படுத்தப்படாது விட்டாலும் கூட, இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி வெற்றி பெறுவதற்கு இந்தியாவின் ஆசிகளும் நிச்சயமாகக் கிடைக்கப் பெற்றன.

### இந்தியாவிடமிருந்து எதிர்ப்புக்கள்

தற்போது, 2003இல் இடம் பெற்றமை போன்று, மைத்திரி- ரணில் அரசு இம்முறையும் இந்தியாவிடமிருந்து சில எதிர்ப்புக்களுக்கு முகங்கொடுத்துள்ளது.

இந்தப் பிரச்சினையானது முன்னர் அதிபராக இருந்த மகிந்த ராஜபக்சவின் நடவடிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகும். தனது ஆட்சிக் காலத்தின் போது மகிந்த ராஜபக்சவின் அரசானது பாகிஸ்தானுடன் போர் விமானக் கொள்வனவு தொடர்பில் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தது. ஆகவே இந்தக் கொள்வனவை மேற்கொள்வதென தற்போதைய மைத்திரி- ரணில் அரசும் தீர்மானித்துள்ளது.

உயர் மட்ட இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து வெளிவரும் தகவல்களின் பிரகாரம், இலங்கை அரசினால் பாகிஸ்தானிடமிருந்து பத்து JF-17 போர்விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் செய்யப்படுவதை இந்தியா பலமாக எதிர்த்துள்ளது.

முன்னாள் விமானப் படைத் தளபதி ஜெயலத் வீரக்கொடி, பாகிஸ்தானுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராகக் கடமையாற்றியபோதே இந்த இணக்கப்பாடு மேற்கொள்ளப்பட்டது. ஒற்றை இயந்திரம் பொருத்தப்பட்ட, இலகுரக, ரகத்தைச் சேர்ந்த இந்தப் போர் விமானங்கள் பல்நோக்குப் பயன்பாடு கொண்டவை.

### பாகிஸ்தானிய விமானங்கள்

இவை பாகிஸ்தானிய விமான வளாகம் மற்றும் சீனாவின் செங்டுவிமானக்கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டும் இணைந்து தயாரித்தவையாகும். JF -17 போர் விமானங்களை உளவு பார்ப்பதற்கும், போர்க்களங்களில் தாக்குதல்கள் நடத்துவதற்கும் விமானங்களை இடைமறிப்புச் செய்வதற்கும் பயன்படுத்த முடியும். பாகிஸ்தானால் இந்த போர் விமானங்களுக்காகச் சூட்டப்பட்டுள்ள JF-17 என்ற பெயரானது பாகிஸ்தானிய இராணுவத்தினரின் தேவையை நிறைவு செய்வதற்காக உருவாக்கப்பட்ட கூட்டுப் போர்விமானம் -17' (Joint Fighterd17') என்பதன் சுருக்கமாகும்.

பாகிஸ்தானிடமிருந்து இலங்கை இவ்வகைப் போர் விமானங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் இந்தியா தனது எதிர்ப்பைக் காண்பிப்பதாக அதிபர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தனிப்பட்ட ரீதியாகத் தனது கருத்தை வெளிப்படுத்தியிருந்ததாக இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.


அதிபர் சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரிட மும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட டோவல், பாகிஸ்தானுடனான சிறிலங்காவின் போர் விமானக் கொள்வனவை எதிர்ப்பதாக இந்திய அரசு தெரிவித்திருந்தார்.

இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி இலங்கை தொடர்ந்தும் பாகிஸ்தானுடன் தொடர்பைப் பேணினால் இது தீவிர அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும் என டோவல் எச்சரித்திருந்தார்.

மறுபுறத்தே நோக்கும்போது, இலங்கை மூன்று கடற்படைக் கப்பல்களை இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்வதாகத் தெரிவித்திருந்தது. ஆனாலும் இந்தியா தனது நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்கவில்லை. பாகிஸ்தானைவிட வேறெந்த நாடுகளிலிருந்தும் இலங்கை தனக்குத் தேவையான விமானங்களைக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொள்வனவு செய்ய வேண்டும் என இந்தியா நிபந்தனை விதித்தது.

இவ்வாறானதொரு சூழலில், இலங்கை தன்னிடமிருந்து போர் விமானங்களைக் கொள்வனவு செய்தால், பத்து Fd7 விமானங்களை புதுப்பித்து வழங்குவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

அடுத்த ஜனவரியில் பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் செரீப் இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொள்ளும்போதே இது தொடர்பாக அறிவிப்பதென அந்தநாடு திட்டமிட்டுள்ளது.

தற்போதைய இலங்கையில் மைத்திரி-ரணில் அரசும் போன்றே 1970- 1977 காலப்பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசும் இந்தியாவுடன் நட்புறவைப் பேணியது.

ஆனால் பங்களாதேஷ் போரின்போது பாகிஸ்தானியப் போர் விமானங்கள் கொழும்பில் எரிபொருளை நிரப்புவதற்கு சிறிமாவோ பண்டாரநாயக்க அனுமதித்ததால் இந்தியா எரிச்சலுற்றது. அணிசேரா கோட்பாடு தொடர்பாக எழுதப்பட்ட நூலிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் பத்தியானது இந்த விடயத்தை மேலும் தெளிவுபடுத்துகிறது.

1971 இல் இந்திய-பாகிஸ்தானிய போர் இடம்பெற்றபோது, இது தொடர்பில் இலங்கை எவ்விததலையீடும்செய்யவில்லை. அந்தப் போர் முடிந்ததன் பின்னர், 1971 மார்ச் வரை பங்களாதேசை இலங்கை இராஜ தந்திர ரீதியாக அங்கீகரிக்கவில்லை. ஆனாலும் பாகிஸ்தானியப் போர் விமானங்களுக்கு இலங்கை தனது நாட்டில் எரிபொருள் நிரப்புவதற்கான அனுமதியை வழங்கியதானது இந்தியாவை எரிச்சலடையச் செய்துள்ளது என்பதை அறிந்த இலங்கை குழப்பமுற்றது.

இது தொடர்பாக பிரபல இந்தியப் பாதுகாப்பு ஆய்வாளர் ஆர்.சுப்பிரமணியம் இந்தியாவும் அதன் வெளியுறவு மீள்பார்வையும் என்கின்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் அதன் அயல்நாடுகள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பரஸ்பரம் உதவிகளைப் பெற்று வருகின்றன. இதுபோன்றே பண்டாரநாயக்க அரசானது தனது நாட்டில் ஜே.வி.பி கிளர்ச்சி ஏற்பட்டபோது இந்தியாவின் உதவியை நாடியது.

இதற்கு முன்னர் 1971இல் கொழும்பின் ஊடாக டாக்காவுக்கு பாகிஸ்தானியப் படைகள்கொண்டுசெல்லப்பட்டனஎனவும் குற்றம் சாட்டப்பட்டது.

உண்மையில் 1965ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்திய வட்டாரங்களுக்குள் இதையொத்த சந்தேகங்கள் தோன்றியபோது, பாகிஸ் தானிய இராணுவ விமானங்கள் கொழும் பின் ஊடாகவே தமது நாட்டின் மேற்குப் பகுதியிலிருந்து கிழக்குப் பகுதிக்குச்சென்றன.

> “இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி இலங்கை தொடர்ந்தும் பாகிஸ் தானுடன் தொடர்பைப் பேணினால் இது தீவிர அச்சுறுத்தல் களுக்கு முகங் கொடுக்க வேண்டி யேற்படும் என டோவல் எச்சரித்தி ருந்தார்.”

தனது நாட்டின் துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஏனைய நாடுகள் தமது இராணுவப் படைகள் மற்றும் போர் சார்ந்த ஆயுததளபாடங்களைக் கொண்டு செல்வதற்கு இலங்கை ஒருபோதும் அனுமதிக்காது என இலங்கை மிகத் தெளிவாக அறிவித்த பின்னரும் கூட, மருத்துவ வழங்கல்களுடன் பாகிஸ்தானிய விமானம் கொழும்பின் ஊடாகப் பறப்பில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

### விழிப்புடன் செயற்படுதல்

இலங்கையின் இந்த வரலாற்றையும் 2003 ஆம் ஆண்டில் பலாலி விமானத் தளம்தொடர்பான சம்பவங்களையும் ஆராயும் ஒருவர், இந்தியாவுடன் தொடர்பைப் பேணுவதில் விழிப்புடன் செயற்படுவார். இந்த உண்மையை மகிந்த உணரத் தவறிவிட்டார். மைத்திரிக்கு அப்பால், 2004இல் இந்தியாவின் தலையீட்டால் ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்ட ரணில் இந்தியாவிடமிருந்து இலங்கை கற்றுக்கொண்ட பாடத்தை மீளவும் கற்றுக்கொள்ள வேண்டிய தேவையிருக்காது.

மூலம்–சிலோன் ருடே
நன்றி–புதினப்பலகை

## பொறுப்பற்ற செயல்களை நிறுத்த முடியாதா?

கடந்த மாதம் 10ஆம்திகதிவியாழக்கிழமை காலையில் யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒரு தனியார் பஸ்சேவை நிறுவனத்தின் பதிவகத்தில் எனது மனைவியும் மகளும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் திரும்புவதற்கு ஆசனப்பதிவுக்குச்சென்றிருந்தேன்.

நான் அவர்களிடம் தெளிவாகக் கூறினேன், கொழும்பிலிருந்து யாழ்.நகர் வந்து, பின்னர் நல்லூர் வழியாகச் செல்லும் பஸ் எதுவோ, அதில் ஆசனம் பதிவு செய்யும்படி.அங்கிருந்தவர், பஸ் நல்லூர் வழியாகத்தான் செல்லும். எனவே அதற்கு ஆசனப் பதிவு செய்கி றோம் என்று கூறிப் பதிவு செய்தார்கள்.

குறிப்பிட்டதினத்தில்கொழும்பில்பஸ்ஸில் மனைவியும் மகளும் ஏறியவேளையிலும்கூட, குறித்த பஸ் நல்லூர் வழியாகத்தான் செல்லும் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள். பஸ்ஸும் யாழ். நகரை அடைந்த பின்னர் கே.கே.எஸ்.வீதி வழியாகச் செல்வதை உணர்ந்து அதுபற்றிக் கேட்டபோது நல்லூரால் செல்லாது என்று கூறி கொக்குவில் சந்தியில் இறக்கிவிட்டுச் சென்று விட்டார்கள்.

அந்த அதிகாலை வேளையில் மிகவும் சிரமப்பட்டு மனைவியும் மகளும் முச்சக்கர வண்டியில் வீடு வந்து சேர்ந்தார்கள். இது குறித்து கொழும்பில் குறித்த நிறுவனத்தின் பொறுப்பானவர்களிடம் கதைத்தபோது, தாங்கள் நல்லூரால் போவதில்லையென்றும் இது யாழ்ப்பாணத்தில் பொறுப்பாக உள்ளவர்களின் தவறென்றும் கூறினார்கள். இரு பகுதியினரும் பொறுப்பற்ற விதத்தில் பதில் வழங்கினார்கள்.

அதிகாலை வேளையில் பெண்களிருவரும் முச்சக்கரவண்டியில் பய ணிப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை யாழ்ப்பாணத்தில் தற்போது நடைபெற்று வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். நல்லூர் வழியாக பஸ் வரும் என்ற உறுதிமொழிவழங்கியகாரணத்தால்தான் நான் குறித்த பஸ்ஸில் வர ஒழுங்கு செய்தேன்.

இப்படிநடந்ததுக்குநடவடிக்கைஎடுக்குமாறு எவரிடம் சென்று முறையிடுவது? மேல் நீதிமன்ற நீதிபதியிடமா? அல்லது தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவிடம் முறையிடலாமா? என் போன்று எத்தனை பேர் இவர்களின் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டிருப்பார்கள்? பெண்களின் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வு நாடெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக் கும் வேளையில் [illegible] இடம்பெறாது [illegible] முடியாதா?

சூ.மைக்கல், யாழ்ப்பாணம்

## விலைகளைக் கட்டுப்படுத்துவார்களா?

கடைகளில் தீப்பெட்டிகளின் விலைகள் திடீரென பல மடங்கு அதிகரிக்கப்பட்டதால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐந்து ரூபாவுக்கும் உட்பட்ட விலையில் விற்கப்பட்ட தீப்பெட்டிகள், தற்போது ஆபத்து மடங்கு விலை உயர்வுடன் விற்பனை செய்யப்படுவதைக் காணமுடிகின்றது. நல்லூரில் உள்ள ஒரு கடையில் தீப்பெட்டி ஒன்றை 50 ரூபா கொடுத்து வாங்கியதாகக் குடும்பஸ்தர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

தீப்பெட்டிகளை உற்பத்தி செய்வதற்கான இரசாயன மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இதனால் தீப்பெட்டிகளை உற்பத்தி செய்ய முடியாததால் அவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் ஒரு வதந்தி கிளம்பிய மறுகணமே தீப்பெட்டிகளின் விலைகள் தாறுமாறாக அதிகரித்து விட்டன.

சில வர்த்தகர்கள் மனச்சாட்சி எதுவுமே இல்லாது தீப்பெட்டிகளின் விலையைத் தமது இஷ்டம் போன்று அதிகரித்துள்ளனர். அரசு இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்காதுவிட்டால் பாவனையாளர்களே பாதிக்கப்படப் போகிறார்கள்.

இதேவேளை வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் சில பொருள்களின் விலைகள் குறைக்கப்படாது பழைய விலைகளிலேயே விற்பனை செய்யப்படுகின்றன. குறிப்பாக மக்கள் தினமும் பயன்படுத்தும் அங்கர் பால்மா பழைய, அதிகரித்த விலைகளிலேயே விற்பனை செய்யப்படுகின்றன.

மகுறிப்பாக மக்கள் தினமும் பயன்படுத்தும் அங்கர் பால்மாவின் விலை குறைக்கப்படவேயில்லை. அரசு என்னதான் சலுகைகளை அறிவித்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதில்தான் சிக்கல் நிலவுகின்றது.


உரிய அதிகாரிகள் விலை விவரங்கள் தொடர்பாக விற்பனை நிலையங்களைக் கண்காணிக்காது விட்டால் பாவனையாளர்கள் பாதிக்கப்படவே செய்வார்கள். தற்போதும் இதுதான் நடந்து வருகின்றது.

ஆகவேஉரியஅதிகாரிகள்பொறுப்புடன்செயற்பட்டுவிலைகளைக்கட்டுப்படுத்துவதற்கு [illegible] வேண்டும்.

பா.பிரகாஸ், நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook
Twitter :




# சூமா ஒழிக

## தென்ஆபிரிக்க அதிபருக்கு எதிராக மக்கள் திரள் பெரும் போராட்டம்

ஜொகன்ஸ்பேர்க், டிசெ. 18
தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா பதவி நீக்கம் செய்யப்படவேண்டும் என்று வலியுறுத்தி லட்சக்கணக்கானோர் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தலைநகர் ஜொகன்னஸ்பேர்க் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் பலவற்றிலும் நேற்று ஒரே நேரத்தில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இரு நிதி அமைச்சர்களை பதவி நீக்கியமை, பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மையை உருவாக்குகின்றது என்று தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

"சூழா கட்டாயம் வீழவேண்டும்" என்கிற பட்டையை சமூக வலைப் பதிவர்கள் பெருமளவில் பயன்படுத்தி இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்தனர். அதே பட்டை நேற்றைய ஆர்ப்பாட்டத்தின் போது "கட்டணம் கட்டாயம் வீழ வேண்டும்" என்று மாற்றப்பட்டு தூக்கிப் பிடிக்கப்பட்டிருந்தது.

தென்னாபிரிக்காவில் பல்கலைக்கழகங்களுக்கான கட்டணத்தை சூமா அரசு அண்மையில் அதிகரித்தது. இதனைத் தொடர்ந்து மாணவர்கள் இந்த அரசுக்கு எதிராகப் பெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

எனினும் தற்போது நடந்திருக்கும் போராட்டம், சூமா அரசின் பரந்தளவிலான ஊழல், அண்மையில் நடந்த மாணவர்களின் ஆர்ப்பாட்டம், தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸிற்குள் நடக்கும் பதவிப் போட்டி ஆகியவற்றின் வெளிப்பாடு என்று பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.

சூமா அரசு பல்கலைக்கழங்களின் கட்டணங்களை அதிகரித்தமை தமது பிள்ளைகளின் எதிர்காலத்தையே சூனியமாக்கியுள்ளது என்று பெரும்பாலான பெற்றோர் கருதுகின்றனர். நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தாய் ஒருவர் 1976களில் ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்ததற்குப் பின்னர் இப்போதே மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்கிறார். தனது பதின்ம வயதுப் பெண் பிள்ளையின் எதிர்காலம் கருதி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வது மிக முக்கியம் என்று அவர் தெரிவிக்கிறார்.

"இது ஒரு மிகப் பெரிய போராட்டத்திற்கான ஆரம்பம் என்று நினைக்கிறேன். 1976இல் எமது நண்பர்கள் குடும்பத்தினர் கொல்லப்பட்டதை எதிர்த்து ஏற்பட்ட எழுச்சியைப் போன்று" என்றார் லியாண்டா என்ற அந்தப் பெண்.

[illegible] யில் இருந்து அகற்றும் வல்லமையைக் கொண்டவையாக இல்லை என்று பிபிஸியின் செய்தியாளர் தெரிவிக்கின்றார். 2008ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் அப்போதைய அதிபர் தாபோ மேகேவை பதவி நீக்கம் செய்தது போலன்றி, தென்ஆபிரிக்க தேசிய காங்கிரஸில் சூமாவுக்கு இன்னமும் பலத்த ஆதரவு இருக்கின்றது என்கிறார் அவர்.

இந்த வாரத் தொடக்கத்தில்




> 1976இல் நடைபெற்ற நிறவெறி அரசுக்கு எதிரான பெரும் ஆர்ப்பாட்டங்களுக்குப் பின்னர் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற பெரும் ஆர்ப்பாட்டங்கள் இவை. சூமா ஒழி என்கிற குரலுடன் வேகம் பெற்றுள்ளது.

தொலைக்காட்சியில் தோன்றிய காங்கிரஸின் உயர் மட்டத் தலைவர்கள், எதிர்ப்புப் போராட்டங்களுக்கு மத்தியிலும் தமது ஆதரவு சூமாவுக்கு இருக்கிறது என்பதை பொது மக்களுக்கு அறிவித்தனர். இருப்பினும் காங்கிரஸிற்குள்ளும் குறிப்பிட்டளவு எதிர்ப்பு சூமாவுக்கு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

தலைநகர் ஜொகன்னஸ்பேர்க், பிறிட்டோறியா, கேப்டவுன் போன்ற இடங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை ஊழலுக்கு எதிராக ஒன்றிணையுங்கள் என்ற அமைப்பு ஒழுங்குபடுத்தியிருந்தது. பொது அமைப்புகளும் இதற்குத் தமது முழு ஆதரவை வழங்கின.

இது அரபு வசந்தத்தைப் போன்ற போராட்டமாக இல்லாமல் இருக் கலாம். ஆனால் இது பெருகி வரும் எதிர்ப்பின் அடையாளம்; அலட்சியப் படுத்த முடியாது என்கிறார்கள் அவதானிகள். (உ)

## வாட்ஸ்-ஆப்க்கு 48 மணி நேரத் தடை

பிரசிலில் வாட்ஸ்ஆப் மென்பொருளை 48 மணி நேரத்துக்கு தடை செய்யுமாறு தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு அந்த நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரபல செல்பேசி மென்பொருளான வாட்ஸ் -ஆப்க்கு எதிரான இந்தத் தடையைஅந்நாட்டு உச்ச நீதிமன்றமான சாபாலோ நேற்றுப் பிறப்பித்தது.

குற்றவியல் புலன்விசாரணைக்கு ஒத்துழைக்கக் கோரி பலமுறை அந்த நாட்டு அரசு கேட்டுக் கொண்டபோதிலும் அதனை ஏற்க வாட்ஸ் -ஆப் மறுத்து வந்ததால் இந்தத் தடை விதிக்கப் படுவதாக உத்தரவை வழங்கிய நீதிபதி தெரிவித்தார்.

பிரேசிலில் இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்படுவது முன் எப்போதும் இடம்பெற்றிராத ஒன்று என்பதால், இந்தத் தடை அந்த நாட்டு மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

குற்றவியல் புலன்விசாரணை நடந்து வருவதால், தடை பிறப்பிக்கக் காரணமான வழக்குக் குறித்து வெளிப்படுத்த முடியாது என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## பாதுகாப்புத் தொப்பி

ஸ்லோவாகியாவைச் சேர்ந்த சகோதரர்கள், மின்காந்த சமிக்ஞைகளில் இருந்து பாதுகாக்கும் தொப்பிகளை உருவாக்கி இருக்கிறார்கள். நம்மைச் சுற்றியுள்ள மின்காந்த அலைகளில் இருந்து நமது மூளையைப் பாதுகாப்பதற்கு இந்தத் தொப்பி பயன்படுகிறது.

## ஒபாமாவை வரவே[…] கியூபா அரசு தயா[…]

### தலையீடு மட்டும் கூடாதாம்

கியூபாவுக்கு வர அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா[…] அவரை வரவேற்க எங்கள் நாடு தயாராகவே உ[…] புதுப்பிக்கும் நோக்கத்தோடு அந்தப் பயணம் இரு[…] நாங்கள் என்றுமே வரவேற்போம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறது கியூபா. இது தெ[…] வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோஸ்பினா விட[…] வது:

கியூபாவுடனான உறவை புதுப்பித்துக்கொள்ள[…] ரிக்க அதிபர் ஒபாமா வரவேற்கப்படுகிறார். மாறாக[…] உள்நாட்டு விவகாரங்களில் குறுக்கிட்டு இடைய[…] செய்யாமல் இருப்பது நல்லது.

அண்மையில் ஊடகம் ஒன்றுக்குப் பேட்டி வழ[…] தான் விரைவில் கியூபா செல்லவுள்ளார் என்று[…] ணத்தில் தனக்கு நிறைய எதிர்பார்ப்புக[…] உள்ள[…] வித்திருந்தார்.

## எண்ணெய் வளத்து[…] லிபியா மீதும் ஐ.எஸ்[…]

### எச்சரிக்கிறது அமெரிக்[…]

வோஷிங்ரன், டிசெ. 18
சிரியாவில் உள்ள 80 வீதமான எண்ணெய் கிணறுகள் மற்றும் எரிவாயு நிலைகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இஸ்லாமிய அரசு எனப்படும் ஐ.எஸ். அமைப்பு, அதற்கு வெளியே லிபியா போன்ற நாடுகளில் பலவீனமான இடங்களில் உள்ள எண்ணெய் வயல்களையும் இலக்கு வைத்து நகர்கிறது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அமெரிக்க மூத்த அதிகாரி ஒருவர். வோஷிங்ரனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தனது பெயரை வெளியிடக் கூடாது என்ற நிபந்தனையுடன் பேசிய அவர், லிபியா மற்றும் சினாய் வளைகுடாப் பகுதிகள் உள்ளடங்கலாக இருக்கும் எண்ணெய்க் கிணறுகள், விநியோ கக் குழாய்கள், எண் ணெய் எடுத்துச் செல்லும் பார ஊர்திகள் செல்லும் பாதைகள், உட் கட்டமைப்புகள் என்பன தொடர்பில் அமெரிக்கா கவனமாக ஆராய்ந்து வருகிறது என்றார்.

"அவர்கள் லிபியாவிலும் வேறு இடங்களிலும் எண்ணெய் நிலைகளைத் தேடி வருகின்றனர். நாம் தயாராக இருக்க வேண்டும்" என்று தெரிவித்தார் அந்த அமெரிக்க அதிகாரி.

ஐ.எஸ். அமைப்பினர் ஏற்க[…]

னவே மாதம் […] மில்லியன் அ[…] பெறுமதியான[…] ணெய்யை ஏ[…] வருகின்றனர்[…] ரிக்கா மதிப்பி[…] ஐ.எஸ். அ[…] ணெய் வர்த்த[…] கும் திட்டத்தின்[…] அண்மையில்[…] ணெய் வாகன[…] இலக்கு வை[…] தாக்குதல் ந[…] கைய தாக்குத[…] களுடைய ஐ.எ[…]

> அ[…] லிபி[…] வேறு இ[…] லும் எண்[…] நிலைகளை[…] வருகின்ற[…] தயாராக […] இருக்கவே[…] என்று தெ[…] அந்த அ[…] அ[…]காரி.

களுக்கான [...] கிறது. அதே[…] களின் நடமாட்[…] டுப்படுத்தப்[…] றார் அந்த அ[…]

## கூகுளில் அ[…]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UTHAYAN.PRINT
UTHAYANPRINT

...ஏற்க
...ர்

...முடிவெடுத்தால் ...ளது. உறவை ...ந்தால் அவரை
...டார்பில் கியூப ...ல் தெரிவித்தா
...மட்டுமே அமெ ...அவர் எங்களது ...று , தலையீடு
...ங்கிய ஒபாமா, ...ம் அந்தப் பய ...என்றும் தெரி

...க்காக
... கண்

...ஒன்றுக்கு 40 ...அமெரிக்க டொலர் ... கச்சாய் எண் ...றுமதி செய்து ... என்று அமெ ...டுள்ளது. ...மப்பின் எண் ...த்தை நொறுக் ...ஒரு பகுதியாக, ... அதன் எண் ...தொடரணியை ...து அமெரிக்கா ...த்தியது. இத்த ...ல்களால், அவர் ...ஸ்) நடவடிக்கை

...ர்கள் ...பாவிலும் ...ங்களி ...னைய் ...ளத் தேடி ...னர். நாம் ...வண்டும்" ...ரிவித்தார் ...மரிக்க

...சலவு அதிகாரிக் ...நரத்தில் அவர் ...ம் பெரிதும் கட் ...கின்றது" என் ...கோரி. (உ–ரி4)



## ஏரிகளில் வெப்பம் அதிகரிப்பு சூழலுக்குப் பெரும் அச்சுறுத்து

உலகின் முக்கிய ஏரிகள் பருவ நிலை மாற்றம் காரணமாக அதிவேகமாக வெப்பமடைந்து வருவதால் சுற்றுச்சூழலும், நன்னீர் வரத்துகளும் பெரிய அளவில் அச்சுறுத்தலுக்குள்ளாகும் என்று ஆய்வில் தகவல் வெளியாகியுள்ளது.

6 கண்டங்களின் 236 ஏரிகள் இதற்காக கடந்த 25 ஆண்டுகளாக கண்காணிக்கப்பட்டு வந்துள்ளன. 236 ஏரிகளின் நன்னீர்தான் உலகின் பாதி நன்னீர் விநியோகத்தைத் தீர்மானிப்பவையாகும்.

ஒவ்வொரு பத்தாண்டுக் காலகட்டத்திலும் ஏரிகள் 0.34 டிகிரி செல்சியஸ் வெப்ப மடைந்து வருகின்றன. இதனால் நன்னீர் வரத்து மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அச்சுறுத்தப்பட்டுள்ளன என்று கனடா, டொரண்டோவில் உள்ள யார்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவரும் இந்த ஆய்வைத் தலைமையேற்று நடத்தியவருமான சப்னா சர்மா தெரிவித்தார்.

இதனால் குடிநீர் வரத்து பெரிய அளவில் பாதிக்கப்படும் என்றும் மீன்கள் மற்றும் பிற விலங்குகளின் வாழ்விடங்களும் பாதிப்புக்குள்ளாகும் என்றும் இந்த ஆய்வு எச்சரிக்கிறது. இந்த ரீதியில் ஏரிகள் வெப்பமடைவதால் தண்ணீரில் ஒட்சிசனை அழிக்கும் நீல–பச்சை பாசிப்படிவின் அளவு அடுத்த நூற்றாண்டில் 20% அதிகரிக்கப்போகிறது என்கிறது இந்த ஆய்வின் முடிவு. (உ)

# அகதிகளை ஏற்பதற்கு பிரிட்டிஷார் பின்னடிப்பு

## அகதிகளை வரவேற்கும் ஐரோப்பிய நாடுகளில் ஸ்பெயினே முன்னிலை என்கிறது ஆய்வு

லண்டன்.டிசெ.18


சிரியாவில் இருந்து வரும் அகதிகளை ஏற்பதற்கு ஐரோப்பிய நாடுகளிலேயே பிரிட்டன்தான் அதிகம் பின்னடிக்கிறது என்று ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

14 ஐரோப்பிய நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில் பிரித்தானிய நாட்டு மக்கள் 20 சதவீதமானோரே அகதிகளுடன் வீட்டைப் பகிர்ந்து கொள்ளும் திராணியுள்ளவர்கள் என்று அந்த ஆய்வு குறிப்பிடுகிறது. 80 சதவீதத்தினர் "அது முடியாது" என்றும் தெரிவித்துள்ளனர்.

அகதிகளை அதிகம் வரவேற்கும் நாடாக ஐரோப்பாவிலேயே ஸ்பெயின் தெரிவாகியுள்ளது. அந்த நாட்டவர்களில் 62 சதவீதமானோர் அகதிகளுக்கு தமது வீட்டில் இடம்கொடுக்கக் கூடியவர்கள் என்றும், ஜேர்மனியில் 48 சதவீதமானோர் இதற்குச் சம்மதிக்கிறார்கள் எனவும் ஆய்வில் அறியப்பட்டுள்ளது.

ஜேர்மனி இந்த வருடத்தில் 10 லட்சம் அகதிகளை ஏற்பதற்குத் தயார் என்று ஏற்கனவே அறிவித்துள்ளது.

ஓ.ஆர்.பி. எனும் சர்வதேச அமைப்பினரால் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் 13 ஆயிரத்து 800 பேரிடம் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட ஒவ்வொரு நாட்டிலும் ஆயிரம் பேரிடம் ஆய்வு நடத்தப்பட்டது.




ஐரோப்பிய ஒன்றியம் அகதிகள் விடயத்தில் இன்னமும் வினைத்திறனுடன் செயற்படுவதாக 57 சதவீதமானோர் நம்புகின்றனர். பிரிட்டனில் 40 சதவீதமானோர் அப்படி எண்ணுகின்றபோதும், 33 சதவீதமானோர் ஐரோப்பிய ஒன்றியம் சரியானதையே செய்கிறது எனவும், 27 சதவீதமானோர் குறைவாகச் செயற்படவேண்டும் எனவும் தெரிவிக்கின்றனர் என்கிறது ஆய்வு முடிவுகள்.

பொருளாதார அகதிகள் அரசுகளுக்கு ஒரு சுமை என்று பெரும்பாலான ஐரோப்பியர்கள் கருதுகின்றனர். அவர்கள் வேலைகளைச் சூறையாடி விடுவர் என்பதாலும், அகதிகளின் நலச் சேவைகளுக்கு அதிகம் செலவிடவேண்டியிருக்கும் என்பதாலும் அவர்கள் ஒரு சுமையாகவே இருப்பார்கள் என்று ஐரோப்பியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். 41 வீதமானோரோ அகதிகளின் கடின உழைப்பால் தமது நாடுகள் முன்னேற்றம் அடையும் என்று கருதுகின்றனர். (உ–ரி4)

# 4000 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்பு

பித்ஜண், டிசெ. 18

தென்ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட்டில் 2012 முதல் 2014 வரையில் கொக்கோ தோட்டத்தில் வேலை செய்த குழந்தைத் தொழிலாளர்கள் 4,000 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகக் கொக்கோ உற்பத்தியில் 35 சதவீதம் ஐவரிகோஸ்டிலேயே தயாராகிறது. இங்குள்ள கொக்கோத் தோட்டங்களில் குறைந்த கூலிக்கு குழந்தைத் தொழிலாளர்களே பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஐவரிகோஸ்ட் அரசு தற்போது தீவிரமான முயற்சிகளை எடுத்து வருகின்றது. சிறுவர்களை அடிமைகளாக அமர்த்தி, அவர்களின் உழைப்பைச் சுரண்டுவது குற்றம் என அறிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டுக்குள் நாட்டில் உள்ள குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை மூன்றில் ஒரு பங்காக குறைக்க அரசு திட்டமிட்டுள்ளது. 3 லட்சத்திலிருந்து 10 லட்சம் வரையான குழந்தைத் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர் என்கிறது சர்வதேச குழந்தை தொழிலாளர்களுக்கு எதிரான அமைப்பு.



2020ஆம் ஆண்டில் கொக்கோத் துறையில் பணியாற்றும் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை 70 சதவீதத்தால் குறைக்க திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், பாடசாலைகளை அமைக்கவும் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை சிறுவர்களைப் பாதுகாக்கவும், குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகவும் 20 மில்லியன் யூரோ செலவழிக்கப்படவுள்ளது என்று சர்வதேச கொக்கோ முன்னெடுப்பு என்கிற அமைப்பு தெரிவித்துள்ளது. இது குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான அமைப்பால் உருவாக்கப்பட்டது. (உ–ரி4)

# ஆலங்கட்டி மழையுடன் புயல்

ஆஸ்திரேலியாவின் தெற்கு சிட்னி நகரில் ஆலங்கட்டி மழையுடன் புயல் தாக்கியதில் அங்குள்ள மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மணிக்கு 213 கி.மீ. வேகத்தில் தாக்கிய புயலால் மரங்கள் வேரோடு சாய்ந்தன. கார்கள் மற்றும் வீடுகள் கடும் சேதம் அடைந்தன. தொடர்மழையால் நகரின் பல பகுதிகளிலுள்ள வீதிகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் அலுவலகங்களின் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதால் நகரின் பல பகுதிகள் இருளில் மூழ்கின.

# ...திகம் தேடப்பட்ட மனிதர் அப்துல் கலாம்



உலகின் முன்னணி தேடியந்திர தளமான கூகுளில், 2015ஆம் ஆண்டு அதிகம் தேடப்பட்டவை குறித்த வகைப் பட்டியலில், இந்தியாவின் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப் துல் கலாம், இரண்டு தலைப்புகளில் சிறப்பிடம் பெற்றுள்ளார்.

கூகுள் இந்தியாவில் அதிகம் தேடப்பட் டவை குறித்த வகைப்பட்டியலை வெளி யிட்டுள்ளது. அதிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத்தின் போக்குகள் (Trending) அடிப்படையில் அதிகம் தேடப்பட்டவைக்கான பட்டியலில், ஐசிசி கிரிக்கெட் உலகக் கோப்பை முதலிடத்திலும், பாகுபலி திரைப்படம் இரண்டாம் இடத்திலும், பஜ்ரங்கி பைஜான் படம் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

பொழுதுபோக்கு அம்சங்களே ஆதிக்கம் செலுத்தும் இந்தப் பட்டியலிலும், மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் இடம்பெற்றுள்ளார். அவர் ஆறாவது இடத்தில் இருப்பது கவனிக்கத்தக்கது.

கூகுள் இந்தியாவில் அதிகம் தேடப்பட்ட நபர்கள் பட்டியலில், 2014ஆம் ஆண்டைத் தொடர்ந்து இந்த ஆண்டும் ஆபாசப் பட நடிகை சன்னி லியோன் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவருக்கு அடுத்த இடத்தையே நடிகர் சல்மான் கான் பிடித்துள்ளார்.

இந்த ஆண்டு மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் பெயரை தட்டச்சுச் செய்து, கூகுள் இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் தேடியுள்ளனர். இதன் காரணமாக, கூகுள் இந்தியாவில் அதிகம் தேடப்பட்ட நபர்கள் பட்டியலில் அப்துல் கலாம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

நடிகைகள் கேத்ரீனா கைஃப், தீபிகா படுகோன், ஷாருக்கான் ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளனர். கடந்த ஆண்டு இரண்டாம் இடத்தில் இருந்த பிரதமர் நரேந்திர மோடி இம்முறை 10ஆம் இடத்தில் உள்ளார்.

2015இல் அதிகம் தேடப்பட்ட திரைப் படங்கள் பட்டியலில் பாகுபலி முதல் இடத்தில் உள்ளது. பஜ்ரங்கி பைஜான் இரண்டாம் இடத்திலும், பிரேம் ரத்தன் தான் பாயோ, ஏபிசிடி 2 ஆகியவை அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. தமிழ்ப் படங்களான 'ஐ' 5ஆம் இடத்திலும், 'புலி' 7ஆம் இடத்திலும் உள்ளன.

கூகுள் இந்தியா தேடலில் இந்த ஆண்டு 'அதிகம் தேடப்பட்ட செல்பேசி சாதனங்கள்' பட்டியலில் மைக்ரோமேக்ஸின் யூ யுரேகா (Yu Yureka) முதலித்தைப் பிடித்துள்ளது. அப்பிள் ஐபோன்–6, லெனோவா கே3 நோட், லெனோவா ஏ7000 ஆகியவை அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

இதேபோல், நுகர்வோரின் தொழில்நுட்பத் தேடல்களில் ஐபோன்–6 முதலிடத்தையும், சாம்சங் கேலக்ஸி எஸ்6 இரண்டாம் இடத்தையும், அப்பிள் வாட்ச் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளன.

இந்திய அளவில் அதிகம் தேடப்பட்ட விளையாட்டு வீரர்கள் பட்டியலில் விராட் கோக்லி முதலிடத்தில் உள்ளார். (உ)

# அஞ்சலி

பாகிஸ்தானின் பெஷாவர் இராணுவப் பள்ளியில் 136 மாணவர்கள் உள்பட 150 பேரின் உயிர்களைக் காவு கொண்ட தாக்குதலின் முதலாவது நினைவு தினம் அந்த நாடு முழுவதும் புதன்கிழமை கடைபிடிக்கப்பட்டது.

ஓராண்டுக்கு முன்னர் தலிபான்கள் நிகழ்த்திய அந்தத் தாக் குதலில் உயிரிழந்தவர்களின் படங்களை ஏந்தி, அவர் களது உறவினர்கள் பொவர் நகரில் ஊர்வலம் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் அரண் இறை சரணாகதி ஒன்றே

சாம் ரமேஷ்குமார்

ஒரு மனிதன் தனது எதிரியிடம் சரணடைவது இகழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். ஆனால் அந்த மனிதன் தன்னைப் படைத்த இறைவனிடம் சரணாகதியடைவதோ புகழ்ச்சிக்குரிய மாபெரும் வெற்றியாகும். இறை சரணாகதியே மானிட வாழ்வின் சகல சச்சரவுகளையும் சங்காரம் செய்ய வல்ல புனித இறை சாதனையாகும்.

இந்த உலகம் அழிவின் விளிம்பில் காத்துக்கிடக்க மனிதனோ அதைச் சற்றும் தன் அறிவுக்குள் உள்வாங்காமல் அகங்காரத்தின் உச்சியில் தினம்தோறும் சிம்மாசனம் போட்டு அமர்ந்து வருகின்றான். இயற்கை அழிவானாலும் சரி, செயற்கை அழிவானாலும் சரி மனிதனின் அகங்காரத்திலிருந்து வரும் எண்ணங்களின் அலைவரிசையில்தான் தங்கியுள்ளன. உலகத்தின் அல்லது ஒரு தேசத்தின் ஒழுங்கமைப்பு மனிதனின் நல்லெண்ணங்களால்தான் முழுமை பெறுகின்றது என்பதை ஒவ்வொரு மனிதனும் சுயமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட மேன்மையான சிந்தனைகள் இறைவனிடம் மனிதன் தன்னை பரிபூரணமாக ஒப்படைக்கின்றபோதுதான் அவன் இதயத்திலிருந்து பிரதிபலிக்கின்றது எனலாம்.

இயற்கையும் இறைவனும் ஒன்று. ஏனெனில் இறைவன் உருவமாகவும் அருவமாகவும் இருப்பவன். சில தருணங்களில் உருவம் அருவம் அற்றும் அருள் புரியக் கூடியவன். இயற்கை இறைவனின் சரீரமாகும். அதற்குள் மறைபொருளாக இருப்பதே பரமாத்மாவாகிய பரம்பொருளாகும். அதை அறிவுபூர்வமாக சிந்திக்காத மனிதன், இயற்கை தன் சொத்து என சொந்தம் கொண்டாடுகின்றான். இறைவனின் சரீரம் இறைவனுக்கே சொந்தமானது. அதைப் பங்குபோடும் அதிகாரம் எந்த மனிதனுக்கும் கிடையாது.



**இறைவனே ராஜா**

ஆனால் இயற்கைக்கு தானே ராஜாவென மனிதன் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்கின்றான். உண்மையில் ராஜா இறைவனொருவனே. மனிதன் இந்தத் தன்மையை உணர்வது தனது மரணத்தின்போது விடும் இறுதி மூச்சுக் காற்றினுடைய வெளியேற்றத்தின்போதே. மரணம் வரும்வரை தானே ராஜாவென மனிதன் தனக்குள் தம்பட்டமடிக்க முடியும். அதுவரை பூமித்தாய் பொறுமையாகவே சுழல்வாள்

மனித மனம் இறை சரணாகதிக்கு முழுக்குப்போட்டு விட்டு, அருளெனும் வசந்தத்தை தூக்கியெறிந்து விட்டு, வறட்சியைக் கண்டதால்தான் மனிதனுக்கு இயற்கையின் பசுமைத் தன்மை மீது இதுவரை ஆர்வம் பிறக்கவில்லை. அதனால்தான் மனிதன் தான் வாழ்வதற்கான போராட்டத்தில் இயற்கையின் வளங்களையும் சூறையாடுகின்றான். இதனால் சிறிது லாபத்தையும் அதிகமான இயற்கையின் சீற்றத்தையும் மனிதன் சந்திக்கின்றான். இறைவனின் படைப்புக்கள் தேவை, அந்தப் படைப்புக்களுக்கு உரித்தான இறைவன் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்து மனிதன் என்று மாறுகின்றானோ அன்றே இறை சரணாகதியின் வாசலை மனிதன் நெருங்கி விட்டான் என்று அர்த்தம்.

அன்றிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு இயற்கை இடர்களும் மனிதனுக்கு ஒவ்வொரு இறை பாடத்தைக் கற்றுத் தரு கின்றன. அது இறை சரணாகதியெனும் பாடமே. அண்மையில் தமிழகத்தில் கனமழை காரணமாக பெரிய வெள்ள இடர் ஏற்பட் டிருந்த நிலையில் மாமல்லபுரத்திலுள்ள தலசய பெருமாள் கோயில் குளத்தின் நீராழி மண்டபத்திலுள்ள விஷ்ணு சிலையும் கழுத்தளவு நீரில் மூழ்கியிருந்தது.

அந்த விஷ்ணு சிலை யின் உச்சி மீது ஒரு கருநாகம் தஞ்சம் புகுந்திருந்தது. அதுவும் காக்கும் இறைவனாகிய விஷ்ணுவிடமே சரணாகதியடைந்து இருந்தமை ஓர் அற்புதமே.

**இறை நம்பிக்கை**

தன்னைக் காப்பாற்றும் சக்தி இறைவனைத் தவிர வேறு எவருக்கும் இல்லையென அந்தக் கருநாகம் நினைத்திருக்கலாம். அதற்கு இருக்கும் இறை நம்பிக்கைகூட ஆறறிவுள்ள மனிதனுக்கு

> “உலகத்தின் அல்லது ஒரு தேசத்தின் ஒழுங்கமைப்பு, மனிதனின் நல்லெண் ணங் களால்தான் முழுமை பெறுகின்றது என்பதை ஒவ்வொரு மனிதனும் சுயமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.”

இருப்பதில்லை. அந்தப் பரமசிவன் கழுத்திலிருக்கும்பாம்புக்குஎன்றைக்குமே அழி வில்லை என்பதை மாமல்லபுரத்து கரு நாகம் விஷ்ணு சிலை மீது சரண் புகுந்து மீண்டும் நிரூபித்து இருக்கின்றது.

மனித இனத்தைக் காப்பாற்றும் அரண் இறை சரணாகதியே ஆகும். இறைவனைச் சரணடைந்தவன் இயற்கையை துன்புறுத்துவதில்லை. அந்த இயற்கையிடம் இருந்து மனிதனும் எதையும் இழப்பதில்லை. மனித மனம் இறை சரணாகதி ஒன்றையே இனி சரணங்களாக ஏற்க வேண்டும். அதுவே உலகுக்கும் மனிதனுக்கும் நன்மை பயக்கும்.

# எல்லா உலகமும் இறைவனின் படைப்பே ஆகும்

கிருஷ்ணராஜா சஞ்சீவன்

உலகத்தில் பூர்வீக ஆறறிவு படைத்த ஒரே ஒரு உயிரினம் மனிதன்தான். அந்த மனிதப் பிறப்பை எடுத்த எம் அனைவரினதும் இறுதி இலட்சியம் முத்தி அடைதல் எனக்கூறப்படும் பேரறிவு படைத்த பதியை அடைதலாகும். பதி எனப்படுவது கடவுள் எனப்படும். எம் சைவசமய கர்த்தா சிவனே. சிவனை அடிப்படையாகவைத்து அறுவகைச்சமயங்கள்தொழிற்படுகின்றன. சைவசமயம் எல்லா உலகமும் இறைவனால் படைக்கப்பட்டது எனும் படைப்புக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட சமயமாகும்.

**திருவிளையாடல்கள்**

பரம்பொருளான சிவன் எத்தனையோ விதமான திருவிளையாடல்களை அன்பர்களுக்காகச் செய்துள்ளார். திருவாதவூரருக்காக வைகை ஆற்றைப் பெருக்கெடுக்க வைப்பித்துப் பிட்டுக்கு மண் சுந்து பிரம்படிபட்டார். பின்னர் சுந்தரரின் திருமணத்தில் பித்தா எனப் பெயர் பெற்றார். இப்படி எத்தனையோ கூறலாம். இத்தகைய சிவன், பக்தர்களின் வேண்டுகோளுக்கு கட்டாயம் செவி சாய்ப்பார்.

சிவனுக்குப் பல விரதம் இருந்தாலும், அதில் மார்கழி மாதத்தில் அனுஷ்டிக்கப்படும் திருவெம்பாவை மிகச்சிறந்த ஒரு விரதமாகும். இந்தத் திருவெம்பாவை மாணிக்கவாசக சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டதாகும். தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் கொண்டு திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள அண்ணாமலையில் திருவெம்பாவை என்னும் அற்புதப் பாடலைப் பாடியருளினார். இந்தத் திருவெம்பாவை இருபது பாடலைக் கொண்டது. திருவெம்பாவையின் முதற்பாடல் ‘ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதியை யாம்பாடக் கேட்டேயும்’ எனத்தொடங்குகிறது.

**பக்திபூர்வமான விரதம்**

இந்தத் திருவெம்பாவை விரதம் பத்துத் தினங்கள் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது. சிவனை நினைத்து எவர் நன்றாக பக்தியுடன் பூசிக்கின்றாரோ அவருக்கு வீரமும், நல்ல காரிய சித்தியும், நல்ல கல்வியும் கிடைக்கும் என்பது திண்ணம்.

இந்தத் திருவெம்பாவையை, மணம் முடிக்காத இளம் மங்கையர் தமக்கு நல்ல மணவாளன் கிடைக்க வேண்டும் என்று வேண்டுகோளை முன்வைத்து அனுஷ்டிக்கின்றனர். சிவன் ஆதியும் அந்தமும் இல்லாதவர், அகிலத்தைக் காப்பவர். பல்வேறுபட்ட திருவிளையாடல்கள் மூலம் பல அன்பர்களை தன்வசப்படுத்தி வைத்திருப்ப வர். இன்னும் எத்தனையோ விடயங்களை எம் பரம்பொருளான சிவனைப் பற்றிக் கூறிக்கொண்டே போகலாம். ஆகவே எம் பிறவித்துன்பம் தீர ஈசனடி பணிந்து அவனை வழிபட்டு முத்தியின்பம் அடைவோமாக.

> “திருவாதவூரருக்காக வைகை ஆற்றைப் பெருக்கெடுக்க வைப்பித்துப் பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படிபட்டார். பின்னர் சுந்தரரின் திருமணத்தில் பித்தா எனப் பெயர் பெற்றார். இப்படி எத்தனையோ கூறலாம்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுத்துறைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள்

புகழ்



இன்று நவீன தொழில்நுட்பச் சாதனங்களின் வருகையும் அவற்றின் வளர்ச்சியும் உலகில் பல்வேறு விதமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இணையத்தளங்களின் வருகை, வளர்ச்சியின் பின்னர் அவை பெருந்தொகையான வாசகர்களை இணைய வாசகர்களாக தம்பால் ஈர்த்தன. உலக நடப்புகளை அறிந்து கொள்ளவும், தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும், பொழுது போக்காக வாசிப்பதற்கும், தேவையான தகவல்களை நேர விரயமின்றிப் பெறவும், வாசகர்கள் இணையத் தளங்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இது இன்றைய இயந்திரமயமான உலகுக்கு பெரு வரப்பிரசாதமாகும். இதனால் இணையத்தளங்கள் அதிகம் உருவானதுடன் இணைய எழுத்தாளர்களும் அதிக அளவில் உருப்பெற்றனர். அத்தோடு எழுத்தாளர்கள் பலரும் கால மாற்றங்களுக்கேற்ப தம்மை இணைய எழுத்தாளர் களாகவும் மாற்றிக் கொண்டனர். இதனால் மறுபுறத்தில் நூலகங்களின் முக்கியத்துவம் வலுவிழந்தது. அத்துடன் இலக்கியப் படைப்பாளர்கள் பலரும் தமது எழுத்தாக்கங்களைப் பத்திரிகைகளோடு நிறுத்திக் கொண்டனர். நூல்களை வாங்கிப் படிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்ததாலும், நூலகங்களின் முக்கியத்துவம் குறைந்ததாலும், இலக்கியம் சார்ந்த படைப்புக்களை நூல்களாக வெளியிடுவோர் எண்ணிக்கை குறைவடைந்தது.

### எண்ணிக்கையில் வீழ்ச்சி

ஒரு நூலை எழுதி கணினியில் நூல் வடிவமைப்புச்செய்து, பின்பு அதனை அச்சகங்களில் நூலாக்கி வெளியீடு செய்வதென்பது பெரும்பணச் செலவுடன் கூடிய ஒரு விடயமாகும். ஆனால் நூல்களின் விற்பனை மூலம் இந்தச் செலவுகளின் ஒரு பகுதியைக்கூட எழுத்தாளர்கள் அல்லது வெளியீட்டாளர்களால் பெறுவதென்பது பெரும் சவாலான விடயமாகவே உள்ளது. எனவே பலர் நூல்களை எழுதி வெளியிடுவதை நிறுத்திக் கொண்டுள்ளார்கள். அல்லது குறைத்துக் கொண்டுள்ளார்கள். இதனால் இலக்கியம் சார்ந்த படைப்புக்கள் வெளிவருவது வெகுவாகக் குறைந்துள்ளது. ஆனால் இலக்கியப் படைப்பாளர்களின் களமாக இணையத் தளங்கள் விளங்குவதால் இந்தப் பின்னடைவை அவை நிவர்த்தி செய்கின்றன. ஆனாலும் ஓர் இலக்கியப் படைப்பாளிக்கு தனது படைப்பை நூலாக வெளியிடுவதால் ஏற்படும் திருப்தி அவர்களுக்கான கௌரவம் இணையத் தளங்களினூடாகக் கிடைப்பதில்லை.

இலக்கியப் படைப் பாளர்களின் நிலை இவ் வாறிருக்க, பாடத்துணை நூல்கள், பயிற்சி நூல்கள், மாதிரி



வினாத் தாள்கள், ஆய்வுக் கட்டுரைகள் என்பவற்றை எழுதி வெளியீடு செய்யும் கல்வியியல் எழுத்தாளர்களின் நிலை மிக மோசமடைய ஆரம்பித்திருக்கின்றது.

இணையத்தளங்கள் இவர்களின் வெளியீடுகளைப் பாதிக்கவில்லை. மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளுக்கு நூல்களைத் தம்முடன் வைத்திருக்க வேண்டியுள்ளதால் அவற்றை வாங்க வேண்டிய தேவை அவர்களுக்குள்ளது. இதனால் நூல்களின் விற்பனை பாதிப்படையாமல் இருந்தது. இதனால் கல்வியியல் எழுத்தாளர்களும் வெளியீட்டாளர்களும் தமக்குரிய முக்கியத்துவத்தையும் கௌரவத்தையும் பெற்றதுடன், வெளியீடுகள் மூலம் சிறு இலாபத்தையும் பெற்றுக் கொண்டனர். இதனால் கல்வியியல் படைப்புக்கள் தாராளமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இன்று கல்வியில் எழுத்தாளர்களுக்கும் வெளியீட்டாளர்களுக்கும் அவர்களது முயற்சி பெரும்சவாலாக உருவெடுத்துள்ளது. நவீன போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரங்கள், நவீன இயந்திரங்கள் என்பவற்றின் மூலம் புத்தகப் பக்கங்களை ஸ்கான் செய்து பிரதியெடுப்பதால் விரைவாகவும் மலிவாகவும் பிரதியெடுக்க முடிகின்றது. எனவே புத்தகங்களைக் கடையில் வாங்கிப் படிப்பதைவிட போட்டோப் பிரதி எடுத் துப் படிக்கும் கலாசாரமொன்று எமது சமூகத்தில் உருவெடுக்க ஆரம்பித்துள்ளது. இது மிகவும் ஆபத்தான ஒரு கலாசாரமாகும். அதாவது எதிர்காலத்தில் கல்வியியல் எழுத்தாளர்களும் வெளியீட்டாளர்களும் தமது கல்விப் பணியைக் குறைத்துக் கொள்ளவோ அல்லது நிறுத்திக் கொள்ளவோ வேண்டி ஏற்படலாம்.

பெரும் நேரச் செலவு, பணச் செலவு செய்து வெளியிடப்பட்ட புத்தகங்கள் போட்டோப் பிரதியெடுத்துப் பயன்படுத்தப்பட்டால், அவை புத்தகக் கடைகளில் விற்பனையாகாது.

வருட முடிவில் அவை அனைத்தும் வெளியீட்டாளர்களுக்கே திருப்பி அனுப்பப்படும். இது வெளியீட்டாளர்களுக்கு பெரு நட்டம் ஏற்படுத்தும். எனவே வெளியீட்டாளர்கள் எதிர்காலத்தில் வெளியீடுகளை நிறுத்திக்கொள்வர். இதனால் எழுத்தாளர்கள் எழுதுவதை நிறுத்திக் கொள்வார்கள்.

இவ்வாறு நிகழ்ந்தால் அது எமது மாணவர்களின் கல்வியில் பெரு வீழ்ச்சியை ஏற்படுத்தும். தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தனியார் துறையினரின் பங்களிப்பை குறைத்துக்கூற முடியாது. காலம் காலமாக அவர்கள் பெரும்

> இணையத்தளங்கள் அதிகம் உருவானதுடன் இணைய எழுத்தாளர்களும் அதிகம் உருப்பெற்றனர். அத்தோடு எழுத்தாளர்கள் பலரும் கால மாற்றங்களுக்கேற்ப தம்மை இணைய எழுத்தாளர் களாகவும் மாற்றிக் கொண்டனர்.

பங்களிப்பை வழங்கி வருகின்றனர். 2014 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வடமாகாணம் ஒன்பதாவது இடத்திலேயே உள்ளது. தனது உரிமைகள், உன்னதங்கள், கலை, கலாசாரப் பண்பாடுகள் அனைத்தாலும் நலிவடைந்து வரும் எமது இனம் கல்வியிலும் நலிவடைந்து வருகின்றது என்பதையே 2014 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றுப் பகுப்பாய்வுகள் காட்டுகின்றன.

### சட்டவிரோத தொழில்கள்

இன்று எமது இனத்தைச் சார்ந்த சிலர் தமது வருவாய்க்காக நீதிக்குப் புறம்பான சட்டவிரோதமான பல தொழில்களை நாட்டத்துடன் செய்ய ஆரம்பித்துள்ளனர். அந்த வகையிலான ஓர் செயற்பாடே பதிப்புரிமைக்குரியவர்களின் அனுமதியின்றி அவர்களின் புத்தகங்களை முழுமையாகப் போட்டோப் பிரதியெடுத்தல். எனவே போட்டோப் பிரதியெடுப்பவர்களே சிந்தியுங்கள். நீங்கள் போட்டோப் பிரதி எடுப்பதன் மூலம் ஒரு சிறு இலாபமடைகின்றீர்கள். அதனைப் பெற்றுக்கொள்பவர்கள் புத்தகப் பெறுமதிக்கும் போட்டோப் பிரதியெடுக்கும் செலவுக்கும் இடையில் உள்ள ஒரு சிறிய தொகையை மீதப்படுத்துகின்றார்கள். இந்தச் சிறு தொகைப் பணத்துக்காக நீங்கள் [illegible]. இந்தச் செயலானது எமது எதிர்காலச் சந்ததியினரை எவ்வளவு தூரம் பாதிக்கின்றது எனச் சிந்தியுங்கள். ஒரு நூலை வெளியிடும்போது வெளியீட்டாளர்களுக்கு பல்வேறு செலவுகள் ஏற்படுகின்றன. எழுத்தாளர்களுக்கான கொடுப்பனவு, கணினியில் நூல் வடிவமைப்புச் செய்வதற்கான செலவு, அச்சகங்களில் அச்சுப் பதிப்பு செய்து நூலாக்குவதற்கான செலவு, இதைவிட விற்பனையாளர்களுக்கு வழங்கப்படும் விலைக்கழிவு. இவ்வளவு செலவுகளையும் கருத்திற்கொண்டே நூலொன்றுக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. ஆனால், போட்டோ பிரதியெடுப்பவர்கள் நூலொன்றை வெளியிடுவதற்கான செலவு, அதற்காக உழைத்தவர்களின் உழைப்பின் பெறுமதி எதைப்பற்றியும் சிந்திக்காமல் தமது சிறிய இலாபத்தை மட் டும் கருத்திற்கொண்டே இந்தச் செயலைப் புரிகின்றனர். பலர் இது தவறெனத் தெரிந்து செய்வதில்லை. இது தவறென எவரும் அவர்களுக்கு உணர்த்துவதும் இல்லை. எனவே இனிவரும் காலங்களில் இவ்வாறான செயல்களை நிறுத்திக் கொள்ளுங்கள். போட்டோ பிரதியெடுக்கும் கடைக்காரர்கள் மட்டும் தவறு செய்யவில்லை. போட்டோப் பிரதியெடுக்கச் செல்பவர்களும் தவறு செய்பவர்களே. ஆசிரியர்களின் பெரு முயற் சியின் பயனாகக் கிடைக்கும் புத்தகங்கள் உங்களுக்குத் தேவை. ஆனால் அவர்களின் உழைப்பை மதித்து புத்தகங்களை விலை கொடுத்து வாங்குவதற்கு மட்டும் உங்கள் மனதில் இடமில்லை. இது கவலைக்குரிய ஒரு விடயமாகும்.

### தண்டனைக்குரிய குற்றம்

இன்று சில நூல்களில் இந்தப் புத்தகத்தை போட்டோப் பிரதியெடுத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும் என்ற வாசகம் அச்சிடப்படுகின்றது. சிந்தித்துப் பாருங்கள். படிப்பதற்கென ஒருவர் புத்தகங்களைப் போட்டோப் பிரதியெடுக்கும்போது அவரையோ அல்லது அவருக்குப் போட்டோ பிரதி எடுத்துக் கொடுத்தவரையோ தண்டிப்பதென்பது எவ்வளவு மனக்கஷ்டமான விடயம். ஆனால் தற்போதைய நிலையில் வெளியீட்டாளர்களுக்கு இதைவிட வேறு வழியில்லை. எனவே சமூக நலன் கருதி நூல்களை உங்கள் பிள்ளைகளுக்குக் கடையில் வாங்கிக் கொடுங்கள். பதிப்புரிமைக்குரியவர்களின் அனுமதியின்றி அவர்களின் புத்தகங்களை போட்டோப்பிரதி எடுத்தல் தவறானது. எனவே போட்டோ பிரதி பண்ணும் கடைக்காரர்கள் புத்தகங்களை முழுமையாக போட்டோப்பிரதி செய்து கொள்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். இது சமூக நலன் கருதிய ஒரு வேண்டுகோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பே அதிர்ஷ்டம் தரும்

ஒரு விவசாயி வயது போய் விட்டதால்படுக்கையில்இருக்க வேண்டிய நிலையில் இருந் தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப் பதை பற்றி அவர் கவலையோடு இருந்தார். ஒரு நாள், அவர் தமது பிள் ளைகளை அருகில் அழைத்தார். தன்னு டைய நிலங்களை அவர்களுக்குப் பிரித் துக் கொடுத்தார். அது மட்டுமல்லாமல், அந்த நிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக் கொள்ளும்படி சொன்ன அவர் சில நாள்களில் இறந்து போனார்.



பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன்பின், அவர் குறிப்பிட்ட புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை. ஒருவேளை, அப்பா இரண்டு அடி என்று சொல்வதற்கு பதிலாக ஓரடி என்று சொல்லிவிட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டு அடிவரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது.

இவ்வளவு தூரம் வந்தபின் எப்படி விட முடியும் என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டு அடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே!

தகப்பனாரின் மீது வருத்தம் வந்தாலும், 'சரி.. தோண்டியது வீணாக வேண்டாம்' என்று எண்ணி அவர்கள் அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள். உழைப்பு வீண் போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை இலாபம். இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.

## மயிலே குயிலே



மயிலே, மயிலே ஆடிவா
மக்காச் சோளம் தருகிறேன்!
குயிலே, குயிலே பாடிவா
கொவ்வைப் பழங்கள் தருகிறேன்!

பச்சைக் கிளியே பறந்துவா
பழுத்த கொய்யா தருகிறேன்!
சிட்டுக் குருவி நடந்துவா
சட்டை போட்டு விடுகிறேன்!

ஓடைக் கொக்கு இங்கே வா
ஓடிப் பிடித்து ஆடலாம்!
மாடப் புறாவே இறங்கிவா
மடியில் குந்திப் பேசலாம்!

## விடுகதைகளும் விடைகளும்


1. அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான். அவன் யார்?
   பந்து
2. நனைந்தாலும் நடுங்கமாட்டான். அவன் யார்?
   குடை
3. அனலில் பிறப்பான், ஆகாயத்தில் பறப்பான். அவன் யார்?
   புகை
4. வயிற்றில் விரல் சுமப்பான், தலையில் கல் சுமப்பான். அவன் யார்?
   மோதிரம்
5. எட்டுக்கால் ஊன்றி இடமும், வலமுமாக வருவான் அவன் யார்?
   நண்டு
6. ஓடையில் நிற்கும் ஒற்றைக்காலனுக்கு ஒரே குறி உணவு. அவன் யார்?
   கொக்கு
7. ஒற்றைக்கால் பந்தலில் ஊரெல்லாம் தங்கலாம்.அது என்ன?
   ஆலமரம்
8. முரட்டு மனிதனுக்கு முப்பத்திரண்டு பேர் காவல். அது என்ன?
   நாக்கு
9. நடந்தால் நடக்கும், நின்றால் நிற்கும். அது என்ன?
   நிழல்
10. உயிரற்ற பறவை, ஊர் ஊராய்ப் பறக்கும் - அது என்ன?
   விமானம்

## பொது அறிவு

1. உலக இரத்த தான தினமாக கருதப்படும் நாள் எது?
   ஒக்ரோபர் 1.
2. மோப்ப சக்தியால் இரை தேடும் பறவை இனம் எது?
   கிவி.
3. போலியோ நோய் எதனால் ஏற்படுகிறது?
   வைரஸ்.
4. அகசிவப்பு கதிர்களை எது அதிகமாக ஈர்க்கும்?
   தண்ணீர்.
5. பயணித்த தூரத்தை அறிய வாகனங்களில் பயன்படுத்தப்படும் கருவி எது?
   ஓடோமீற்றர்.
6. உலகின் இரண்டாவது நீளமான கடற்கரையான மெரினாவை வடிவமைத்து பெயர் சூட்டியவர் யார்?
   கிரண்ட்டப்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1878 - கட்டார் நாட்டின் ஆட்சியாளர்களாகினர் அல்தானி குடும்பத்தவர்கள்.
1916 - உலக மகாயுத்தம் 33,7000, பேரின் இழப்புடன் எரிச்வொன் வோல்க்யான் தலைமையிலான ஜேர்மனியப் படைகள் பிரான்சால் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 'வேர்டன் சண்டை' முடிவுக்கு வந்தது.
1935 - லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பம்
1939 - உலக மகாயுத்தம் 2. 'ஹெலி கொலாண்ட பைற் எனப்படும் முதலாவது பிரமாண்ட விமானத் தாக்குதல் இடம்பெற்றது.
1956 - ஜப்பான் ஐ.நாவில் இணைவு
1958 - உலகின் முதலாவது தொடர்பாடல் விண்சாதனம் (சற்றலைற்) செயற்படத் தொடங்கியது.
1978 - டொமினிக்கன் ஐ.நாவில் இணைவு.
1989 - ஐரோப்பிய பொருளாதார சமூகமும் சோவியத் யூனியனும் வர்த்தக பொருளதார உடன்படிக்கையில் கைச்சாத்து.
2005- உதயன் செய்தியாளர் உட்பட 4 ஊடகவியலாளருக்குக் காயம். பரமேஸ்வராச் சந்தியில் சம்பவம்.
2005 - கிணற்றிலிருந்து சடலமாக எடுக்கப்பட்ட இளையதம்பி தர்ஷினியின் இறுதிச் சடங்கு. கடற்படையின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் புங்குடுதீவில் இடம்பெற்றது.
2009 - அகதிகள் சகலரும் சொந்த மண் மீண்டு வாழ வழி செய்யப்படும் என கண்டியில் தமது கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டு ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா உறுதியளிப்பு.
- ஏ-9 பாதையூடாக தனியார் பஸ்சேவை ஆரம்பம்.
2010 - இலங்கை போர்க் குற்ற ஆதாரங்களைப் பகிர்ந்து கொள்ள ஐ.நா. நிபுணர்குழு இலங்கை வரும் என ஐ.நா. தெரிவிப்பு.
2012 - உலகம் முழுவதும் 20 கோடிப் பேர் தொழிலுக்காக இடம்பெயர்வு. அவர்களில் 14லட்சம் பேர் இலங்கையா எனத் தெரிவிப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கையால் கொடுத்துவிட்டு மறு கையால் பறிக்கும் அரசு

போருக்குப் பிந்திய காலப்பகுதியில் சிறுபான்மைச் சமூகத்தினருக்கு எதிராக குரோதப் பேச்சு, வெறுப்புணர்வுக் கருத்துகள் அதிகரித்துவந்ததும், கடந்தாண்டு அளுத்கம கலவரத்துடன் முன்னெப்போதுமில்லாத வகையில் அது அபாயகரமான அளவுக்கு உச்சம் பெற்றதும், குரோதப் பேச்சு, வெறுப்புணர்வுக் கருத்துகளுக்கும் பரப்புரைகளுக்கும் எதிரான சட்டங்கள் பலப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தின. இது தொடர்பாக உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் தொடர்ச்சியான கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

இந்த நிலையில், இலங்கையில்குரோதப் பேச்சு, வெறுப்புணர்வுப் பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குற்றமாக அறிவிக்கும் புதிய சட்டத்திருத்த முன்வரைவுகளை அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவை மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை ஆகிய சட்டங்களில் புதிய திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு அரசு முன்வரைவுகளை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது.

இனமத சமூகங்களுக்கு எதிரான குரோதப் பேச்சு, வெறுப்புணர்வு கருத்துகளை வெளிப்படுத்தும் நபர்களுக்கு 2 ஆண்டு சிறைத்தண்டனை அளிக்கக்கூடிய விதத்தில் குற்றவியல் சட்டங்களில் திருத்தம் கொண்டுவருவதுதான் இந்தச் சட்டவரைவுகளின் நோக்கம்.

எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே சிறுபான்மையினருக்கு குறிப்பாக, முஸ்லிம்களுக்கு எதிராக தீவிர வெறுப்புணர்வுப் பரப்புரையை முடுக்கிவிட்டு அளுத்கம கலவரத்துக்கு வழிகோலிய கடும்போக்கு பௌத்தவாத அமைப்பான பொதுபலசேனா இதனை எதிர்த்துள்ளது. இந்தச் சட்டவரைவுகளில் உள்ள டக்கப்பட்டுள்ள சரத்துகள் காரணமாக எதிர்பாராத வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிவில் சமூக அமைப்புகள் உட்பட பல தரப்புகளிலிருந்தும் வலுவான எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.




அரசு புதிய திருத்தங்களின்மூலம் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது என்ற குற்றச்சாட்டுகள் ஏற் கனவே சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மத்தியிலிருந்து எழுந்துள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் உள்ள பிரிவுகளை அப்படியே இந்தப் புதிய சட்டங்களில் அரசு உள்ளடக்கியுள்ளதாகச் சிவில் சமூகத்தின் கூட்டறிக்கையில் கையொப்பமிட்டுள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான ஷ்ரீன் சரூர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தியே கடந்த காலங்களில் அரசியல் செயற்பாட்டாளர்களும், சிவில் உரிமைச் செயற்பாட்டாளர்களும், ஊடகவியலாளர்களும் அரசால் முடக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே கருத்தை முன்வைத்துள்ள தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, கடந்தகால அரசுகளால் இந்தச் சட்டத்தின் குறித்த பிரிவைப் பயன்படுத்திக் கடந்த காலங்களில் தமிழ், முஸ்லிம்கள் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் ஜே.எஸ்.திசநாயகத்துக்கு 20 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமையும், மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி கைதுசெய்யப்பட்டமையும் இதன் கீழே இடம்பெற்றதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நடவடிக்கைகள் கடந்த காலங்களில் சர்வதேச ரீதியில் கண்டனத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குற்றவியல் சட்டத்தின் ஒரு பிரிவாக குரோதப் பேச்சுக் குறித்த சட்டம் அறிமுகம் செய்யப்படுவதை வன்மையாக எதிர்ப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தவகையில் குரோதப் பேச்சுக் குறித்த சட்டத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்துக்கு இலங்கையும் இணை அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி சர்வதேச தரத்திலான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்று அறிமுகம் செய்யப்படவேண்டுமென தீர்மானத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில், கருத்து, பேச்சு மற்றும் பிரசுர சுதந்திரத்தை ஒடுக்கும் வகையில் அரசு குற்றவியல் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

அரசு ஒரு புறத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கப்போவதாக சர்வதேசத்திற்குக் காட்டிக்கொண்டு இன்னொரு புறத்தில் அந்தச் சட்டத்தின் பிரிவுகளை வேறுசட்டங்களில் உள்ளடக்க முயலுமாயின், அது நல்லாட்சி அரசின் மீதான நம்பிக்கைகளை ஆட்டங் காணச் செய்யும்.

# நல்லனவற்றைச் சிந்திப்போம்

## அவற்றைச் செயற்படுத்த முயற்சிப்போம்



■ நிலா

ஒவ்வொரு மனிதனிடத்தும் ஒவ்வொரு திறமை இயல்பாகப் படைக்கப்பட்டுள்ளது. ஆனால் சிலர் அதனைச் சரியாகப் பயன்படுத்துவதில்லை.சிலர் வசதி வாய்ப்புக்கள் கிடைத்தும் அதனை நழுவ விடுகின்றனர்.

ஒரு மனிதனின் மனதில் பல்லாயிரம் எண்ணங்கள் உருவாகும். அதில் தாழ்வு எண்ணங்கள், எதிர்மறை எண்ணங்கள், பல வீனமான எண்ணங்கள், முரட்டு எண்ணங்கள், அன்பு, தெய்வீகம் எனப் பல எண்ணங்களும் காணப்படுகின்றன.

மனோதத்துவ ஆராய்ச்சியின்படி ஒரு மனிதன் எதை நினைக்கிறானோ, அதுவாகவே தான் உருவாகிறான் என்பது கண்டறியப்பட்டிருக்கிறது. இதைத்தான் எமது முன்னோர்கள் விதைப்பதே முளைக்கும் என்றார்கள். நாம் நமது வாழ்க்கையில் உயர்ந்து ஒளி வீச எமது மனம்தான் ஆணிவேர். உயர்ந்த எண்ணங்களை விதைத்து வாழ்வில் உயர வேண்டும் என்று தன்னம்பிக்கையுடன் உழைத்தால் நிச்சயம் வெற்றிக் கோட்டையை அடையலாம். தவறான எண்ணங்களை மனது யோசித்தால் தவறான வழிகளைத்தான் அறிவு தரும்.

> நம் எண்ணங்கள் எப்பொழுதும் சுத்திகரிக்கப்பட்டு புனிதமாக இருக்க வேண்டும். எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டிருந்தால் ஆரோக்கியத்துக்கு நல்லது. எண்ணம் சுத்திகரிக்கப்பட்டிருந்தால் வாழ்விற்கு நல்லது.

எமது எண்ணங்கள் எப்பொழுதும் சுத்திகரிக்கப்பட்டு புனிதமாக இருக்க வேண்டும். எண்ணெய் சுத்திகரிக்கப்பட்டிருந்தால் ஆரோக்கியத்துக்கு நல்லது. எண்ணம் சுத்திகரிக்கப்பட்டிருந்தால் வாழ்வுக்கு நல்லது.

நீங்கள் ஒவ்வொருவரும் இரவும் பகலும் ஓடி ஓடி வேலை செய்து சொத்து, மாட மாளிகை, புது மொடலான வண்டி வாகனங்கள், பொன் பொருள் என வாழ்கையில்சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.நிலம் உள்ளவர்கள் நிலத்தைச் சுத்தம் செய்து உரமிட்டு நீர்பாய்ச்சி, பயிரிடுகிறார்கள். பலர் மனதை உழுது நல்லெண்ணங்களை விதைத்து, போட்டி, பொறாமை, புறம் பேசுதல், பிறருக்குக் கேடு விளைவித்தல் என்ற எண்ணங்களை களையெடுத்து உள்ளன்போடு பழகுதல், உண்மையாக உழைத்தல், எதையும் எதிர்பாராமல் உதவி புரிதல் என்ற பண்புகளுடன் வாழ்கிறார்கள். இப்படி வாழக்கூடியவர்கள் வாழ்க்கையில் எப்போதும் சந்தோசமாகவும் உற்சாகத்துடனும் வாழக் கற்றுக் கொள்கிறார்கள்.

எண்ணம் அணுகுண்டைவிட ஆற்றலுள்ளது என்று கூறினால் எத்தனை பேர் நம்புவீர்கள்? ஏனென்றால் அணுகுண்டைச் செய்யக்கூடிய ஆற்றல் உருவானதே எண்ணத்திலிருந்துதானே!மனம் எண்ணியதனால் தான் அறிவு செயல்பட்டு அணுகுண்டு உருவானது. ஓர் எண்ணத்தை நம்பிக்கையுடன் பல முறை மனதில் நினைத்தால், அது நல்லதோ, கெட்டதோ அது நடந்தே தீரும். ஆகையால் நல்லதும் கெட்டதும் நடப்பது நாம் எண்ணும் எண்ணங்களினால்தான் தங்கியுள்ளன. நீ எதை நினைக்கிறயோ அதுவாகவே மாறி விடுகிறாய் என்பதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். உங்கள் எண்ணம் உறுதியாக இருந்தால் இயற்கையே உங்களுக்கு உதவிக் கரம் நீட்டி உதவி புரியும் என்பது உறுதி.

எனவே நல்லனவற்றை எண்ணுவோம். அதனைச் செயல்படுத்த நாள்தோறும் முயற்சிப்போம். நலமாக வாழ்வோம்.

## எதிர்த்துப் போராடு பெண்ணே

வெறும் வெட்டிப்பேச்சுப் பேசி
நேரத்தை வீணடிக்காதே
பல சாதனைகள் படைத்திட
சாதுரியமாய் செயற்படு
சங்கடங்கள் வந்த போதும்
சலித்து விடாமல் போரிடு
எல்லைகளைத் தாண்டியே உன்
எண்ணம் ஏணிப்படிகளாய்
உயர்ந்திட
வீரியமாய் நடைபோட்டு
வெற்றிகள் பல குவித்திடு
நெஞ்சமதில் துணிவுடனே
நேர்மையுடன் வாழ்ந்து விடு
எந்தத் துயர் வரினும்
எதிர்த்துப் போராடு பெண்ணே!

நிஷி-ஏழாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 7 | | | | 8 | |
| | | | | | | 5 | 9 | 1 |
| | 6 | 2 | 8 | | 9 | | | |
| | | | | | 6 | | | |
| | | 8 | | 2 | | | | |
| | 5 | | | 1 | | | 3 | |
| | 9 | | 6 | 8 | | | | |
| | | 4 | | | | 3 | | |
| 2 | 3 | | 9 | | | 8 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 8 | 6 | 4 | 2 | 5 | 1 |
| 5 | 8 | 1 | 2 | 3 | 9 | 7 | 4 | 6 |
| 6 | 4 | 2 | 7 | 1 | 5 | 9 | 8 | 3 |
| 1 | 9 | 3 | 6 | 8 | 2 | 5 | 7 | 4 |
| 2 | 6 | 7 | 4 | 5 | 3 | 1 | 9 | 8 |
| 8 | 5 | 4 | 9 | 7 | 1 | 3 | 6 | 2 |
| 4 | 2 | 6 | 3 | 9 | 7 | 8 | 1 | 5 |
| 7 | 1 | 8 | 5 | 2 | 6 | 4 | 3 | 9 |
| 9 | 3 | 5 | 1 | 4 | 8 | 6 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட் டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.



# தனுஷ், த்ரிஷாவின் கொடி!

தனுஷ் நடித்த "தங்கமகன்" படம் வெளிவரவுள்ளது. பிரபு சாலமன் இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் பெயரிடப்படாத படத்தின் படப்பிடிப்பும் முடிந்து விட்டதாகக் கூறப்படுகிறது. இந்தப் படங்களைத் தொடர்ந்து தனுஷ், துரைசெந்தில்குமார் இயக்கும் படத்தில் நடிக்கிறார். இந்தப் படத்தில் தனுஷ் அண்ணன், தம்பி என இரட்டை வேடத்தில் நடிக்கிறார் என்றும், அண்ணன் பாத்திரத்துக்கு ஜோடியாக த்ரிஷா நடிக்கவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந் தன. இப்போது இந்தப் படம் சம்பந்தமாக நம்பத் தகுந்த வட்டாரத்திலிருந்து புதிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது. அதாவது இந்தப் படத்துக்கு –கொடி என்று டைட்டில் வைத்துள்ளார்களாம்! ஏற்கெனவே தனுஷ் நடித்த 4 படங்களுக்கு ரஜினி நடித்த படங்களின் தலைப்பை சூட்டியுள்ள நிலையில், ரஜினி நடித்த "கொடி பறக்குது" பட டைட்டிலுள்ள –கொடியைத் தனுஷின் புதிய படத்துக்கு தலைப் பாக்கியிருக்கிறார்கள்!. இந்தப் படம் தொடர்பில் அதிகாரபூர்வ அறிவிப்பும், படப்பிடிப்பு பற்றிய விவரமும் விரைவில் வெளிவரும்.




யாரிடம் வேண்டுமானாலும்
இறங்கி போங்கள்
ஆனால்
உங்களை வேண்டாம் என்று
ஒதுக்குபவர்களிடம் ஒரு
துளியேனும் இறங்கி போகாதீர்கள்.

பேஸ் புக்கில் பிடித்தவை...



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், இலாபம் உயரும். பெண்களுக்கு சகோதர வழியில் உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**இடபம்:** எதிலும் நேர்மையைப் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்திகரமாகும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள். பொழுது போக்கில் ஈடுபட்டு மகிழ்வீர்கள்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். இலாபம் கூடும். உறவினரால் உதவியுண்டு. நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கடகம்:** உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**சிங்கம்:** பிறர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். கணவன் மனைவி ஒற்றுமையுடன் இருப்பர். விருந்து விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**கன்னி:** குழப்பம் நீங்கி மனம் தெளிவு பெறும். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். உறவினர் கேட்ட உதவியைச் செய்து மகிழ்வீர்கள். வாகனப் பயணம் இனிதாக அமையும்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்ற வேண்டும். எதிர்பார்த்த நல்ல செய்தி தாமதமாகலாம்.

**விருச்சிகம்:** திட்டமிட்டுச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாற்றம் உருவாகும். ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வீர்கள்.

**தனுசு:** உறவினர்களின் வரவால் கலகலப்பு ஏற்படும். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் திருப்திகரமாகும். பெற்றோர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு பொறுப்பான பதவி கிடைக்கலாம்.

**மகரம்:** மற்றவரை விமர்சிப்பதைத் தவிர்க்கவும். தொழில், வியாபாரத்தில், நிர்வாகச் செலவு கூடும். இலாபம் சுமாராக இருக்கும். மனைவியின் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பது நல்லது. எதிர்பார்த்த நல்ல செய்தி வரும்.

**கும்பம்:** சமூக அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில், இலாபம் கூடும். பெண்கள் அழகுசாதனப் பொருள்கள் வாங்குவர். உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்:** நண்பரின் ஆலோசனை நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப பலன் கிடைக்கும். சிக்கனமாகச் செலவு செய்வீர்கள். வெளியூர்ப் பயணத் திட்டத்தில் மாறுதல் ஏற்படும்.

*Senthura @Senthur_Kumaran · Nov 30
ஆயிரம் உறவுகள் இருந்தாலும், ஒரு
பணத் தேவையில் எவருமற்ற
அனாதையாகத் தான் நிற்போம்...!
"உண்மையான வலிகளுடன்..."

shiyamala · Dec 1
தமிழ்–ல மன்னிப்பு கேக்கும் போது,
எவ்ளோ பெரிய தவறா இருந்தாலும்
மன்னிக்கவே தோன்றுகிறது...
தாய்மொழி–ல தாய் இருக்கா போல...

## காதல் சாரம்.

யாரை நீ காதலித்தாயோ
அவள் வேறொருவனை காதலித்தாள்
யாரை நீ காதலிக்கின்றாயோ
அவள் வேறொருவனைக் காதலிக்கின்றாள்
யாரை நீ காதலிப்பாயோ
அவளும் நாளை வேறொருவனைக் காதலிப்பாள்
உன்னுடைய எதை நீ இழந்தாய்
ஏன் நீ தாடி வளர்க்கின்றாய்
யாரை நீ கொண்டு வந்தாய்
அவளை நீ காதலிக்க
யாருக்கு உன் காதலைச் சொன்னாய்
அவள் உன்னைக் காதலிக்க
யார் உன்னைக் காதலித்தாள்
நீ மீண்டும் காதலிக்காமலிருக்க
காதலை எங்கிருந்து பெற்றாய்
அது இங்கேயே பெறப்பட்டது
யார் இன்று உன்னுடைய காதலியோ
அவள் நாளை மற்றொருவனுடையவளாகிறாள்
[illegible]
காதலின் சாரமும் ஆகும். .......

விமான நிலையத்துக்குப் பக்கத்தில் வியாபாரி ஒருவன் கடை போட்டு பரசூட்டுகளை விற்றுக் கொண்டிருந்தான்.
"ஸார்..! பரசூட்டுகளை வாங்கிட்டுப் போங்க! விமானம் திடீர்னு விபத்துல சிக்கும்போது கீழே குதிச்சு உயிர் பிழைக்கலாம் ஸார்....!"
ஒரு பயணி நின்றார்.
பரசூட் என்ன விலை?
இரண்டாயிரம் ரூபாய் ஸார்..
சரி...வாங்கிக்கிறேன். விமானம் விபத்துக்குள்ளாகி நான் பரசூட்டிலிருந்து குதிக்கும் போது அது ஒருவேளை விரியலைன்னா ....?
"பணம் வாபஸ் ஸார்"

படித்ததில் பிடித்தது

சிரிக்கலாம் வாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்


| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 | 500 |
| நண்டு | 250 | 500 | 300 | 300 | 200 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 600 | - |
| பாரை | 450 | 400 | - | 450 | 350 | 400 |
| சுறா | 500 | 500 | - | 550 | - | 350 |
| சீலா | 250 | 450 | 400 | 350 | 300 | 350 |
| விளை | 650 | 500 | 400 | 400 | 300 | 400 |
| மூரல் | 250 | 400 | 300 | 350 | 300 | - |
| கும்பிளா | 300 | 350 | 300 | 300 | 250 | 250 |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | - | - | - |
| ஓரா | 300 | 400 | 300 | - | - | - |
| திரளி | 200 | 250 | 100 | 100 | 100 | 300 |
| நகரை | 150 | 300 | 100 | 150 | - | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 100 | 150 | - |
| ஒட்டி | 200 | 250 | 200 | - | - | 250 |
| திருக்கை | 150 | 300 | - | 200 | 200 | - |
| பாலை | 350 | 250 | - | 250 | 250 | - |
| வாளை | 100 | 150 | 200 | 400 | 200 | 150 |
| கொய் | 100 | 150 | 80 | 400 | 100 | - |
| மதனம் | 150 | 300 | 300 | 250 | 300 | 250 |

# இது புதுசு

## ஆண்களுக்கான ரீ-சேர்ட்

ஆண்களுக்கான வடிவமைக்கப்பட்ட ஆடைகள் தற்பொழுது கடைகளில் கிடைக்கின்றன. விதம் விதமான ரீ-சேர்ட்டுகள் கடைகளை அலங்கரிக்கின்றன. நீண்ட நாள் பாவனையுடன், சிறந்த அலங்காரத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த வகை ரீ-சேர்ட்டுகள் 1,000 ரூபா முதல் 1,200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.





**நாளை**
மார்கழி -03
சனிக்கிழமை 19.12.2015
திதி: நவமி பி.இ.04.31
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.இ.08.33
ராகுகாலம்: 09.23-10.53 வரை
சுபநேரம்: 03.23- 04.53 வரை

## சமைப்போம் வாங்க



**வெண்டிக்காய்ப் பக்கோடா**

தேவையானவை:
வெண்டிக்காய் - கால் கிலோ
கடலை மா - 1 கப்
அரிசி மா - 2 கரண்டி
மிளகாய்ப் பொடி - 1 கரண்டி
எண்ணெய் - தேவையான அளவு
பெருங்காயம், உப்பு - தேவைக்கு அளவாக.

**செய்முறை:**
வெண்டிக்காயை நறுக்கி அதில் மா, உப்பு, பெருங்காயம், காரம் சேர்த்து நீர் தெளித்துப் பிசையவும். காய்ந்த எண்ணெயில் பொரித்தெடுக்கவும்.

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | – | 100 | 120 | 150 | 140 | 100 |
| கத்தரி | 150 | 160 | 160 | 200 | 160 | 200 | 120 |
| கரட் | 200 | 200 | 200–320 | 220 | 300 | 400 | 270 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 250 | 200 | 200–300 | 280 | 280 | 280 | 250 |
| பாகல் | 300 | 240 | 300 | 340 | 280 | – | 300 |
| கருணைக்கிழங்கு | 70 | 100 | 80 | 100 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 100 | 80 | 100 | 80 | 120 | 70 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 100 | 140 | 130 | 200 | 120 |
| பூசணி | 50 | 60 | 60 | 50 | 40 | 80 | 40 |
| தக்காளி | 200 | 200 | 160 | 220 | 180–200 | 240 | 200 |
| வாழைக்காய் | 60 | 80 | 40 | 60 | 60–70 | 80 | 40 |
| கீரை | 70 | – | 50 | 40 | 40 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 30 | 50 | 30 | 50 | 15 |
| பச்சை மிளகாய் | 800 | 650 | 700 | 700 | 800 | 900 | 800 |
| புடோல் | 120 | 120 | 100 | 120 | 100 | 180 | 120 |
| கோவா | 140 | 180 | 100 | 140 | 160 | 200 | 140 |
| வெண்டி | 140 | 130 | 120 | 120 | 120 | 160 | 120 |
| போஞ்சி | 300 | 280 | 240 | 280 | 240 | 240 | 250 |
| லீக்ஸ் | 200 | 180 | 200 | 200 | 160 | 240 | 160 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50–60 | 40 | 55–60 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 90 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 200 | 280 | 200 | 160 | 200 | 200 | 70 |
| வல்லாரை | 50 | 20 | 10 | 20 | 20 | 30 | 15 |
| கறிமிளகாய் | 300 | 380 | 300 | 360 | 400 | 400 | 350 |
| இராசவள்ளி | 250 | 150 | 250 | 200 | 160 | – | – |

# சமையலறைச் சுத்தம்

சமையல் அறை சுத்தமாக இருந்தால் மட்டுமே அங்கு சமைக்கப்படும் உணவும் சுத்தமாக இருக்கும்.

சமையல் அறையில் பாத்திரங்கள் கழுவும் "சிங்க்" எப்போதும் தண்ணீர் படும் இடம் என்பதால், பாசியும் அழுக்கும் படிந்திருக்கும். இதனால், ஒருவித நாற்றமும் கிளம்பும். இதைப் போக்க சிங்க் சுவர்களில், கிளீனரை ஊற்றி நன்றாகத் தேய்த்துக் கழுவவும். அதன் பின் ஒரு நாப்தலின் உருண்டையை சிங்கினுள் போட்டு வைத்தால் கரப்பான் போன்ற பூச்சித் தொல்லையைத் தவிர்க்க முடியும்.

சமையல் அறைக் குப்பைக் கூடையைச் சிங்குக்குக் கீழ் வைக்கலாம். மூடும் வசதியுடைய கூடை நல்லது. இந்தக் குப்பைக் கூடையில் இருந்து வெளிவரும் நாற்றத்தைத் தடுக்க ஒரு சிறிய கிண்ணத்தில் பேக்கிங் சோடாவைக் கொட்டி, கூடைக்குப் பக்கத்திலேயே வைப்பது பயன் தரும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பேக்கிங் சோடாவை மாற்றினால் போதுமானது.

பாத்திரம் துலக்கப் பயன்படுத்தும் ஸ்பான்ச், கிருமிகள் தங்கும் இடம். அதன் ஒரு சதுர இன்ச் பரப்பிலேயே லட்சத்துக்கும் மேற்பட்ட பக்ரீரியாக்கள் குடியிருக்கும். ஸ்பான்ச்சில் உள்ள ஈரப்பதத்தால் வயிற்றுப் போக்கு மற்றும் வயிற்று வலியை உருவாக்கும் கிருமிகள் அதில் உருவாகலாம். இதைத் தவிர்க்க, வாரம் ஒரு முறை இந்த ஸ்பான்ச்சை மாற்றிவிட வேண்டும். அல்லது ப்ளீச்சிங் தூள் கலந்த வெந்நீரில் 15 நிமிடங்கள் ஊற வைத்து அலசி எடுத்தால் கிருமிகள் ஒழிந்துவிடும்.



காஸ் அடுப்பை எண்ணெய்ப் பிசுக்கு இல்லாமல் சுத்தமாக வைத்திருப்பது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்.ஜி. சவுண்ட்பார்களை வாங்கி இசையை ரசியுங்கள்

உங்கள் தொலைகாட்சியின் ஒலியின்தரம்குறித்துஉங்களுக்குதிருப்தியில்லையா?உங்களுக்கு மிகவும் பிடித்தமான திரைப்படத்தை அதற்கேயுரிய ஒலிநயங்களுடன் உங்களால் பார்த்து இரசிக்க முடியவில்லையா?நீங்கள் எப்போதும் உங்களுக்குப் பிடித்தமான அலைவரிசைகள், தொடர் நாடகங்கள், விவரணச்சித்திரங்கள் போன்றவற்றை இன்னும் சற்றுச் சிறப்பாக, யதார்த்தபூர்வமான ஒலிகளுடன் பார்க்க விரும்புபவரா? நீங்கள் ஒரு முழுமையான ஒலிச் சாதனங்களை (சவுண்ட் சிஸ்டம்) வாங்கி உங்கள் தொலைக் காட்சியில் பொருத்தியுள்ள போதிலும் வயர்கள் உங்களுக்கு எரிச்சலூட்டுகின்றனவா?

> “எல் ஜி சவுண்ட்பார் வகைகள் அனைத்தும் அபான்சில் ஒரு வருட உத்தரவாதத்துடன் கிடைக்கின்றன. இலங்கையில் பொதுமக்களால்கொள்வனவு செய்ய கூடிய விலையில் காணப்படும் சவுண்ட்பார்களாக இவை கருதப்படுகின்றன.”

உண்மையில் உலகம் முழுவதிலும் உள்ள அநேகமான மக்கள் உங்களைப் போன்று அதிருப்தியடைந்துள்ளனர். இதற்கான தீர்வாகவே சவுண்ட் பார் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. தொலைக்காட்சிகளின் ஒலியை மேலும் தரமுயர்த்துவதே இதன் முக்கிய நோக்கம். பல சவுண்ட் பார்கள் தொலைக்காட்சியின் ஒலியை மிக உயர்ந்த அளவுக்கு கொண்டுசெல்வதன் மூலம் தொலைக் காட்சியின் ஒலியை வளப்படுத்துவதை செய்துள்ளபோதிலும், அவற்றால் நீண்ட காலத்திற்கு சிறந்த ஒலி மற்றும் யதார்த்தபூர்வமான ஒலி ஏற்பாடுகளைச் செய்து பாவனையாளர்களின் அபிமானத்தை பெறமுடியவில்லை. இந்த விடயத்திலேயே எல்.ஜியின் சவுண்ட்பார்கள் உதவியாக அமைகின்றன. அவைகள் வெறுமனே தொலைக்காட்சியின் ஒலியின் அளவை அதிகரிப்பதை மாத்திரம் செய்வதில்லை.

அவை அதிகமான சேவையை உங்களுக்கு வழங்குகின்றன. அவை உங்களுக்கு வளமான டிரெபில் முதல் பாஸ் வரையிலான முழுமையான ஒலி அனுபவங்களைப் பலதரப்பட்ட சனல்களை பயன்படுத்தி வழங்குகின்றன. சிறிய இட மொன்றுக்கு ஏற்ற பல ஸ்பீக்கர்களின் ஒலித் தெளிவை அவை உங்களுக்கு வழங்குகின்றன.

அபான்ஸ் எல்.ஜி, பல்தரப்பட்ட சவுண்ட்பார்களை உங்களுக்கு ஏற்ற விலைகளில் - உங்களால் கொள் வனவு செய்யக் கூடிய விலைகளில் இலங்கையில் வழங்குகின்றது. மேலும் எல்.ஜியின் சவுண்ட்பார்கள் பல தரப்பட்ட அம்சங்களுடன் காணப்படுகின்றன. எல்.ஜியின் சவுண்ட் பார்கள் பல விலைகளில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. லாஸ் 350 பி யின் விலை19.999 ரூபா. இது 2.1சனல்களுக்கான வாய்ப்புக்களையும் கொண்டுள் ளது. சப்வூவர்குறைந்தஅலைவரிசைஒலியை வெளிப்படுத்துகின்றது. இதன் மூலம் சிறந்த ஒலி அனுபவம் ஏற்படுகின்றது.மேலும் இது புளூத்டுத் வசதிகளையும் கொண்டுள்ளது.

எல்.ஏ 55ஓ.எச். நடுத்தர வகையிலான சவுண்ட்பார்,320 ஆர்.எம்.எஸ் ஒலித்திறனைக் கொண்டுள்ளது.இதிலும் 2.1சனல்கள் காணப்படுகின்றன,இது மிகவும் நவீன தோற்றத்துடன் காணப்படுகின்றது,உங்கள் வீடுகளின் நவீனகட்டுமானங்களுக்கு ஏற்றது. மேலும் சப்வூவரும் அதனுடன் காணப்படுகின்றது.

எல் ஜி சவுண்ட்பார் வகைகள் அனைத்தும் அபான்சில் ஒரு வருட உத்தரவாதத்துடன் கிடைக்கின்றன. இலங்கையில் பொதுமக்களால் கொள்வனவு செய்ய கூடிய விலையில் காணப்படும் சவுன்ட்பார்களாக இவை கருதப்படுகின்றன. மேலும் அபான்சில் 12 மாத வட்டியற்ற இலகுகட்டண முறைகாணப்படுகின்றது, பணம் செலுத்திக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட பண்டிகைக்கால விலைக்கழிவுகளும் உள்ளன.

ஆகவே, ஏன் தரமற்ற ஒலிகளால் தொடர்ந்தும் அதிருப்திய டைய வேண்டும். நீங்கள் நேரடியாக அரங்கொன்றில் இசை நிகழ்ச்சியை ரசிப்பதுபோன்று இசையை ரசியுங் கள். திரை யரங்குகளில் பார்ப்பது போல உங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள். இதனை இலகுவாகவும் தடையற்ற விதத்திலும் எல்.ஜி சவுண் பார்கள் வழங்கு கின்றன.

அபான்ஸ் காட்சியறைகளுக்கு விரையுங்கள். அங்கு பல்வேறு வகையிலான எல்.ஜி. சவுண்ட் பார்களை

**வணிகம்**

# எல்.பி.பினான்ஸின் தங்கப் பென்ரன்கள்

எல்.பி.பினான்ஸ் நிறுவனத்தின் தங்கக் கடன் பெற்றோரிடையே நடத்தப்பட்ட குலுக்கல் முறையிலான சீட்டிழுப்பில் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த இருவருக்குத் தங்கப் பென்ரன்கள் கிடைத்துள்ளன .

இவர்களுக்கான தங்கப் பென்ரன்கள் அண்மையில் சாவகச்சேரியில் உள்ள கிளை அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

சாவகச்சேரி கிளை தங்கக் கடன் பொறுப்பதிகாரி சதீஸ், பென்ரன்களை வழங்குவதையும், அருகில் யாழ். கிளை முகாமையாளர் ரவிராஜ், வடமாகாண தங்கக் கடன் மேற்பார்வையாளர் திவாகர் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



# நுட்பம்

## மார்ப் ஆராய்ச்சியில் நொக்கியா மும்முரம்

நொக்கியா கைபேசி நிறுவனம் தனது மார்ப் தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சியை முழு வீச்சில் முன்னெடுத்துள்ளது.

தற்காலத்தில் கைபேசி இல்லாதவர்கள் இல்லை என்றே கூறலாம். அந்தளவுக்கு கைபேசி மனிதர்களோடு பின்னிப் பிணைந்துள்ளது.

கைபேசிச் சந்தையைப் பொறுத்தவரையில் அன்ரோயிட் கைபேசிகள் சந்தையின் 81 சதவீதத்தை தன்னகத்தே கொண்டுள்ளன. அடுத்ததாக 12 சதவீத சந்தையை விண்டோஸ் கைபேசிகள் தன்னகத்தே கொண்டுள்ளன. 2019ஆம் ஆண்டில் விண்டோஸ் கைபேசிகளின் பாவனை அதிகரிக்கக் கூடும் என்று எதிர்ப்பார்க்கின்றது.

அதற்கு ஏற்றால் போல் நொக்கியா நிறுவனம் தனது ஆராய்ச்சிகளை முழு வேகத்தில் முடுக்கி விட்டது.

அது சரி, அது என்ன மார்ப் தொழில்நுட்பம்?

மார்ப் என்பது நானோ தொழில்நுட்பம் மூலம் செயற்படும் ஒரு கை மணிக்கூடு வடிவக் கைபேசியாகும். மார்ப் என்று பெயர் கொண்ட இந்த தொடுபேசி தொடர்பான ஆராய்ச்சியேலே நொக்கியா நிறுவனம் தற்போது முழுவீச்சில் இறங்கியுள்ளது.

மார்ப் தொழில்நுட்பத்தின் மூலம் பல்வேறு வசதிகளை தொடுபேசிகளில் புகுத்தமுடியும். அதாவது நமது தொடுபேசியை நினைத்த வடிவத்துக்கு அமைத்துக் கொள்ளலாம்.

வேண்டுமென்றால், மணிக்கூடாக எமது கையில் கட்டியும் பயன்படுத்தலாம். அதேபோல் தூசுகள் இருந்தால் தானாகவே சுத்தம் செய்துகொள்ளும் வசதியும் இதில் உண்டு. மின்னேற்ற வேண்டும் என்ற கவலையும் இல்லை. சூரிய ஒளியிலேயே மின்னேற்றம் செய்து கொள்ளும் வசதி இதில் உள்



ளது. இதை அணிகலனாகவும் அணிந்துகொள்ளலாம் என்பது கூடுதல் சிறப்பு.

இதே போன்று பல்வேறு வசதிகளும் இந்த மார்ப் தொழில்நுட்பத்தின் மூலம் பெறலாம். தற்போது இந்த தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

இந்த அனைத்து வசதிகளும் கொண்ட தொடுபேசி எமது கைகளில் தவழவேண்டுமென்றால் சில ஆண்டுகள் காத்திருக்கத்தான் வேண்டும்.

## முடிவை மாற்றிய மைக்ரோசொப்ட்

மைக்ரோசொப்ட் நிறுவனம் 'வன்ரைவ்' எனும் சேமிப்பு இடவசதியை வழங்கி வருகின்றமை நீங்கள் அறிந்ததே.

இதன்மூலம் பயனாளர்களுக்கு மைக்ரோசொப்ட் நிறுவனம் 15 ஜிபி இடவசதியை வழங்கி வந்தது. ஆயினும் அதனை 5 ஜிபியாகக் குறைக்கவுள்ளதாகக் கடந்த வாரம் அறிவிப்பொன்றை அந்த நிறுவனம் வெளியிட்டிருந்தது.

இதற்குப் பயனாளர்கள் தரப்பில் இருந்து கடும் அதிருப்தி வெளியாகியிருந்தது. அதையடுத்து தமது முடிவை மாற்றிக் கொண்டுள்ளது மைக்ரோசொப் நிறுவனம்.

நன்மதிப்பைப் பாதுகாக்கும் பொருட்டு மீண்டும் 15 ஜிபி இடவசதியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரம் - தலைமன்னார் பாலம் அமைப்பதில் அக்கறை

## இந்திய அமைச்சர் நிதின் கட்காரி தெரிவிப்பு

புதுடில்லி, டிசெ.18

இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கு பாலம் அமைப்பது தொடர்பான திட்டத்தில் இந்தியா கவனம் செலுத்தியிருப்பதாக, இந்தியமத்திய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதிப் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளை தரை வழிப் பாதை வழியாக இணைக்கும் திட்டங்களை இந்தியா நடைமுறைப் படுத்தி வருகிறது.

பங்களாதேஷ், பூட்டான், நேபாளம்ஆகியநாடுகளைஇணைத்து தரை வழிப்பாதை அமைப்பது போன்று, இலங்கைக்கும் கடலுக்கு அடியிலான சுரங்கம் மற்றும், கடலுக்கு மேலான பாலம் மூலம் தரைவழிப்பாதையை அமைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

24 ஆயிரம் கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ள இந்த திட்டத்துக்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்க தயாராக உள்ளது.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கஅண்மையில்புதுடில்லி வந்திருந்த போது, இந்த திட்டம் தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பேச்சுக்களை நடத்தினார்-என்றார். (த-வ-4)

---

### நல்லிணக்கத்துக்கு

செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானத்தில் 2009 மே மாதம் போர் முடிவுக்குக் கொண்டு வந்ததையடுத்து நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தை அடைவதற்காக இலங்கைக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம்பல்வேறுகாரணங்களால் இல்லாமல் போனது. இலங்கையர்களுக்கிடையே காலந் தாழ்த்தாமல் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது மிக அத்தியாவசிய கடமையாகும்.

அமைச்சரவை உள்ளிட்ட அரசின்பல்வேறுநிறுவனங்களூடாக நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற போதும் அந்தக் குழுக்களை இணைப்பதற்கான மையம் ஒன்று இல்லாத காரணத்தால் தீர்மானம் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் வீணான தாமதம் ஏற்படல், பணிகளை அதிகரித்தல் முதலான செயற்பாட்டு ரீதியான பிரச்சினைகள் ஏற்பட்டன.

இந்நிலையில், நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் கடப்பாடுடைய தீர்மானம், வேலைத்திட்டம், செயற்பாடுகளை பின் விளைவுமிக்கதாக செயற்படுத்துவதற்காக பொறுப்பேற்கக்கூடிய நல்லிணக்கப் பொறி முறையை செயற்படுத்துவதற்கான செயலகம் உடன்நடைமுறைக்குவரும் வகையில் பிரதமர் காரியாலயத்தில் நியமிக்கப்படவுள்ளது. இதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் கொண்டுவரப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

இந்தச்செயலகத்துக்கானபொறுப்பான விடயங்களாக,

நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பாக தேசிய ரீதியில் சம்பாசணைகளை ஒருங்கிணைத்தல்.

காணாமற்போனோர் தொடர்பான காரியாலயம், உண்மை, நல்லிணக்கம் மற்றும் மீள முரண்பாடு ஏற்படாதிருப்பதற்கான ஆணைக்குழு போன்ற நல்லிணக்கத்துக்கான பொறிமுறையை ஸ்தாபிப்பதற்கான உறுதியான காலவரையறையுடன் கூடிய திட்டமொன்றை உருவாக்குதல்.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட தேசிய நிறுவனங்களுடனும், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் காரியாலயம் போன்ற சர்வதேச நிறுவனங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தல்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளிட்ட ஏனைய ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றத்தை ஆராய்ந்து பார்த்தல் மற்றும் இணைத்தல்.

சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள் மற்றும் நிர்வாக மற்றும் நீதி மன்ற மறுசீரமைப்பை பலப்படுத்த மற்றும் கடப்பாடுடைய ஏனைய தேவைகளை தொடர்புபடுத்தல் என்பன இந்தச் செயலகத்துக்குப் பொறுப்பான விடயங்களாகும்.

அரசமைப்பு மறுசீரமைப்புக்காக மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிவதற்காக 24 பேர் கொண்ட நிபுணர் குழுவொன்றை நியமிக்க அரசு உத்தேசித்துள்ளது.

இதேவேளை, அரசமைப்பு மறுசீரமைப்புக்கான இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக நாடாளுமன்றத்தை அரசமைப்பு சபையாக மாற்றுவதற்கான பிரேரணை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் எதிர் வரும் ஜனவரி 9ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டாக்டர் ராஜித சேனாரத்னவால் மேற்கண்ட தகவல் வெளியிடப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்துவதற்காக 2015.11.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அரசமைப்பு மறுசீரமைப்புக்கான அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பு மறுசீரமைப்புக்காக மக்களின் அபிப்பிராயங்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடாக பெற்றுக்கொள்ளும் நோக்கில் குழுவொன்றை நியமிக்க அந்த அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது. மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 24 நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவானது 3 பேர் கொண்ட அணியாகப் பிரிந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கூட்டங்களை நடத்தி மக்கள் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பதை அமைச்சரவை பரிசீலனை செய்துள்ளது.

இதேவேளை, அரசமைப்பு மறுசீரமைப்புக்கான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்காக அரசமைப்பு சபையாக நாடாளுமன்றத்தைக் காட்டுவதற்கான பிரேரணை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 9ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கவுள்ளார். (த-சி)

### உள்ளூராட்சிச்

முடியும் - என்றார்.

இதே அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட ஆளுங்கட்சி உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தெரிவிக்கும் போது,

முன்னைய அரசில் மத்திய அமைச்சர், பிரதேச சபைக்கு வந்து ஒரு அதிகாரியின் கொலரைப் பிடித்து, கடிதம் எழுது என்று சொன்னதும் அந்த அதிகாரி குறித்த வேலையைச் செய்தார். நாங்கள் இப்போது அப்படிச் செய்வதில்லை. அவ்வாறு செய்வது ஜனநாயக ரீதியிலானதும் - மனிதாபிமான ரீதியிலானதும் சரியான வேலை இல்லை. இதனால்தான் என்னவோ, அதிகாரிகள் பலர் கொடுக்கும் வேலையை ஒழுங்காகச் செய்கின்றார்கள் இல்லை - என்றார். (த-ஜ-5-ரி5)

### நீண்டநேரம்

காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிய அமர்வு இரவு 8.20 மணி வரை சுமார் 10 மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெற்றது.

நேற்றைய அமர்வில் கல்வி மற்றும் விவசாய அமைச்சுக்கள் மீதான விவாதம் இடம்பெற்றது. வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகியுள்ள நிலையில் இவ்வாறு நீண்டநேர விவாதம் இடம் பெற்றமை இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

### சூளைமேடு

சென்னை மாவட்ட 4 ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடந்த நிலையில், 1993 ஆம் ஆண்டு டக்ளஸ் தேவானந்தா அங்கிருந்து தலைமறைவானார். இதனால், அவரைத் தேடப்படும் குற்றவாளியாக அறிவித்துப் பிணையில் வெளிவர முடியாத கைது ஆணையை நீதிமன்றம் பிறப்பித்தது.

இந்நிலையில், இந்தியாவுக்கு வந்தால் தனது உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்பதால் காணொளிக் காட்சி மூலம் நீதிமன்றில் முன்னிலையாக அனுமதிக்குமாறு கோரி டக்ளஸ் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதனைத் தொடர்ந்து, அவர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், காணொளிக் காட்சி மூலம் மனுதாரர் முன்னிலையாகலாம். நீதிமன்றம் உத்தரவிடின் நேரில் முன்னிலையாகவேண்டும். இதன் போது போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும்என உத்தரவிட்டது.

இந்நிலையில், சென்னை மாவட்ட 4 ஆவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில், டக்ளஸ் மீதான வழக்கைத் தனியாகப் பிரித்து விசாரிக்க உத்தரவிடவேண்டும் என்று பொலிஸாரால் கோரப்பட்டது.

இதன்படி குறித்த வழக்கில் தொடர்புடைய 18 சாட்சிகளும் அடுத்த ஆண்டு ஜனவரி 18 ஆம் திகதி நேரில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்புமாறு நீதிபதி சாந்தி உத்தரவிட்டார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (த-4)

### நிரந்தரத்

தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப் படுத்தப்பட்ட அமைச்சுகள் மீதான குழு நிலைவிவாதத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பல்லின சமூகமும் வாழும் ஒரு நாட்டில் தேசிய ஒருமைப்பாடு என்பது மிக முக்கியமானதாகும். இதை ஏற்படுத்துவதற்கு இதய சுத்தியுடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இன ஐக்கியத்தை ஏற்படுத்திய பிறகுதான் ஒரு நாடு அபிவிருத்தி பற்றி சிந்திக்கவேண்டும்.

வரலாறு ஒருமுறைதான் சந்தர்ப்பம் வழங்கும். அந்த வகையில் ஜே.ஆருக்கு அசுர பலம் காணப்பட்டது. ஆனால், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதேபோல் தான் மகிந்தவுக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருந்தது. அவரும் இதைச் செய்ய வில்லை. இனப்பிரச்சினைக்கு அவர் தீர்வை கண்டிருந்தால் இன்று வரலாற்று நாயகனாகியிருப்பார்.

தற்போதுமீண்டும்ஒருசந்தர்ப்பம் கிடைத்துள்ளது. கீரியும் பாம்பும் போல் இருந்த பிரதான இரு தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து அரசியல் தீர்வை வழங்கவேண்டும் - என்றார். (த-சி)

### குரோதக்

தில் சமர்ப்பித்திருந்தது.

இந்த திருத்தச் சட்ட வரைவு கருத்துச் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்றும், அடிப்படைச் சுதந்திரத்தைப் பறிக்கும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்படப் பல தரப்புக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

இந்தச்சட்டவரைவைஉடனடியாக விலக்கிக் கொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசிடம் கேட்டிருந்தது.

இந்த நிலையில், இந்தச் சட்ட வரைவை விலக்கிக் கொள்ள அரசு முடிவெடுத்துள்ளதாக அவைத் தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்துள்ளார். (த-வ)

### ஆட்சி

செல்லும் இந்த ஆண்டின் உலக நிகழ்வுகள் குறித்தும், புதிய ஆண்டை எதிர்கொள்வது குறித்தும், ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.

இதில், 2015 ஆம் ஆண்டை முக்கியத்துவமான ஆண்டு என சுட்டிக்காட்டியுள்ள அவர், திருப்பு முனைகளும் திகிலும் நிறைந்த ஆண்டுஎன்றும் வர்ணித்துள்ளார்.

2016ஆம் ஆண்டில் சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொள்ள கூட்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உலகின் பல்வேறு நாடுகளின் நிகழ்வுகளைப் பட்டியலிட்டுள்ள ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன், 2015ஆம் ஆண்டில், கடினமான சூழ்நிலைகளின் மத்தியிலும், இலங்கையிலும், நைஜீரியாவிலும் சுமுகமான அதிகார கைமாற்றமும், அரசியல் முன்னேற்றங்களும் ஏற்பட்டிருப்பது உற்சாகம் அளிப்பதாகவும் கூறியுள்ளார். (த-வ)

### அரசை

ஒத்துழைப்புகளை வழங்கி நாட்டை முன்கொண்டு செல்ல உதவுவது பெரும்பாலான நாடுகளின் அரசியல் நிகழ்ச்சித் திட்டமாக இருந்தபோதும், எமது நாட்டு அரசியலில் கடந்த பல தசாப்தங்களாக ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகளுக்குக் குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவர்களை விரட்டியடிப்பதற்கு சூழ்ச்சிகள் செய்யப்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தொழில் அமைச்சால் ஒழுங்கு செய்யப்பட்டசமூகஉரையாடலும் தொழில் நிலைய கூட்டுறவும் என்ற நாடளாவிய ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுக் கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய அரசு புதியதொரு தொலை நோக்குடன் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக முன்வைக்கும் திட்டங்களைக் குழப்பிவிடாது அதனை வெற்றிகொள்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குவது நாட்டுக்காகக் கடமைகளை மேற்கொள்ளும் அரச மற்றும் தனியார்துறையைச் சேர்ந்த சகலரினதும் பொறுப்பாகும்.

இந்த நாட்டின் உற்பத்தி நடவடிக்கைகளை எதிர்பார்க்கப்படும் மட்டத்தில் பேணுவதற்கு தொழில் தருநர், தொழிலாளர் இரு தரப்புக்குமிடையிலான உறவுகளும் தொழில் நிலைய அமைதியும் சிறப்பாக பேணப்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

அரசதுறையில் நிலவும் பிளவுகள் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும். அரச மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்கிடையே இருக்க வேண்டிய சகோதரத்துவத்தையும் நட்புறவையும் மேம்படுத்தி, சிறந்த சேவையை நாட்டுக்குப் பெற்றுக்கொடுக்க எல்லோரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார்.

2015 சமூக உரையாடலும் தொழில் நிலைய கூட்டுறவும் நாடளாவிய ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் ஜனாதிபதி இந்நிகழ்வில் வழங்கினார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னிப்பு கோருகின்றோம்

தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலி கிளையில் எம்மால் குறித்த தொகைப் பணம் எமது கணக்கில் வைப்பில் இட்டதாக நாம் தவறாக கூறியமையால் வங்கி முகாமையாளருக்கும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏற்பட்ட மன உளைச்சலுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றோம்.

(68009) **டாக்டர் ந. சிவராஜாவும் பாரியாரும்**



## அறிவித்தல்

### வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி.

2016 ஆம் ஆண்டுக்கான சபையின் நிகழ்ச்சித்திட்ட வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கமைய தயாரிக்கப்பட்டு 18.12.2015 ஆம் திகதி தொடக்கம் ஏழு (07) நாள்களுக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திலும், கனகராஜன் குளம், நெடுங்கேணி, நயினாமடு ஆகிய பொது நூலகத்திலும் அலுவலக நேரத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

**பா.பிரபாகரன் - செயலாளர்**
**வவுனியா வடக்கு பிரதேச சபை.** (c/15837)


# உள்ளூராட்சிச் செயலர்களை கட்டுப்படுத்த முடியவில்லை

*ஆளுங்கட்சி உறுப்பினர் அரியரட்ணம் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம்,டிசெ. 18
மத்திய அரசு எமது அதிகாரங்களைக் குறைப்பது தொடர்பில் நாம் பேசுகின்றோம். ஆனால், எங்களது அதிகாரங்களுக்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களையே கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே நாங்கள் இருந்து கொண்டிருக்கின்றோம் – இவ்வாறு வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் க.அரியரட்ணம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் வரவு–செலவுத் திட்டத்தில் முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதத்தில், உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் நூலகர் வெற்றிடத்துக்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. அதில் முறைகேடு இடம் பெற்றதாக முறைப்பாடு கிடைத்து, அது தொடர்பில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர், நேர்முகப் பரீட்சை விவரங்களை அனுப்பி வைக்குமாறு, குறித்த சபையின் செயலாளரிடம் கோரியிருந்தனர். ஆனால் இன்று வரையில் குறித்த சபையின் செயலாளர் அதனை வழங்கவில்லை.

சாவகச்சேரிப் பிரதேச சபையில் அலுவலக உதவியாளர் நேர்முகத் தேர்வில் மோசடி இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டு, அந்த நேர்முகத் தேர்வை மீள நடத்துமாறு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் பணித்தும் இன்று வரையில் அது நடக்கவேயில்லை.

இன்னொரு பிரதேச சபையின் செயலாளர், கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டத்தைச் செய்ய முற்பட்டிருக்கின்றார். 10 சனசமூக நிலையங்களின் தலைவர்களை அழைத்து குறித்த வேலைத் திட்டத்தைச் செய்யுமாறு நேரடியாகப் பணித்திருக்கின்றார். சனசமூக நிலையங்களின் தலைவர்களும் அதனை ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால் குறித்த சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தினர் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். அதனால் அந்த சனசமூக நிலையத்தினர் பின்னர் குறித்த வேலையைச் செய்யவில்லை. இதனையடுத்து, 8 சன சமூக நிலையங்களைக் கறுப்புப் பட்டியலில் இணைத்துள்ளதாக குறித்த பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதுதான் இன்று உள்ளூராட்சி மன்றங்களில் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது. உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களையே கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே நாங்கள் இருக்கின்றோம் – என்றார்.

இதே விவாதத்தில் ஆளுங்கட்சியின் மற்றொரு உறுப்பினரான பா.கஜதீபன் கருத்துத் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிச் சபைகள் சிறப்பாக இயங்கவில்லை. அவை சிறப்பாக செயற்படுத்தப்படும் பட்சத்தில் எமது மாகாண சபையைச் சிறப்பாக செயற்பட முடியும். பிரதேச சபைகளில் பல்வேறுபட்ட தேவைகள் உள்ள போதும் அவற்றைச் செயற்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. அங்கு தொழில் நுட்ப உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றது. தொழில் நுட்பத்துறை சார்ந்த பட்டதாரிகள் பலர் வேலைவாய்ப்பற்று இருக்கின்றனர். இவர்களை இந்தத் துறை சார்ந்து நியமிப்பதனூடாகப் பிரதேச சபைகளில் காணப்படும் தடங்கல்களை இலகுவாகத் தீர்க்க முடியும்.

சுற்றுலாத்துறை சார்ந்த விடயங்களில் மாகாண சபையின் அனுசரணையுடன், சுற்றுலாத்துறைமுன்னேற்றம் தொடர்பான நியதிச் சட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. எனினும் இது இன்னமும் சபையில் சமர்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவில்லை. அதுதொடர்பில் முதலமைச்சர் பதிலளிக்க வேண்டும் – என்றார்.

(க-ஐ-5-ரீ5)


**A/C Personal Class** English & Tamil Medium
**Biology Chemistry** Theory & 37 வருட Past Paper கற்பிக்கப்படும்.
**T.P.No: 076 654 1292**



SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 436
சீட்டிழுப்பு திகதி 2015.12.17

வெற்றி இலக்கங்கள்
09 20 56 68 H
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 40,322,960/=



ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1220
சீட்டிழுப்பு திகதி 2015.12.17
வெற்றி இலக்கங்கள்
19 32 56 57 X
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 37,104,720/=



## அந்தியேட்டி பிற்போடல்

வராம்பற்றை, கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திருமதி **மீனாட்சியம்மை சிவப்பிரகாசம்** அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. 20.12.2015 இல் நடைபெறவிருந்த இந் நிகழ்வு குறித்து பின்னர் அறியத்தரப்படும்.

**தகவல் : பொ.ஏகாம்பரநாதன்**
**கோப்பாய்.**
(68008)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 1947–05–10
மறைவு 2015.11.18

கடந்த 18.11.2015 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்
**நவரத்தினம் கனகம்மா**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (18.12.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர், யாழ் மாநகர சபை உத்தியோகத்தர்களுக்கும் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
கற்பகப் பிள்ளையார் வீதி, மகன் - பாஸ்கரன்
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (68010) (ராசன்)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 20 . 04 . 1949
மறைவு 18 . 11 . 2015



**அமரர் நவரெட்ணம் லோகேஸ்வரன்**

கடந்த 18.11.2015 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.12.2015) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று பின்னர் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் நாளை (19.12.2015) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

89/2 பலாலி றோட்,
கந்தர்மடம். **குடும்பத்தினர்.**



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1930 . 03 . 17
இறப்பு 2014 . 12 . 13



அமரர்
**இராமலிங்கம் முத்துக்குமாரசாமி**
*(இணுங்கித்தோட்ட கந்தசுவாமி கோயில் பரம்பரை தலைவர்)*
*திதி : 18.12.2015*

நினைவுகளின் சேமிப்பில்
நீக்கமற நிறைந்து நிற்கும்
உங்களின் உயிர்ப்பான பதிவுகள்....
எங்களோடு நீங்கள் வாழ்ந்த
வாழ்வு தந்த அனுபவங்கள் - இவை
தடுமாறாமல் நாம் தடம் பதிக்க
எம்மை உந்திச் செல்லும்....

உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்....

[illegible], மனைவி, பிள்ளைகள்,
கைதடி. மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(68006)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் கழிவகற்றலுக்கு உரிய செயற்திட்டம் தேவை

## *வடமாகாண உறுப்பினர் சிராய்வா சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம்,டிசெ.18

மன்னார் மாவட்டத்தில் திண்மக் கழிவகற்றல் மற்றும் மனிதக் கழிவகற்றல் பெரும் பிரச்சினையாக உள்ளன. இவற்றைக் கொட்டுவதற்குப் பொருத்தமான இடங்களும் இல்லை. இதற்கான வழிமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.

இவ்வாறு ஆளுங்கட்சியின் மன்னார் மாவட்ட உறுப்பினர் பிறிமூஸ் சிராய்வா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண வரவு-செலவுத் திட்டத்தில், முதலமைச்சரின் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கும்போது,

மாந்தைப் பிரதேச சபையை, மடு - மாந்தை என்று இரண்டு பிரதேச சபைகளாகப் பிரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதேவேளை மன்னாரில், அமைச்சர் ஒருவர் சவுதி அரேபியாவின் நிதியில் வீட்டுத் திட்டங்களை அமைத்துக் கொடுக்கவுள்ளார். இதற்குப் பிரதேச சபையால் எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை. பொருத்தமான இடத்தில் வீடுகள் அமைக்கப்படாததால் இப்போது கடல் சூழ்ந்த பிரதேசத்தில் அந்த வீடுகள் தனித் தீவு போல் காட்சியளிக்கின்றன.

இதேவேளை மன்னார் தீவில், தென்பகுதியைச் சேர்ந்தவர்கள் பெருமளவு காணிகளை வாங்கி உல்லாச விடுதிகளை அமைத்துள்ளனர். இதற்குப் பின்னால் உள்ள மறைமுகம் பற்றிய தகவலும் இல்லை-என்றார்.

(த-ஐ-5-ரி5)

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி நவரட்ணம்



மானிப்பாய் மூத்ததம்பி லேனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி நவரட்ணம் நேற்று (17.12.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் நவநீதன் (சுவிஸ்), நவரஞ்சன் (சுவிஸ்), நவஜீவன் (ஆசிரியர் - திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரி), சுபாங்கி (ஆசிரியை - மானிப்பாய் சோதி வேம்படி), சித்திராங்கி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ராதிகா, அனித்தா, யாழினி, மயூரன், முருகதாஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் சாகித்தியா, சோபி, சோய், சுவஸ்த்திகா, மதுசிகா, சந்தோஸ், மோகனவர்மன், அரிஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2015) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூத்ததம்பி லேன்,
மானிப்பாய்.

(68017)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசலட்சுமி நடராசா

தோற்றம் - *1943.11.23*
மறைவு - *2015.12.17*



அளவெட்டி மேற்கு, தம்பளாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி நடராசா நேற்று (17.12.2015) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் சின்னத்துரை, ஆறுமுகம், இராசமணி ஆகியோரின் பாசமிக சகோதரமும் சிறிகௌரி, சிறியோகநாயகி, விஜயலீலா ஆகியோரின் அன்புத்தாயாரும் சண்முகலிங்கம் (லிங்கன்), பரமேஸ்வரன் (முருகன்) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (2015.12.18) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(68014)

தகவல்: குடும்பத்தினர்.

### சண்முகம் குகதாசன்



கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் முதலியார் வளவு, இமையாணன், உடுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் குகதாசன் 16.12.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-சிவபாக்கியம் தம்பதியரின் மகனும், உடுப்பிட்டி காலஞ்சென்றவர்களான விநாயகலிங்கம்-சோதி தம்பதியரின் மருமகனும், தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் மனோகரன், காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் கௌரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மீராதேவி, சிறீதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, சிவதாசன், தர்மதாசன் மற்றும் ஜெயதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காசன் (கனடா) கபீஸ் (கனடா), லாருஜன், கனிஸ்கா, ஹேமிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.12.2015 புதன்கிழமை அவரின் இல்லதில் நடைபெற்று, பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குகதாசன் [illegible]
(மகன்-சின்னண்ணா) 0777879737

(68013) (10.17)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் யோகேஸ்வரன் (அப்பு அண்ணை)

*(முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், கட்டட பொருள் கூட்டுத்தாபனம் (B.M.C) - யாழ்ப்பாணம்)*



வட்டுகிழக்கு சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் யாழ் பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் யோகேஸ்வரன் 16.12.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - தங்கமுத்து தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற சின்னப்பா மற்றும் கனகம்மா, சிவபாக்கியம் (மலேசியா) ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும் தங்கராணியின் அன்புக்கணவரும் விஜித் (பிரதேச செயலகம் - நல்லூர்), அஜித் (கொமர்ஷல் வங்கி - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வரஞ்சிதன் (செல்வம்), தவராசா (கனடா) காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் கதிர்காமநாதன் (சிறீ), ஏகாந்தநாதன் (இராசன்), சுப்பிரமணியம் (மணியம்) ஆகியோரின் பிரியமுள்ள சகோதரனும் ஆனந்தநடராஜா, ரவிக்குமாரன், சிவகுமார் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் காலஞ்சென்ற தர்மராஜா (முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி) மற்றும் தவபாக்கியம் தில்லைநாதன், சிதம்பரநாதன், Dr.கணேசராஜா (கனடா), காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் புஷ்பராணி, பேரின்பநாயகம், வசந்தி சண்முகராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது பிறவுண் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.111, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(68007)

### திருமதி
### வள்ளியம்மை தில்லையம்பலம்

*(ஓய்வு பெற்ற உபதபால் அதிபர்)*



நெடுந்தீவு, நடுக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், 15/1, சிவப்பிரகாசம் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை - தில்லையம்பலம் (ஓய்வு பெற்ற உபதபால் அதிபர்) நேற்று (17.12.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகமுத்து தம்பதிகளின் மருமகளும் தில்லையம்பலம் (தலைவர் - கரமத்தை கந்தசுவாமி ஆலயம், உப தலைவர் - ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான சுப்பிரமணியம், தில்லையம்பலம், தம்பையா மற்றும் முத்துக்குமாரு ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்னப்பிள்ளையின் மைத்துனியும், சாரதாதேவி (கோட்டக் கல்விப் பணிப்பாளர் - நெடுந்தீவு), கங்காதரன் (லண்டன்), தயாநிதி (ஆசிரியர் - கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை), கிரிதரன் (முகாமைத்துவ உதவியாளர் - சங்கானை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் கிருஸ்ணதாஸ் (பதிவாளர்), உதயராணி (லண்டன்), தர்மரத்தினம் (ஆசிரியர் - உயரப்புலம் மெதடிஸ்ட் மிசன் வித்தியாலயம்), யோகலட்சுமி (திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேச செயலகம்) ஆகியோரின் மாமியாரும் ரமணன் - துஸ்யந்தி, ரதீபன், காயத்திரி - பிரகாஷ், கிருஸ்ணி, தர்சிகா, சர்மிலன், சுஜீவன், கிருஷாந், பரந்தகன், கிஸ்துகா, கிருஸ்துயா, பிரணவி, பைரவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமா வார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.12.2015 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 4641 123

15/1, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.

(68012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்டுகொள்ளப்படாத வற்சன்

சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்குப் பதிலாகத் தெரிவு செய்யப்பட்ட புனே, ராஜ்கோட் அணிகள் தமது முதல் 5 வீரர்களுக்கான தெரிவில் வற்சனைக் கண்டுகொள்ளாதமை ஐ.பி.எல். ரசிகர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டதன் பின்னர்- புனே, ராஜ்கோட் அணிகள் பதில் அணிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. இந்த இரு அணிகளும் சென்னை, ராஜஸ்தான் அணிகளில் இடம்பிடித்த வீரர்களில் தலா ஐவரை கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவு செய்தன. ஏனைய வீரர்கள் அடுத்த வருடம் ஏலத்தில் விடப்படுகின்றனர். புனே, ராஜ்கோட் அணிகளின் தெரிவுக் குழுவினர் ஆஸ்திரேலியாவின் சகலதுறைவீரரான வற்சனைக் கண்டு கொள்ளவில்லை. ராஜஸ்தான் அணியின் தலைவராக சில காலம் செயற்பட்ட வற்சனை புதிய அணிகள் தெரிவுசெய்யாதமை ரசிகர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம)

## மத்தியூஸுக்குப் பின்னடைவு

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான துடுப்பாட்டத் தரவரிசையில் மத்தியூஸ் ஒரு இடம் பின்தங்கி 7ஆவது இடத்தில் உள்ளார்.



சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலை நேற்று வெளியிட்டது. இதில் இலங்கை அணியின் தலைவரும், சகலதுறை வீரருமான மத்தியூஸ் துடுப்பாட்டத்தில் 7ஆவது இடத்துக்கு பின்தங்கியுள்ளார். இங்கிலாந்து வீரர் ரூட் முதலிடத்தைப் பிடித்துள்ளார். தென்னாபிரிக்க வீரர் வில்லியர்ஸ் ஒரு இடம் முன்னேறி 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். நியூசிலாந்து வீரர் வில்லியம்சன் ஒரு இடம் முன்னேறி 3ஆவது இடத்தை பிடித்துள்ளார். முதலிடத்தில் நீடித்து வந்த ஆஸ்திரேலிய அணியின் தலைவரான சிமித் 4ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளார். முதல் பத்து இடங்களுக்குள் இந்திய வீரர்கள் எவரும் இல்லை. (ம)

# துடுப்பாட்டத்தில் அசத்துவார் ரூட்; அலிஸ்டர் நம்பிக்கை தெரிவிப்பு



தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ரூட் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடுவார் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் இங்கிலாந்தின் தலைவரான அலிஸ்டர் குக்.

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரும், ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரும், 3 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரும் நடைபெறவுள்ளன. இந்தத் தொடரில் கலந்து கொள்ளவுள்ள இங்கிலாந்து அணி தற்பொழுது தென்னாபிரிக்காவுக்கு சென்றுள்ளது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் டிசெம்பர் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்த நிலையில் டெஸ்ட் ஆட்டங்களில் ரூட் அசத்துவார் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் குக்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடர் தொடர்பாக குக் தெரிவிக்கையில்; "தென்னாபிரிக்கா மிகப்பலமான அணி. அன்னிய மண்களிலேயே அந்த அணியை தோற்கடிப்பது கடினம். சொந்த மண்ணில் தென்னாபிரிக்கா மேலும் பலமாக இருக்கும். எமது அணியில் ரூட்டின் துடுப்பாட்டம் தென்னாபிரிக்காவுக்குச் சவாலாக அமையும். ஏனெனில் ஏனைய வீரர்களில் இருந்து மாறுபட்டவர் ரூட். அத்துடன் தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் ரூட் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். அவர் சிறப்பான நிலையில் உள்ளார். நிச்சயம் முன்வரிசையைப் பலப்படுத்துவார். ஏதேனும் இரு இணைப்பாட்டம் பலமாக அமைந்து விட்டால்போதும் தென்னாபிரிக்காவை வீழ்திவிட முடியும். ஆடுகளங்கள் பொதுவாக வேகத்துக்கு சாதகமாக அமையும் என எதிர்பார்க்கிறேன்-" என்றார். (ம)

# செல்சிக்கு மீண்டும் அடி



இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் லெய்செஸ்டர் அணியிடம் செல்சி அணி தோல்வியடைந்துள்ளது.

ஆட்டத்தின் 34ஆவது நிமிடத்திலேயே லெய்செஸ்டர் அணியின் ஜெர்மி முதல் கோலைப் பதிவுசெய்தார். இரண்டாவது பாதியின் 48ஆவது நிமிடத்தில் ரியாட் மஹ்ரேஸ் மற்றுமொரு கோலை அடிக்க, லெய்செஸ்டர் அணி 2:0 என்ற முன்னிலை வகிக்கத் தொடங்கியது. பதில்கோலை பதிவு செய்ய முனைப்புக் காட்டிய செல்சி 65ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவு செய்தது. மேலதிக கோல்கள் பதியப்படாத நிலையில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது லெய்செஸ்டர் அணி. (ம)

## ரி-20 உலகக்கிண்ணத்தை குறிவைக்கும் ஆஸ்திரேலியா

அடுத்த வருடம் ரி-20 உலகக்கிண்ணப் போட்டிகள் இந்தியாவில் நடைபெறவுள்ள நிலையில் கிண்ணத்தைக்கைப்பற்றுவதற்கான தீவிர முயற்சிகளில் தற்பொழுதிருந்தே ஈடுபட ஆரம்பித்துள்ளது ஆஸ்திரேலியா.

இந்திய ஆடுகளங்களைப் பற்றி தெளிவு பெறும் விதமாக, இந்திய அணியின் முன்னாள் வீரர் சிறிதரன் சிறிராமின் உதவியை நாடியுள்ளது ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை. இதற்கான ஒப்பந்தத்தில் சிறிதரன் கையொப்பம் இட்டுள்ளார். ஆஸ்திரேலிய 'ஏ' அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது ஆஸ்திரேலிய 'ஏ' அணிக்கும் அவர் உதவி செய்துள்



ளார். இந்த நிலையில் இந்தியாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணப் போட்டிகளில் ஆஸ் திரேலிய அணிக்கு பல ஆலோசனைகளை அவர் வழங்கவிருக் கிறார். ஐ.பி.எல். தொடர்களில் விளையாடி அனுபவம் பெற்ற ஹசியும், ஆஸ்திரேலிய அணிக்கு உலகக்கிண்ணத் தொடரில் ஆலோசகராகச் செயற்படவுள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

# தீவிர பயிற்சியில் தீவுகள் என்கிறார் தலைவர் கோல்டர்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தை எதிர்கொள்ள கடுமையான பயிற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார் மேற்கிந்தியத் தீவுகளின் தலைவரான கோல்டர்.

> முதல் டெஸ்ட் முடிவடைந்த பின்னர் இரண்டாவது டெஸ்ட் ஆரம்பமாவதற்கு கிட்டத்தட்ட 12 நாள்கள் இடைவெளி உள்ளது.

ஆஸ்திரேலியா மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா இன்னிங்ஸால் வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி அரம்பமாகிறது. இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்ள தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார் தீவுகளின் தலைவரான கோல்டர்.



இரண்டாவது டெஸ்ட் தொடர்பாக கோல்டர் தெரிவிக்கையில்; "முதலாவது டெஸ்டில் எமது தோல்வியை வைத்து தொடரைத் தீர்மானிக்க முனைவது தவறு. எமது அணி இளம் வீரர்களைக் கொண்ட பலமான அணி. முதல் டெஸ்ட் முடிவடைந்த பின்னர் இரண்டாவது டெஸ்ட் ஆரம்பமாவதற்கு கிட்டத்தட்ட 12 நாள்கள் இடைவெளி உள்ளது. இந்த மிகப் பெரும் கால அவகாசம் மெல்போர்ண் ஆடுகளத்தைப் பற்றிய (இரண்டாவது டெஸ்ட் நடைபெறவுள்ள ஆடுகளம்) அறிதலுக்கு உதவியாக அமையும். அடுத்த ஆட்டத்தில் ஆஸியை வீழ்த்துவதற்கு தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறோம். திட்டங்கள் பயனளித்தால் நிச்சயம் ஆஸ்திரேலியாவைத் தோற்கடிப்போம்-" என்றார். (ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயமன்ஸ் அணி இறுதி ஆட்டத்துக்குத் தகுதி

## கலைமதியின் தொடரில் நவஜீவன்ஸை வீழ்த்தி



கரணவாய், டிசெ. 18
இறுதிவரை பரபரப்பாக அமைந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தைவீழ்த்திஇறுதிஆட்டத்துக்குத் தகுதி பெற்றது வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம்.
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின.
ஆட்டத்தின் முதல் பத்து நிமிடத்துக்குள் டயமன்ஸ் அணியின் துசி தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த சில நிமிடங்களில் துசியால் மற்றுமொரு கோல் பதியப்பட டயமன்ஸ்பலமான ஆதிக்கம்செலுத்த ஆரம்பித்தது. வேறெந்த கோல்களும் பதியப்படாத நிலையில் முடிவடைந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியில் வெற்றியை உறுதி செய்யும் முனைப்பில் டயமன்ஸ் அணியும், பழிதீர்த்தே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் நவஜீவன்ஸ் அணியும் முனைப்புக் காட்ட ஆட்டத்தில் அனல் பறந்தது. அதற்கேற்ப விதிமுறை மீறல்களும் தாராளமாக இடம்பெற்றன. இரண்டாம் பாதியில்மட்டும்டயமன்ஸ்அணியைச் சேர்ந்த 4 வீரர்களும் நவஜீவன்ஸ் அணியின் ஒருவருமாக மொத்தம் 5 வீரர்கள் நடுவரால் மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டனர். கோல்கணக்கில் மாற்றம் ஏற்படவில்லை. முடிவில் 2:0 என்று வெற்றிபெற்றது டயமன்ஸ் அணி, இந்தத் தொடரில் யங் கம்பன்ஸ் அணி ஏற்கனவே இறுதி ஆட்டத்துக்குததகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-108)



# ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இடம்பெறுவேன் என்கிறார் யுசுப்

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியில் தமக்கு இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளதாகத் தெரிவித்துள்ளார் சகலதுறை வீரரான யுசுப் பதான்.
இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டுள்ள 33 வயதான சகலதுறை வீரரான யுசுப் பதான் வழங்கிய நேர் காணலில் -இந்த வருடம் உள்ளூர் தொடர்களில் எனது திறமையைச் சிறப்பாக நிரூபித்துள்ளேன். குறிப்பாக ராஞ்சித் தொடரில் ஒரு சகலதுறை வீரராக சிறப்பாகச் செயல்பட்டேன். அடுத்த வருடம் ரி-20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணியில் இடம்பிடிப்பதே எனது இலக்கு. உள்ளூர் ஆட்டங்களில் சிறப்பாகச் செயல்பட்டால் தேசிய அணியில் இடம்பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு மிகையாகவே உள்ளது-என்றார். (ம)

# விக்னேஸ்வரா, ஞானமுருகன் அணிகளுக்கு இலகு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 18
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் சென்.மைக்கல் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணி மோதிக் கொண்டது. இதில் புத்தூர் விக்னேஸ்வரா அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதிக் கொண்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம23)

# பருத்தித்துறை லீக்கின் கால்பந்தாட்ட முடிவுகள்

கரணவாய், டிசெ. 18
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே 5 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடர் ஒன்றை முன்னெடுத்து வருகிறது. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள்.
வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும், மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகமும் மோதின. பலத்த போராட்டத்தின் பின் சென். சேவியர் அணி 1:0 என்ற கோல் கணக்கில்வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும்,வல்வைவிளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டம் முழுவதும்இருஅணியினராலும் கோல்களைப் பதிவு செய்து கொள்ள முடியவில்லை. இதனால் வெற்றியாளரை சமனிலை தவிர்ப்பு உதைமூலம் தெரிவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் 3:2 என்று சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.
மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து, திக்கம் இளைஞர் அணி மோதிக் கொண்டது. இதில் திக்கம் இளைஞர் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-108-23)

# இன்றைய மோதல்கள்

*றோயல் வி.கழகத் தொடர்*
ஊரெழுறோயல்விளையாட்டுக் கழகம், வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணா ஸ்ரார் அணியை எதிர்த்து திருக்குமரன் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜேம்ஸ் அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது.
*எவ்.ஏ. கிண்ணத்தொடர்*
இலங்கை காற்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான தொடரில், வவுனியா மாவட்ட கால்பந்தாட்ட லீக் கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்றுவெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுனிபைட் அணியை எதிர்த்து அல்மாதர் அணி மோதவுள்ளது. (ம-23)

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இந்திய அணி நாளை தெரிவு

இந்திய - ஆஸ்திரேலிய அணி களுக்கு இடையிலான தொடர் ஜனவரியில் ஆரம்பமாகவுள்ள நிலையில், குறித்த தொடருக் கான இந்திய அணி நாளை தெரிவுசெய்யப்படும் என்று அறிவித்துள்ளது இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டுச்சபை.
அடுத்த மாதம் ஆஸ்திரே லியாவுக்குப் பயணம் மேற் கொண்டு 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும், 3 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரிலும், இந்த அணி பங்கேற்கிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணி நாளை தெரிவுசெய்யப்பட வுள்ளது. யுவராஜ்தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வரும் நிலையில் இந்தத் தொடரிலாவது அவர் மீளவும் திரும்புவாரா என எதிர்பார்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY JAFFNA.

**2018 A/L**
ENGLISH MEDIUM
MAT & BIO

PHYSICS
MR.S.SOTHILINGAM
MR.K.SELVAN

CHEMISTRY
MR.N.MAHESWARAN
MR.G.BENO

BIOLOGY
MR.T.THAMBIRAJA
OUR USUAL TEACHER

COM.MATHS
MR.S.SIVAKARAN

COMMENCES ON:21.12.2015
9.30 A.M

**CHEMISTRY**
DIAS B.Sc(Hons.)Spl.in Chem
A/L 2017
வாயுக்கள்
திங்கள், புதன், வெள்ளி 09.30 – 11.30a.m
NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.
NEW SCIENCE WORLD
NAVALAR ROAD-BROWN ROAD JUNCTION, JAFFNA
TP -077 336 4055
E-mail - info@physicsocean.com
Web - www.physicsocean.com

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
திறந்த பல்கலைக்கழக சட்டமாணி தேர்வுக்கு
பிரதி ரவி பி.ப. 1.00 மணி
ஆசிரியர் தேர்வுக்கு
பிரதி ஞாயிறு 10.00 மணி
அலுவலக பணியாளர்
பிரதி ஞாயிறு ஒரு மணி
T.P: 0766 883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். நகர்

**NEW SCIENCE WORLD**
Navalar Road-Brown Road Junction
Jaffna.
T.P: 077 336 4055

**A/L 2018** கணித, உயிரியல் பிரிவுகள்

பௌதிகவியல்
R.குமரன் (தமிழ், English Medium)
R.சுகன்

இரசாயனவியல்
டயஸ் (தமிழ், English Medium)
K.T.சிவகுமார்

உயிரியல்
S.பொன்திவாகரன்
V.உமாசங்கர் (தமிழ், English Medium)

இணைந்தகணிதம்
S.S.செந்தில்ராஜ் (தமிழ், English Medium)

ஆரம்பம்: 21.12.2015 (திங்கள்)
சுபநேரம் காலை 7.00 மணி

2018 விஞ்ஞானபிரிவு மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் அன்றைய தினம் காலை 7.30-8.30 வரை நடைபெறும். மாணவர்களின் நலன் கருதி பெற்றோர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்.

அடிப்படையில் இருந்து என்ஜினியரிங் கற்கைநெறிகள் வரை புதிய பிரிவுகள் ஆரம்பம்
Ms Office, Web design, DTP, AutoCAD, Mobile Repairing, CCTV Installation
Engineering(Hardware / Network / Software / Web), MCSE,CCNA, Keyboard-Organ
பதிவுகளுக்கு முந்துங்கள்
கல்வியங்காட்டு சந்தியில் **MCAI CAMPUS**
www.mcai.edu.lk Phone : 775520940, 212219464
10% Discount All Credit Card Payment
MCAI Campus


**31ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



தோற்றம் 09.08.1953
மறைவு 19.11.2015

கடந்த 19.11.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
**சுவாமிநாதபிள்ளை இராசமனோகரன்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (19.12.2015) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"ஸ்ரீபதி"
இணுவில் தெற்கு, இணுவில்.
குடும்பத்தினர்.


**சுந்தர்சன்**
நிறுவனத்தின்
மாபெரும் மலிவு விற்பனை



19.12.2015 முதல் 25.12.2015 வரை
இத்தினத்தில் ரூபா 10,000 இற்கு மேல் கொள்வனவு செய்யும் அதிஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 40 பேருக்கு ரூபா 175,000 பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்
யாழ் வீதி, மானிப்பாய்

**NEW SCIENCE HALL**
KANNATHIDDY JAFFNA.

**2018 A/L** கணித, உயிரியல் பிரிவு

ஆரம்பம்
21.12.2015
காலை 9.30 AM



CHEMISTRY
திரு.K.சிவத்திரன் + திரு.S.T.உமாசங்கர்
திரு.G. BENO + திரு.T.சுசாந்தன்
திரு.N.மகேஸ்வரன்
திரு.J.ரஞ்சித்காந்

BIOLOGY
திரு.T.தம்பிராஜா
திரு.T.கெங்காதரன்
வழமையான ஆசிரியர்

COM. MATHS
திரு.P.செந்தில்நாதன்
திரு.S.சிவகரன்

PHYSICS
திரு.S.சோதிலிங்கம்
திரு.G.பிரபா
திரு.N.கபிலன்
திரு.K.செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.